# இலங்கையில்
# தமிழ்ப் பண்பாடு



க. த. திருநாவுக்கரசு

256652.

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | — | ILANGAIYIL THAMIZHPPANPADU |
| Author | — | K.D THIRUNAVUKKARASU |
| Language | — | Tamil |
| Edition | — | First., July, 1978 |
| Copy right holder | — | K. D. Thirunavukkarasu |
| Paper used | — | 11. 6 Kg White Printing |
| Size of the book | — | 18×12 5 c m. |
| Printing points used | — | 10 pt |
| No. of pages | — | 228+4 |
| No. of copies printed | — | 1200 |
| Printer | — | Prabu Printing House, Madras-17 |
| Binding | — | Card Board Binding |
| Price | — | Rs. 10-00 |
| Publisher | — | Saker Pathippagam, Madras-83 |
| Subject | — | Cultural Histoty |
| Call Number | — | Y 73 (P 31). 4498 N 78 |

256652
4080/78
2

ILANKAIYIL
TAMILP PANPATU

# இலங்கையில்
# தமிழ்ப் பண்பாடு

திருக்குறள்மணி

**க. த. திருநாவுக்கரசு**

M.A. (தமிழ்); M.A. (வரலாறு); M.LITT;
இணைப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

TIRUNAVUKKARACU
(Ka Ta)
2632
3 DEC 1978

**சேகர் பதிப்பகம்**
புத்தகம் வெளியிடுவோர்—விற்பனையாளர்
66, பெரியார் தெரு, எம். ஜி. ஆர். நகர்,
சென்னை-600 083.

## நூல் உருவாக்கியோர்


| | |
|---|---|
| ஆசிரியர் | க. த. திருநாவுக்கரசு |
| முகப்பு ஓவியம் | கவிஞர் அமுதோன் |
| பிளாக் செய்தவர் | தணிகாசலம் |
| அச்சகம் | பிரபு பிரிண்டிங் ஹவுஸ், சென்னை-17. |
| அச்சுக்கோப்பு | பி. எஸ். குப்புசாமி |
| கட்டுக் கோப்பு | இராமநாதன் |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |

# முன்னுரை

தமிழகமும் ஸ்ரீலங்காவும் மிக நெருக்கமான அண்டை நாடுகள். பன்னெடுங் காலமாக அவற்றிடையே அரசியல் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் நின்று நிலவி வருகின்றன. விடுதலைக்குப் பிறகு அரசியல் தொடர்பு அறுந்து விட்டது. எனினும், பண்பாட்டுத் தொடர்பு ஆற்றல் மிக்கதாக விளங்கி வருகிறது.

இலங்கையில் கணிசமான அளவிற்குத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்நாட்டைப் பொன் கொழிக்கும் வளநாடாக ஆக்கியவர்கள் தமிழர்கள்! இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை! இலங்கைத் தமிழரின் இன்றைய அவல நிலையை எண்ணுகின்ற பொழுது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின், 'நீரோடை நிலங்கிழிக்க நெடு மரங்கள் நிறைந்து பெருங்காடாக்க...' எனும் பாடலே நினைவிற்கு வருகிறது.

இத்தகைய 'திருநாட்டிற்கும் தமிழகத்திற்கும் இருந்து வரும் தொடர்பும் உறவும் எத்தகையது?' என்பதைக் கோடி காட்ட இந்நூல் முயலுகிறது. அரசியல் வரலாற்றுப் பின்னணியில், பண்பாட்டு உறவு பெற்ற பெருவாழ்வை இந்நூலில் காணலாம்.

1960-62ஆம் ஆண்டுகளில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் யானும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எனது நண்பரும், ஆறு மாதங்களுக்கு முன்னர் எதிர்பாரா வகையில் இறந்துவிட்ட இலங்கைத் தமிழ் அறிஞருமான டாக்டர் S. தனஞ்சய ராஜசிங்கமும் ஆராய்ச்சி மாணவர்களாகப் பயின்றோம். அப்பொழுது என்னுடைய 'தமிழர் நாகரிக வரலாறு' எனும் நூலைக் கண்ட நண்பர் திரு. சிங்கம், 'தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்துவரும் தொடர்பினை' விளக்கும் வகையில், நூல் ஒன்றினை எழுது

23 DEC 78

மாறு என்னைத் தூண்டினார்; இலங்கை வரலாறு பற்றிப் பல நூல்களை, இலங்கையிலிருந்து கொண்டு வந்து கொடுத்துதவினார். அன்பரின் தூண்டுதலால், 1962 அளவில் 120 பக்க அளவில் இந்நூல் உருவாயிற்று. அக்கையெழுத்துப் படியைப் படித்துப் பல அறிவுரைகளை அவர் வழங்கினார்.

பின்னர், 1962 ஏப்ரலில், சென்னை மாநிலக் கல்லூரியில் பணிபுரிய வந்து சேர்ந்தேன். அங்குத் திரு கே. பரமசாமி எனும் யாழ்ப்பாண மாணவர் எனக்கு நண்பரானார். அவர், என் கையெழுத்துச் சுவடியைப் படித்துப் பார்த்து, அதை, இலங்கையில் வெளியிட ஏற்பாடு செய்தார். 'சிற்பி' (சி. சரவணபவன்) எனும் புனைபெயருடைய அறிஞரால் நடத்தப்பட்ட, இலங்கையின் சிறப்புமிகு இலக்கியத் திங்கள் இதழான 'கலைச்செல்வி'யில் தொடர்ந்து பல கட்டுரைகளாக, 1963 ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓவியக்கலைஞர் திரு. பெனிடிக்ட், என் இல்லத்தில் இரு மாதங்கள் தங்கியிருந்தார். அப்பொழுது, அவர் இக்கட்டுரைகளில் செய்ய வேண்டிய மாற்றங்கள் சிலவற்றைக் கூறினார். அவற்றைக் கருத்தில் கொண்டு, இந்நூலை விரிவு படுத்திப் புதுப்பித்துள்ளேன். இப்பணியில் என்னை ஆற்றுப் படுத்தியும், ஊக்குவித்தும், அறிவுரை வழங்கியும் நெறிப் படுத்திய இலங்கை நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சென்ற ஆண்டு 'புத்தகைய நூல் தமிழில் இல்லையே!' என்று தமிழ் ஆர்வலர்கள் வருத்தமுற்றனர். அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில், இதனைச் சேகர் பதிப்பகத்தினர் வெளியிட முன் வந்தனர். அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் தமிழில் ஒரு முதல் முயற்சி! ஆனால், முழுமையான முயற்சி! தமிழுலகம் இதனை நன்கு வரவேற்குமென நம்புகின்றேன்.

சென்னை.

1-7-78

கு. த. திருநாவுக்கரசு

# உள்ளுறை

## முதற்பகுதி

### வரலாற்று ஒளி


**இயல் 1 தொல் பழங்காலத்தில் இலங்கை** 11

ஈழம் — விளக்கம் — புராண மரபு—ஆரியர் குடியேற்றம்

**இயல் 2 வரலாற்று ஒளிவீச்சு** 23

அசோகரைப் போற்றிய மன்னன்—இளவரசன் மகேந்திரன்—மகாவிகாரையின் மாட்சி — திசனின் சமயப்பணி—திசனின் வழி வந்த அரசர்—ஆந்திரர் கண்ட இலங்கை—குப்தர் காலத்திய இலங்கை—பாகியான் கண்ட இலங்கை—இலங்கையில் புத்த கோசர்.

**இயல் 3 தமிழகமும் ஸ்ரீலங்காவும்** 36

தொல் பழங்காலத் தொடர்பு—சங்க காலத்தில் தமிழகமும் இலங்கையும்—தாமிழிக் கல்வெட்டுகள்—ஏலேல சிங்கனும் ஈழமும்—இருபெரும் மன்னர்கள்—தமிழரின் படையெடுப்பு—கரிகாலன் கண்டஇலங்கை—சங்கப் புலவர்களும் இலங்கையும்—கயவாகு போற்றிய கண்ணகி—மணிமேகலையும் மணிபல்லவமும்.

இயல் 4 பல்லவர் காலத் தொடர்பு 65

மீண்டும் தமிழரின் படையெடுப்பு—பல்லவர்களும் இலங்கையும்—சோழ இளவரசி வட இலங்கைப் பட்டத்தரசி—பாண்டியரும் இலங்கையும்—மாணிக்க வாசகரும் இலங்கை இளவரசியும்.

இயல் 5 சோழப் பேரரசரும் இலங்கையும் 73

பராந்தகனும்இராசசிம்மனும்—இலங்கைப்போர்—இராசராசனின் படையெடுப்பு—சிங்களவர் எழுச்சி—சிங்களவரின் விடுதலை வேட்கை—குலோத்துங்கனும் இலங்கையும்-விசயவாகுவின் தமிழகப் படையெடுப்பு—உள்நாட்டுப் போர்—சோழர் ஆட்சியின் விளைவுகள்.

இயல் 6 பாண்டிய நாட்டு அரசியலில் சிங்களவர் தலையீடு 91

அரசியல் கொந்தளிப்பு—சோழரின் தலையீடு—சூழ்ச்சியும் வீழ்ச்சியும்.

இயல் 7 யாழ்ப்பாணத் தமிழரசு 97

தோற்றம் — ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்பு—கலிங்கமும் ஆரியச் சக்கரவர்த்திகளும்—மணவுறவும் போரும்—சிறப்புமிகு அரசர்.

இயல் 8 அடிமை விலங்கு 107

பொற்காலம்—அரசியல் குழப்பம்—பாண்டியர் படையெடுப்பு — இலங்கையின் வீழ்ச்சி — அடிமை விலங்கு.

இரண்டாம் பகுதி

நாகரிக ஒளி

இயல் 9 தமிழரின் குடியேற்றம் 119

ஈழத்து மக்கள்—தமிழகத்து மக்கள்—பௌத்தத் துறவிகள்—தமிழ அதிகாரிகள்—முத்துக்குளிப்போர்—படைவீரர்—வேளைக்காரப்படை—தோட்டத் தொழிலாளிகள்—தமிழர் வாழும் பகுதிகள்.

இயல் 10 வாணிகக்குழு வளர்த்த பண்பாடு 133

வாணிகக்குழு—திசையாயிரத்து ஐந்நூற்றுவர்—தமிழகத்தில் தலைமையிடம்—கல்வெட்டுச் செய்திகள்—வீரம்பட்டினம்—மொழியும் எழுத்து வடிவமும்—வளஞ்சியரும் வலங்கையரும்—சைவ சமயத்தவர்—கல்வெட்டுகளின் காலம்.

இயல் 11 சமுதாயமும் சமயமும் 139

தமிழ்நாட்டுப் பெயர்கள்—சாதி முறை—பழக்க வழக்கங்கள் — பௌத்தமும் சைவமும் — சமயப் பொறை—தேவாரம் பெற்ற திருக்கோயில்கள்.

இயல் 12 கலைச்செல்வம் 145

இருபேர் அருவிகள்—சிற்பக்கலை—அமராவதிக் கலை மரபு—குப்தரின் கலைப்பாணி—மாமல்லபுரத்துச் சிற்பக் கலைப்பாணி—சோழர் கட்டிய கோயில்—சோழரின் கலைப்பாணி—புத்தரின் திருக்கோயில்களில் திராவிடக் கலைப்பாணி—பாண்டியர் கலைப்பாணி—விசய நகரக் கலைப்பாணி—வெண்கலச் சிலைகள்—சிவனடியார்களின் சிவக்கோலம்—கண்ணகியின் சிலை—ஓவியக்கலை—பழைய ஓவியங்கள்—பொலனறுவா ஓவியம்—சிகிரியா ஓவியம்

இயல் 13 இலக்கியக் கலை 161

ஈழத்துத் தமிழ்ச்சங்கம்—தமிழில் இரகுவமிசம்—வீரராகவர் பெற்ற விருது — தமிழகத்திற்கு வந்த புலவர்—கிறித்துவத் தமிழ் இலக்கியம்—புராணங்களும் சிறு பிரபந்தங்களும் — மேற்கு நாட்டுக் கல்வியின் தாக்கம்—கிறித்துவச் சமய நூல்கள் — ஆறுமுக நாவலரின் அரும்பணி—தமிழ் இலக்கிய வரலாறு—சிற்றிலக்கியச் செல்வம்—நாடகத் தமிழ்—பல்வகைப் பணி—இருபதாம் நூற்றாண்டு — மரபு வழிப்பட்ட இலக்கியங்கள் — உரை விளக்கம் — ஆராய்ச்சி நூல்கள்—நாட்டுப் பாடல் — புத்திலக்கியப் பரிசோதனைகள்—இடைக்காடர் — புதுமைப் பொலிவு — புதினங்களின் நோக்கும் போக்கும்—தொடர்கதைகள்—நனவோடை உத்தி — துப்பறியும் நாவல்கள் — பேச்சுத் தமிழில் புதினம்—வடிவமும் உள்ளடக்கமும் — சிறுகதை ஆசிரியர் படைத்த புதினங்கள் — சிறுகதை இலக்கியம்—முன்னோடிகள்—மறுமலர்ச்சி இயக்கம்-தேசிய உணர்வு-பரிசோதனைக் காலம் — புதிய எழுச்சி — சமுதாய (சோசலிச) நோக்கு — கவிதை — புதினம்—வகுப்புப் போராட்டம் — தொழிலாளர்களே கதாநாயகர்கள்—புதினத்தின் முதிர்ச்சி நிலை—சிறுகதை — மரபை உருவாக்கியவர் — புதுமைப் பொலிவு — நடைச் சித்திரங்கள்—மண்ணின் மணம்—நோக்கும் போக்கும்.

இயல் 14 சிங்கள மொழியில் தமிழின் தாக்கம் 193

தமிழர் படைத்த சிங்கள நூல்கள்—தமிழ்த் துறவிகள் வளர்த்த சிங்களம் — தமிழ்த் தூது இலக்கியம்— தமிழ்ச் செல்வாக்கு—தொகுப்புரை.

படங்கள் 201

பிற்சேர்க்கை 209

# படங்கள் - 12

## அ. நாட்டுப் படம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழகம் | 20 |
| 2. | இலங்கை-தமிழர் வாழும் பகுதி | 21 |
| 3. | இலங்கையின் பண்டை நகரங்கள் | 123 |


## ஆ. கல்வெட்டுப் படம்


| | | |
|---|---|---|
| 1. | வாகல்கடம் தமிழ்க் கல்வெட்டு | 136 |


## இ. கலைச் செல்வம்


| | | |
|---|---|---|
| 1. | திருக்கேதீச்சுரர் கோயில் | 201 |
| 2. | ருவான் வெலிசாயா தாதுகோபம் | 202 |
| 3. | சந்திர வட்டப்படிக்கல் | 203 |
| 4. | பராக்கிரமபாகு | 204 |
| 5. | கண்ணகியின் சிலை | 205 |
| 6. | சுந்தரமூர்த்தி நாயனார் | 206 |
| 7. | போதிசத்துவர் | 207 |
| 8. | சிகிரியா ஓவியம் | 208 |

## அன்பு மலர்

அண்மையில் மறைந்த ஈழத்துத் தமிழறிஞரும் என் நண்பருமான டாக்டர் S. தனஞ்சயராஜசிங்கம் M. A., M. Litt. Ph. D. அவர்களுக்கு அன்பு மலராக இந்நூலைப் படைக்கின்றேன்.

# இலங்கையில்
# தமிழ்ப் பண்பாடு

---

## முதற் பகுதி

---

# Ilangaiyil
# Thamizhp panpadu

23 DEC 1978

# வரலாற்று ஒளி

## இயல் 1

# தொல்பழங்காலத்தில் இலங்கை

இந்தியாவின் தென் பகுதியிலுள்ள தீபகற்பத்தின்—தமிழகத்தின்—கிழக்குப் பகுதியில் சிறியதொரு கடல் குடாவினால் பிரிக்கப்பட்டு, தனித்ததொரு தீவாக இலங்கை விளங்குகிறது. பன்னெடுங்காலமாக, இந்திய நிலப்பரப்பை ஒட்டி அமைந்துள்ள தீவாக, அது இருந்துவருகிறது. எனினும், அதனுடைய வாழ்வும் வரலாறும் தனிச் சிறப்புடையன. ஐரோப்பியர்கள் (டச்சுக்காரர்கள்) அத்தீவினுள் 16ஆம் நூற்றாண்டில் காலடி வைப்பதற்கு முன்பே, அது தனிப்பட்ட நாகரிக வளர்ச்சியும் பொருளாதார மேம்பாடும் உடைய நாடாக விளங்கியது.

வரலாற்றுக் காலம் நெடுக, இந்தியாவோடு—சிறப்பாகத் தமிழ் நாட்டோடு— மிக நெருக்கமான தொடர்பு கொண்ட நாடாக இலங்கை இருந்து வருகிறது.

தமிழகத்தோடு அது கொண்டுள்ள தொடர்பு, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைச் சிறப்புடையதாகும். இவ்விரு நாடுகளுக்குமிடையே நிலவி வரும் நட்பும், பண்பாட்டுப் பரிமாற்றமும் காலந்தோறும் எவ்வாறு மாற்றமுற்று வலிவும், பொலிவும் பெற்றன என்பதை விளக்க இந்நூல் முயலுகிறது.

23 DEC 1973

இலங்கையைத் தமிழ் நாட்டினர், 'ஈழம்' என அழைப்பர். வடமொழிவாணர் அதனை, 'இலங்கை' என்றும், 'சிம்மள த்வீபம்' எனவும் வழங்குவர். கிரேக்கர்களும், ரோமர்களும் 'தாப்ரோபானே' என்று இந்நாட்டைத் தம் வரலாற்றுக் குறிப்பேடுகளில் சுட்டியுள்ளனர்.

## ஈழம் - விளக்கம்

'இலங்கை ஈழத்துக் கலந்தரு செப்பு' என்பர் கொங்குவேளிர்.[1] இலங்கையில் பேரளவிற்குப் பொன் மிகுதியாகக் கிடைத்து வந்தமையால், அதனை 'ஈழம்' எனப் பண்டைத் தமிழ்மக்கள் வழங்கினர் என்பர் ஒரு சாரார். 'ஈழம்' எனும் தமிழ்ச் சொல்லிற்குப் 'பொன்' எனும் பொருள் வழக்கில் உள்ளதனுலும், பொன் மிகுதியாகக் கிடைக்கும் நாடாக அது இருப்பதனுலும், அதனை 'ஈழம்' என்றனர் என்பது அவர்கள் தரும் விளக்கமாகும். மற்ரெரு சாரார், 'ஈழம்' என்னும் சொல்லிற்குக் 'கள்' என்னும் பொருள் பொதுவாக வழங்கப்பட்டு வருகின்ற காரணத்தாலும், தென்னை மரங்கள் செழித்து வளருவதை இன்றும் நாம் இலங்கையில் காண்பதனுலும், கள்ளுக்குப் பெயர்போன நாடு எனும் பொருளில், 'ஈழம்' என அது பெயர் பெற்றது என்பர்.

ஈழர் என்னும் இனத்தார் வாழ்ந்து வந்தமையினுல் இந்நாடு, ஈழம் என்ற பெயரைப் பெற்றது. 'பாண்டியர் வாழ்வது பாண்டிய நாடு என்பதைப்போல, ஈழர் வாழ்வது ஈழ நாடாயிற்று. ஈழர்தான் ஈழத்தின் ஆதிக் குடிகளாகும். நாகர், சிங்களவர் என்ற இனத்தார் தோன்றி வாழ்வதற்கு முன்னர், இந்த நாட்டில் வாழ்ந்த ஆதிக் குடிகள் ஈழவராவர்'[2] என்பது பிறிதொரு சாரார் தரும் விளக்கமாகும்.

கடல்கொண்ட தென்னுட்டில்—குமரி நாட்டில், 'ஏழ்பனை நாடு' என்ற ஒரு நாடு இருந்தது. அப்பெரு நிலப்

---

[1] பெருங்கதை. 1:58:37

[2] அ. செல்வநாயகம், ஈழமும் தமிழரும், பக். 2

பரப்பினைக் கடல் கொண்டபொழுது, குமரிக் கண்டத்தின் ' ஏழ்பனை நாடு ' எனும் பெயர் ' ஈழம் ' எனக் காலப் போக்கில் திரிந்து, வழங்கியிருக்க வேண்டும் என்பது ஈழத்து அறிஞர் ஒருவரின் கருத்தாகும்.[1]

இலங்கையின் பழங்குடி மக்களாகிய ஈழர்கள், முதன் முதலில் பேசிய மொழி ' எழு ' என்பதாகும். அம்மொழி பேசிய மக்கள் வாழ்ந்த நாட்டை ' ஈழம் ' என்று தமிழர்கள் அழைத்தனர் என்பது ஆய்வாளரின் துணிவாகும்.[2] இக் கருத்து மேற்கண்ட விளக்கங்களைவிடப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

' இலங்கை எனும் வட சொல்லிற்கு ' தீவு ' என்பது பொருள். 'ஸ்ரீ லங்கா' எனும் இக்காலத்திய பெயருக்குத் 'திருமிகு தீவு' என்பது பொருள். முதன்முதல் இலங்கைக்கு வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவனுடைய பெயர் விசயன் என்பதாகும். அவனுடைய தந்தையின் பெயர் சிம்மவாகு என்பர். அச் சிம்மவாகுவின் வழித் தோன்றல்களால்,இலங்கையில் முதன்முதல் அரசு அமைக்கப்பட்டமையால் ' சிம்மளத் தீவு ' என்னும் பெயரினை அது பெற்றது என்பர்.

இந்துமாக் கடலில் இலங்கிக் கொண்டும் ஒளிர்ந்து கொண்டும் இருந்தமையினால் இலங்கை எனும் பெயரைப் பெற்றது என்பர் இக்காலத் தமிழறிஞர்.[3]

' தாப்ரோபானே ' அல்லது ' தம்னேபன்னி ' என்னும் பெயர் இலங்கைக்கு வழங்கப்பட்டு வருவதிலிருந்து, தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் பாய்ந்தோடும் தாமிரவருணி ஆற்றுக்கும் இலங்கைக்கும் யாதோ ஒருவகையான

---

[1] முதலியார் செ. இராசநாயகம், யாழ்ப்பாணச் சரித்திரம், பக். 12

[2] S. Rasanayagam, Ancient Jaffna, PP. 101–103

[3] அ. செல்வநாயகம், மு. கு. நூல், பக். 2

தொடர்பு இருந்து வந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

கி. பி. மூன்றும் நூற்றாண்டில் அமராவதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று, 'சிங்களத்தீவு' எனும்பெயரால் இலங்கையைச் சுட்டுகிறது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், இலங்கைக்கு வந்த போர்ச்சுகீசியர்கள், 'சிங்களம்' என்பதைச் 'சைலோன்' என்று உச்சரித்தனர். அதனை, மற்ற ஐரோப்பியர்கள் திரித்து, ஒலித்ததன் பயனாகத் தற்காலப் பெயராகிய 'சிலோன்' (Ceylon) வழக்கிற்கு வந்ததாகத் தெரிகிறது.

இலங்கை இந்தியாவுடன் தொன்றுதொட்டுப் பல துறைகளிலும் தொடர்புடையதாக இருந்து வருகிறது. இத்தொடர்பை விளக்கும் சான்றுகள், இவ்விரு நாட்டு வரலாறுகளிலும், கல்வெட்டுகளிலும், செவிவழிச் செய்திகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஓரிடத்தில் தோன்றிய அரசியல், சமூகவியல், சமயவியல், பண்பாட்டியல் கருத்துகளும் வளர்ச்சிகளும் தங்களுடைய செல்வாக்கினைப் பிறநாட்டில் நிலைநாட்டின. இவ்வரும் பணியினால், இலங்கையே தென்னகத்திடமிருந்து பல்வேறு பயன்களைப் பேரளவிற்குப் பெற்றிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திற்கு மிகவும் அருகில் இலங்கைத் தீவு அமைந்திருக்கிறது. இதனால், பண்பாட்டிலும், ஓரளவிற்கு அரசியலிலும் இலங்கை இந்தியாவின் பகுதியாகவே பண்டைக் காலத்தில் விளங்கியது. அந்நாட்டின் பண்பாடு பௌத்த சமயத்தின் வழி, வட இந்தியத் தொடர்பு உடையதாக அமைந்தது. அசோகன் காலத்தில் மகதத்திலிருந்து வந்த புத்த சமயத்தை, அந்நாடு ஆர்வத்தோடு வரவேற்றது. அன்றுமுதல், தேசிய சமயமாகப் புத்த சமயம் இலங்கையில் நிலைத்த வாழ்வைப் பெற்றது. ஆனால், அதனுடைய அரசியல் வரலாறு, தமிழகத்தின் மூன்று முடியுடை வேந்தரின் அரசுகளான சேர, சோழ, பாண்டிய நாடு

களின் வரலாற்றேடு நெருங்கிய தொடர்புடையதாகும். கி. மு. ஆரும் நூற்றுண்டில், விசயன் இலங்கையை ஆளத் தொடங்கிய காலம் முதல், ஆங்கிலேயர் கைக்கு மாறும் வரை, அத்தீவின் அரசியல் வரலாறு தமிழருடைய தாக்குதலை எதிர்த்து, நடத்திய போராட்டத்தின் தொடர்கதையாகவே தோன்றுகிறது. தமிழர்கள் இலங்கையின் மீது பல முறை படையெடுத்துச் சென்றனர். அந்நாட்டின் பெரும் பகுதியில், அவர்கள், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியுமுள்ளனர். ஆனுல், சிறிது காலத்திற்கெல்லாம் அவர்கள் விரட்டியடிக்கப்பட்டும் உள்ளனர். ஆயினும், அடிக்கடி தமிழர்கள் இலங்கையைத் தங்கள் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்துள்ளனர். இதனுல், தமிழர்கள் சிலர் அந்நாட்டில் குடியேறினர்.

### புராண மரபு

இலங்கையில் நாகரிகம் தோன்றி வளர்ந்ததைப் பற்றிய கதைகள், பல இந்திய மொழிகளிலும், சிங்கள மொழியிலும் வழங்குகின்றன. அயோத்தியின் இளவரசனுன இராமனுக்கும், இலங்கையின் வேந்தனுன இராவணனுக்கும் நடந்த போராட்டம் இராமாயணக் கதையின் கருப்பொருளாக விளங்குவதை அறியாத இந்தியர் இல்லை இராமகாதையில் இலங்கை வாழ் மக்கள், மானிடரையே கொன்று உண்ணக் கூடிய, 'இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் மாபெரும் கட்டடங்களைக் கட்டும் திறமையுடயவர்களாகவும், யாராலும் எளிதில், எதிர்த்து வெற்றிபெற இயலாத பேராற்றல் வாய்ந்தவர்களாகவும் வாழ்ந்தனர். தென்னிந்தியாவில் விந்தியமலை வரையில் அவர்களுடைய ஆட்சி பரவி இருந்ததென்று தெரிகிறது. இராவணன் மாபெரும் வீரனுகவும்,, போர்க் கலைப் பயிற்சிமிக்க பேரரசனுகவும் விளங்கியதை இராமாயணம் எடுத்துரைக்கிறது. இலங்கையில் அமைக்கப்பட்டிருந்த அவனுடைய கோட்டையின் அமைப்பும், அதன்

தற்காப்பு முறைகளும் அக் காலத்தின் பேரதிசயமாகக் கருதப்பட்டது. இப் பழங்கதையால், தொல்பழங்காலத்தி லேயே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொடர்பு இருந்து வந்தமை புலனாகிறது.

## பழங்குடி மக்கள்

இலங்கையின் காலவழிச் செய்திக் கோவைகள் அங்கு இயக்கரும், நாகரும் தொல்பழங்காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுகின்றன. அவர்கள் அரக்கர்களைப் போன்று நாகரித்தில் சிறந்தவர்கள் அல்லர். எனினும், அவர்கள் நாகரிக இயல்புகளை நன்கறிந்து இருந்தனர். பண்டைக் காலத்தில் இலங்கையின் வடபகுதிக்கு 'நாக தீபம்' என்னும் பெயர் வழங்கி வந்தது. இந்நாக தீபத்தின் மக்களாகிய நாகர்களைப் பற்றி விரிவாக ஒன்றும் அறிய இயலவில்லை. இன்று இலங்கையில் வாழும் வேடர்கள் [Veddas] இலங்கைப் பழங்குடி மக்களின் கால் வழியினர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## ஆரியர் குடியேற்றம்

இந்தியாவிலிருந்து ஆரியமொழி பேசும் மக்கள், பேரளவிற்கு வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இலங்கையில் குடியேறினர். அவர்கள் அந்நாட்டின் பழங்குடி மக்களோடு கலந்து போயிருப்பினும், சிங்களவர் பேசும் மொழி ஆரியச் சார்புடையதாக இருந்து வருவது இங்குக் குறிப்பிடத் தக்கது. இலங்கையின் பண்டைய வரலாற்றை, 'மகாவமிசம்' எனும் காலவழிச் செய்திக் கோவை ஓரளவிற்கு ஒழுங்காகவும் முறையாகவும் கூறுகிறது. அவ்வரலாற்று ஏட்டினால் வட இந்தியாவிலிருந்து வந்த 'விசயன்' என்பவன் முதன்முதலில் நாகரிகத்தைக் கொண்டு வந்து, இலங்கையில் புகுத்தினான் என்பது தெரிய வருகிறது. அஞ்சாநெஞ்சம் படைத்த இவ் வீரனைப்பற்றிப் பலவகையான கதைகள் வழங்கி வருகின்றன. ஆயினும், அவன் வரலாற்றுச் சிறப்

புடைய வீரனாகப் போற்றப்படுகிறான். அவனுடைய சதையைக் காண்போம்.

விசயனுடைய பாட்டி மேற்கு வங்காள நாட்டு(கலிங்கம் எனவும் கூறுவர்) அரசனின் மகளாவாள். அவள், வீட்டை விட்டு வெளியேறிப் பல மாதங்கள் வட இந்தியா முழுவதும் அலைந்து, திரிந்தாள். அப்பொழுது இலாட தேசத்தில் சிங்கம் ஒன்றினால் கைப்பற்றப்பட்டாள். சிங்கத்தின் விருப்பப்படி, அவள் அதனுடன் கூடி வாழ்ந்தாள். அவளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. மூத்தவன் ஆண்மகனாவான். அவளுடைய மகன் சிம்மவாகுவிற்குப் பதினாறு வயது நிறைந்தது

ஒருநாள் சிம்மவாகு தன்தாயையும், தங்கைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு, அருகிலிருந்த நாட்டிற்கு ஓடிவிட்டான். காணாமற்போன தன் மனைவி, மக்களைத் தேடி, சிங்கம் அலைந்தது; சீற்றமுற்றுச் சுற்றுப்புறமுள்ள நாடுகளை அது அழித்துப் பாழாக்கியது. அந்நிலையில், வங்காள நாட்டு அரசன், சிங்கத்தைக் கொன்று வருபவருக்குப் பெரும் பொருளைப் பரிசளிப்பதாகப் பறை அறைவித்தான். இதைக்கேட்ட சிம்மவாகு, தன்னுடைய தந்தையான சிங்கத்தைக்கொன்று, அப்பரிசைப் பெற்றான். அந்நாட்டு அரசன் இறக்கும் சமயத்தில், சிம்மவாகுவை அரசனாக்கிச் சென்றான்

சிம்மவாகு வங்காளத்தை விட்டு நீங்கி, இலாட (மேற்கு வங்க) தேசத்தில் 'சிங்கபுரம்' எனும் நகரை அமைத்து ஆட்சி புரியத் தொடங்கினான். அச்சிம்மவாகுவிற்குப் பிறந்த மகனே விசயனாவான். அவன் பிறந்த வேளை பொல்லாதது என்று சோதிடர் கூறினர். இளமையில் விசயன் வழக்கத்திற்கு மாறாகப் பல புதுமைச் செயல்களில் ஈடுபட்டிருந்தான். அவன் தீய நட்சத்திரத்தில் பிறந்ததனால்தான், இவ்வாறு நடக்கிறான் என்று நாட்டு மக்கள் நம்பினர்.

அந்நாட்டில் விசயனைப் போன்று அத்தீய நட்சத்திரத்தில் எழுநூறு பிள்ளைகள் பிறந்தனராம். அந்த எழுநூறு

பேருக்கும் இளவரசன் விசயன் தலைவனாக விளங்கினான். அவர்களுடைய குறும்புச் செயல்கள், அந்நாட்டு மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பை யுண்டாக்கின. அம் மக்கள் அரசனிடம் முறையிட்டனர். ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் விசயனையும், அவன் தோழர்கள் எழுநூறு பேரையும் நாடு கடத்துவதென்று அரசன் முடிவிற்கு வந்தான். அந் நாட்டு மக்களும் அரசனும் கூடி, ஒரு நாள் அவ்வெழுநூறு பேரை யும் கப்பல் ஏற்றிப் பெருங் கடலில் யாங்காகிலும் செல்லுமாறு விரட்டினர் நெடுங்காலம் அக் கப்பல் கடலில் இங்கு மங் தும் அலைந்து திரிந்தது. பல நாட்களாகக் கடலில் எப்பகுதியிலும் அவர்கள் நிலப்பரப்பைக் காணாமல் அல்லற் பட்டனர்; விசயனும் அவனுடைய தோழர்களும் மனக் கலக்கம் அடைந்தனர். அந்நிலையில், ஒருநாள் அவர்கள் ஏறிவந்த மரக்கலம் இலங்கையின் கரையை அடைந்தது

இலங்கையை அடைந்ததும் மரக்கலங்களைக் கரையில் நிறுத்திவிட்டு விசயனும், அவனுடைய தோழர்களும் அத்தீவிற்குள் நுழைந்தனர். அங்கு வாழ்ந்து வந்த இயக் கர்களைக் கண்டனர்; அவ் வியக்கர்களை ஓர் இள வரசி ஆண்டுவருவதாகக் கேள்வியுற்றனர். இயக்காகள் தங்கள் நாட்டிற்குள் நுழைந்த 'புதியவர்களை' முதலில் சிறிது காலம் எதிர்த்துப் போராடினர். ஆனால், அவர் களுடைய இளவரசி குவேணி, விசயனைக் கண்டு காதல் கொண்டாள். பிறகு, அவள் விசயனை மணம் புரிந்துகொண் டாள்.

விசயனின் தோழர்கட்கு இயக்கிகள் பிடிக்கவில்லை, எனவே, அவர்கள் இயக்கிகளை வெறுத்தனர். அப் பெண்கள் சிறந்த மனைவியராகவும் அரசியாகவும் விளங்குவதற்குத் தகுதியற்றவர்கள் என்று அவர்கள் இழித்தும் பழித்தும்

---

[1] விசயன் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியி லிருந்து வந்தவன் எனும் கதையும் உண்டு காண்க: Paranavitana, History of Ceylon Vol. P. 85.

பேசினர்; அவர்கள் விசயனின் திருமணத்திற்கு உடன் படாது, அதை எதிர்த்தனர்; மேலும், இளவரசியின் தோழி களைத் தாங்கள் மணம் புரிந்து கொள்ள மறுத்தனர். இச் சிக்கலிலிருந்து தப்புவதற்காக விசயன், மற்றொரு திருமணம் செய்துகொள்வதென்று தீர்மானித்தான். தமிழகத்துப் பாண்டிய வேந்தனுடைய மகளை, மணப்பதென்று அவன் முடிவு செய்தான். தென் மதுரையை ஆட்சிபுரிந்து வந்த பாண்டிய வேந்தனிடம் தன்னுடைய தூதர்களை அனுப்பி, தன் கருத்தைத் தெரிவித்தான்! பாண்டியனும் அதற்கு இசைந்தான்.

பாண்டிய மன்னன், தன்னுடைய செல்வக் குமரிக்குச் சீர்வரிசையாக யானைகள், தேர்கள், அரசியல் பணியாட்கள், ஆயிரம் தொழிலாளிகள், எழுநூறு பணிப் பெண்கள், மற்றும் பல வேலையாட்கள் முதலியோரைத் தன் மகளோடு இலங்கைக்கு அனுப்பி வைத்தான். விசயனின் தோழர்கள் பாண்டிய நாட்டு இளவரசியுடன் வந்த எழுநூறு தமிழ்ப் பெண்களையும் மணந்து கொண்டனராம். அப்பாண்டி நாட்டுப் பெண்களோடு பல தமிழ்க் குடும்பங்களும் இலங்கைக்கு சென்று குடியேறின. அக் கலப்பினால் தோன்றிய கால்வழி யினரே சிங்களவர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதன் பிறகு, வந்தேறிகளான விசயன் கூட்டத்தினர் இலங் கையில் நிலையாகத் தங்குவது என்று முடிவு செய்தனர்.

சிங்கத்தின் வழித்தோன்றலாகிய விசயன் ஆட்சிபுரிந்த மையால், அத் தீவு சிங்களம் என்று பெயர் பெற்றது என்பர். இலங்கையில் விசயன் வந்து குடியேறிய காலம் கி.மு. ஆறும் நூற்றாண்டாகலாம் என்பது வரலாற்று அறிஞர்களுடைய முடிவாகும்.[1]

இக்கதை வரலாறு அன்று; சுவைமிக்க, கற்பனை கலந்த, வீரம் ததும்பும் காப்பியமாகும். ஆயினும் இதில் ஓரள

---

[1] S. Parananvitana, op.cit pp. 97-98



தமிழகம்
குடமலை நாடு
அரபிக் கடல்
வேங்கி நாடு
கிருஷ்ணை
வட பெண்ணை
கலிங்கம்
வேங்கடம்
காளத்தி
காஞ்சி
பாலாறு
மாமல்லபுரம்
தென்பெண்ணை
திருக்கோவலூர்
வெள்ளாறு
காவிரி
திருப்புறம்பியம்
நாகப்பட்டினம்
தஞ்சாவூர்
கொடும்பாளூர்
வைகை
மதுரை
கொல்லம்
தாமிரவருணி
விழிஞம்
இராமேசுவரம்
மன்னார்
அனுராதபுரம்
பொலன்னறுவை
ஈழம்
ரோகணம்
குமரி முனை
முந்நீர்ப் பழந்தீவுகள்
வங்காளக் கடல்
இந்தியப் பெருங்கடல்

# இலங்கை - தமிழர் வாழும் பகுதி



-விற்கு உண்மை இல்லாமல் போகவில்லை. சிங்களத்தில் குடியேறியவர்கள் வட இந்தியர்களேயாயினும், விசயனின் திருமணத்திற்குப் பின்னர், அவர்கள் தமிழர்களோடு இனக்கலப்புற்றனர். "சிங்கள இனத்திற்கு ஆக்கம் கொடுத்த மற்றொரு சாதியினர் திராவிடராவர். அத்திராவிடர் இத்தீவில் எப்போது குடியேறினர் என்பதற்குரிய சான்றுகள் கிடையா. இலங்கையைக் கைப்பற்றும் நோக்கத்துடனும், சமாதானக் குடிகளாகவும் திராவிடர் இலங்கைக்கு மிகப் பழங்காலந் தொடங்கி வந்தார்கள். கிறித்துவ சகாப்தத்தின் தொடக்கம் முதல் சில நூற்றுண்டுகளாகத் திராவிடர் சிங்கள இனத்தின் ஆக்கத்திற்குத் துணை புரிந்தே வந்திருக்கின்றனர்."[1]

தமிழர்களோடு திருமணத் தொடர்பு கொண்ட போதிலும் விசயனும் அவன் கால் வழியினரும் வட இந்தியாவிலிருந்து வந்தமையால், அந்நாட்டின் பண்பாட்டையே போற்றிப் பின்பற்றலாயினர். அவர்கள் பேசிய மொழியும், அக்காலத்தில் வடஇந்தியாவில் வழங்கிய பிராகிருத மொழிகளுள் ஒன்றுகவே இருந்திருக்கவேண்டும். இன்று வழங்கும் சிங்கள மொழியின் தாய்மொழி, ஒருவகைப் பிராகிருதமே என்பது மொழிநூல் வல்லார் முடிவாகும்.

வடஇந்தியாவிற்கும் இலங்கைக்கும் கடல் வழியாக நெருங்கியதொடர்பு உண்டாயிற்று வடஇந்தியாவில்உள்ள புரோச், தாமிரலிபிதி முதலிய துறைமுகங்கள் இலங்கையோடு நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன. இவ்வாறு சில நூற்றுண்டுகள் இலங்கையிற் குடியேறிய சிங்களவர்கள், தங்கள் தாயகத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக வாழ்ந்தனர்.

வடஇந்தியாவில் மௌரியப் பேரரசின் எழுச்சியும், பௌத்த சமயத்தை உலகமெங்கும் பரப்புவதில் அசோகன் கொண்ட எல்லையற்ற ஆர்வமும் இலங்கையை வடஇந்தியாவோடு நெருக்கமாகப் பிணைத்தன.

---

[1] G. C. Mendis, Early History of Ceylon, P. 12

# வரலாற்று ஒளிவீச்சு

இந்தியாவிலிருந்து நாகரிகத்தின் ஒளிச்சுடரைக் கொண்டுவந்து, இலங்கையில் பேரொளி வீசுமாறு செய்த விசயன், எந்தச் சமயத்தைச் சார்ந்தவன் என்பது தெரியவில்லை. ஒரு பண்டை வைதீக சமயத்தைச் சார்ந்தவனாக அவன் இருந்திருக்கலாம். விசயனும் அவனுடைய தோழர்களும் புத்தரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், அவர்கள் இலங்கையில் புத்தசமயத்தைக் கொண்டு வந்து புகுத்தினர் என்பது ஐயுறத்தக்கதாகும். ஏனெனில், அசோகருக்கு முன்பு பௌத்தசமயம் இந்தியாவின் கிழக்குப் பகுதிக்கு வெளியே, பரவியிருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, விசயனும் அவனுடைய தோழர்களுமான எரிகொள்ளிகள் பௌத்த சமயத்தின் அமைதி வாய்ந்தகோட்பாடுகளைப் பின்பற்றி இருப்பர் என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை.

## அசோகரைப் போற்றிய மன்னன்

இலங்கைக்கு, எவ்வாறோ சந்திரகுப்த மௌரியர், அசோகர் ஆகிய இருவருடைய அருமை பெருமைகளும் சீரும் சிறப்பும் எட்டின, கி. மு. 250 ஆம் ஆண்டு அளவில்

திசன் (TISSA) இலங்கையின் அரசனானான். அவன், அசோகருக்குப் பாராட்டுரை வழங்க, விலைமதிப்புமிக்க அரிய பரிசுப்பொருள்களோடு, நல்லெண்ணத்தூதர் குழு ஒன்றை மகதநாட்டிற்கு அனுப்பினான் அசோகர் சிங்களத்தூதர் குழுவினருக்குப் பெரும் பொருளைப் பரிசாகக் கொடுத்து, அரச விருதுகளோடு வழியனுப்பி வைத்தார். அவர்கள் மூலம் இலங்கை அரசனுக்கு, அசோகர் ஒரு நற்செய்தியையும் தெரிவித்தார். தாம் பௌத்த தருமத்தைச் சரணடைந்ததைக் குறிப்பிட்டு, திசனையும் புத்தர் பெருமானின் புனித நெறியைத் தழுவுமாறு, அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மௌரியப் பேரரசர் அனுப்பி வைத்த அன்புப்பரிசையும் நற்செய்தியையும் திசன் பெருமதிப்புடன் போற்றினான். இச்சிறப்பினை உலகறியச் செய்ய இரண்டாம் முடிசூட்டுவிழாவினை நடத்தி தன்னைப் புகழ்மிக்க பேரரசன் என்று அவன் அறிவித்துக் கொண்டான். மேலும், அசோகரைப் போன்று அவனும் தேவனும்பி(ரி)யர் (தேவர்களால் விரும்பப்படுபவன்) என்னும் சிறப்புப் பெயரைப் பூண்டான்! சிறிது காலத்திற்கெல்லாம், புகழ்மிக்க மகேந்திரன் தலைமையில் தூதர் குழு ஒன்று இலங்கைக்கு வந்தது. அக்குழுவைத் 'திசன்' அன்புடன் வரவேற்றான். மகேந்திரன் இலங்கைக்கு வந்த, முதல் அயல்நாட்டுத் தூதுவனாவான். இலங்கையில் புத்தசமயத்தை நிலை நாட்டிய பெருமை மகேந்திரனையே சாரும். அவனைப் பற்றிய செய்திகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. இரண்டு வகையான புராண மரபுகள் அவனைப் பற்றி வழங்கி வருகின்றன. ஒன்று இந்திய மரபு; மற்றொன்று சிங்கள மரபாகும்.

## இளவரசன் மகேந்திரன்

அசோகன் இளமையில் மிகக் கொடியவனாக இருந்ததாகச் சிங்கள மரபு கூறுகிறது. அவனுடைய தகப்பன் பிந்துசாரன் ஆட்சிக்காலத்தில், அசோகன் உச்சயினியில் அரசப்

பிரதிநிதியாக இருந்தான். அப்பொழுது தற்கால 'போபால்' அருகிருந்த 'வேதிககிரி' என்னும் ஊரில் வாழ்ந்த வணிகன் ஒருவன் மகளைக் கண்டு, அவன் காதல் கொண்டான். அவள் பெயர் 'தேவி'யாகும். அவளிடத்து அசோகனுக்கு 'மகேந்திரன்' என்ற மகனும், 'சங்கமித்திரை' என்ற மகளும் பிறந்தனர். அசோகன் உச்சயினியிலிருந்தவரை, தேவி அவனுடன் வாழ்ந்தாள். அசோகனுடைய தந்தை இறந்தவுடன், அவன் பாடலிபுரத்திரத்துக்குச் சென்றான். அப்பொழுது, தேவி அசோகனுடன் செல்ல விரும்பாது, தன் தகப்பன் வீட்டிலேயே தங்கினாள். ஆனால், குழந்தைகள் இருவரையும் அசோகன் தன்னுடன் அழைத்துச் சென்றான். பாடலிபுரத்து அரண்மனையில் குழந்தைகள் இருவரும் வளர்ந்துவந்தனர். மகேந்திரன் இளமை முதல் சமயத்தில் ஈடுபாடுடையவனாக இருந்தான். அவனுக்கு வயது வந்ததும், அவன் ஒரு துறவியானான். தமையனைப் போலவே தங்கை சங்கமித்திரையும் துறவுக்கோலம் பூண்டாள்.

மகேந்திரன், அசோகனின் தம்பி என்பது இந்தியமரபு. அவன் இளமையில் ஒழுக்கக் கேடான வாழ்க்கை நடத்தினான். அதனால் பாடலிபுரத்திலிருந்த மக்களிடையே 'மகேந்திரன், என்ற பெயர், ஒழுக்கக் கேடானவர்களைச் சுட்டும் இழிபெயராக வழங்கி வந்தது. இளவரசனின் பொல்லாத கொடுஞ்செயல்களைப் பொறுக்க முடியாத குடிமக்கள், அசோகனிடம் முறையிட்டனர். பேரரசன் வழக்கு விசாரணை நடத்தினான். விசாரணைக்குப் பிறகு, மகேந்திரன் குற்றவாளியென்று முடிவு செய்யப்பட்டான். அவன் கொடிய குற்றங்களைச் செய்திருந்தமையால், பெருந்தண்டனை விதிக்க வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அசோகன் தன் தம்பியைத் தனியே அழைத்து, "நீ செய்துள்ள குற்றங்களுக்குக் கொலை தண்டனையே நான் கொடுக்க வேண்டியிருக்கிறது. நான் அவ்வாறு செய்தால், நம் மூதாதையர் என்னைப் பழிப்பர். நான் உன்னைத் தண்டிக்காமலே விட்டுவிட்டால், குடிமக்கள் அரசன் நீதி வழங்கத் தவறியதாகத் தூற்றுவர்.

எனவே, நீ செய்த குற்றங்களிலிருந்து திருந்திக்கொள்ள. உனக்கு நான் ஏழுநாட்கள் தவணை தருகிறேன். அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்'' என்று கூறினன்.

பிறகு, அசோகன் மகேந்திரனை ஓர் அறையினுள் அடைத்துக் காவல் வைத்தான். ஒவ்வொரு நாளும் காவல்காரர் மகேந்திரனை அழைத்து, அவனுடைய வாழ்நாட்களில் ஒன்று, அன்று குறைந்து விட்டதாகக் கூறி வந்தனர். அரசியல் குற்றவாளியான மகேந்திரனுக்குத் தன்னை நோக்கிச் சாவு நெருங்கி வருவது அச்சத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. திருந்திய வாழ்வைப் பெற விரும்பிய மகேந்திரன், இரவும் பகலும் தியானத்தில் ஆழ்ந்தான். ஏழாம் நாள் அசோகன் அங்கு வந்தான். அவன் வருவதற்கு முன்பே மகேந்திரன் துறவுக் கோலம் பூண்டிருந்தான். தமையனைக் கண்டவுடன், தனக்கு இவ்வுலக வாழ்க்கைப் பிடிக்கவில்லை யென்றும், இமயமலைச்சாரலுக்குத் தான் செல்ல விரும்புவதாவும் கழிவிரக்கம் கொண்ட மகேந்திரன் கூறினன். இதைக் கேட்ட அசோகன் உள்ளூர மகிழ்ந்தான். மகேந்திரனைத் தன்னுடைய புத்தசங்கத்தின் தலைவனுகவும், வழிகாட்டியாகவும் இருந்து உதவிபுரியுமாறு அசோகன் வேண்டினன். அவனும், அதற்கு இசைந்தான். மகேந்திரன் தங்குவதற்காக அரண்மனையைச் சார்ந்த வெளியில் ஒரு மடம் கட்டப்பட்டது. துறவிகள் தங்களுக்கு வேண்டிய உணவை இரந்துண்ண வேண்டியவர்களாகக் கருதப்பட்டமையால், அரண்மனையினுள் பிச்சையெடுத்து உண்பதற்கு மகேந்திரன் உடன்பட்டான்.

தீயநெறிகளில் தன்னுடைய அறிவையும், ஆற்றலையும், ஆர்வத்தையும் இதுவரை செலுத்தி வந்த மகேந்திரன், அவற்றைச் சமயத்தின் கண் திருப்பினன்.

அவன் பௌத்த சமயப் புனித நூல்களை ஐயந்திரிபறக் கற்றுன். திரிபீடகம் முழுவதையும் மனப்பாடம் செய்தான்.

இதனுல், அவன் இலங்கைக்குச் சென்ற பொழுது தன் சீடர் களுக்குச் சுவடியின் உதவியின்றி, திரிபிடகத்தை வாய் மொழி வாயிலாகக் கற்பித்துப் பேரும் புகழும் பெற்ருன்.

அசோகன் அயல்நாடுகளுக்குப் புத்த சமயத் தூதர் குழுக்கள் பலவற்றை அனுப்பிய பொழுது, இலங்கைக் குச் செல்லும் குழுவிற்குத் தலைவனுக, மகேந்திரன் அமர்த்தப்பட்டான். அக்குழுவில், மகேந்திரனைச் சேர்த்து ஏழு துறவிகள் இருந்தனர். அக்காலத்தில் மகத நாட்டிலிருந்து இலங்கைக்குச் செல்ல நேரான கடல்வழி கிடையாது. மகேந்திரன் இலங்கைக்கு புறப்படுவதற்குமுன்பு வேதிசகிரியிலிருந்த தன் தாயைச் சந்தித்து, அவளுடைய வாழ்த்துகளைப் பெற்று வந்தான். பிறகு, நிலவழியாக அவன் இலங்கையை வந்தடைந்ததாக இலங்கையின் வரலாற்றுக் குறிப்பேடு கூறுகிறது. அவன் தென் இந்தியாவில் புத்த சமயத்தைப் பரப்ப நினைத்து இவ்வாறு நிலவழியாக வந்திருக் கலாம்.

மகேந்திரன் இலங்கைக்குப் புறப்படும் சமயத்தில், புகழ்மிக்க சாஞ்சி தூபி அவனுல் நாட்டப்பட்டது என்று நம்பப்படுகிறது.

வேதிசகிரியிலிருந்து சமயத்தூதர்கள் 'அன்னங்களைப் போன்று' இலங்கைக்குப் பறந்து சென்றனர் என்பது இலங்கை வரலாற்றுக் குறிப்பேட்டின் கருத்தாகும். சீன யாத்திரிகர் காலத்தில், இந்தியாவில் வழங்கிய கதைகளால், மகேந்திரன் கால்நடையாக இலங்கைக்குச் சென்றதாகத் தெரிகிறது. மகேந்திரன் ஒருகால் தமிழ்நாட்டு வேந்தர்களைச் சந்தித்து, அவர்கள் உதவியைப் பெற்றுத் தமிழகத்தில் பௌத்த விகாரகைகள் பல கட்டியிருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். யுவான் சுவாங்கு தமிழ கத்திற்கு வந்த பொழுது, பாண்டிய நாட்டிலிருந்த பௌத்த விகாரங்கள் மகேந்திரனுல் கட்டப்பட்டவை என்னும் மரபு வழிச் செய்தி தமிழகத்தில் வழக்கில் இருந்ததாகக் குறிப்-

பிட்டுள்ளமை இவ்வாறு கருதுவதற்கு இடம் தருகிறது. சிங்களத்தின் வரலாற்றுக் குறிப்பேடுகள், தொகுக்கப்பட்ட காலத்தில், தமிழருக்கும் சிங்களவருக்கும் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து பகைமை இருந்து வந்தது. அதனால், அவ்வேடுகள் புத்த சமயத் தொண்டரான மகேந்திரனும் மித்திரையும் தங்களால் வெறுக்கப்படும் நாடாகிய தமிழகத்தின் வழியாகவந்தனர் எனக் கூறுவது தங்கட்கு இழுக்கெனக் கருதி, 'அன்னத்தைப் போல் வானத்தில் பறந்து வந்தனர்' என்று கற்பனை நயம்படக் கூறினர் போலும்.

அச்சமயத் தொண்டர்களுக்கு இலங்கையில் சிறந்த வரவேற்பு கிடைத்தது. மகேந்திரன் இலங்கை அரசனுக்குப் பௌத்த தருமத்தைப் போதிப்பதற்கு முன்பு, அவனுடைய அறிவுத் திறனைச் சோதித்துப் பார்த்தான். பொறுத்தற்கரிய கொடுந்துன்பத்தைத் தந்த அத்தேர்வில் திசன் வெற்றி பெற்றான். திசனுடைய தலைநகரான அனுராதபுரத்தில் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட மா பெருங் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் மகேந்திரன் சிறந்ததொரு சமயச் சொற்பொழி வாற்றினான்.

மகேந்திரனும் அவனுடன் வந்த பௌத்த துறவிகளும் நிலையாகத் தங்குவதற்குத் திசன், மகாவிகாரைத் தோட்டத்தினுள் ஒரு மடத்தைக் கட்டினான். நாளடைவில் அப் பௌத்த சங்கத்தின் உறுப்பினர்கள் பெருகலாயினர். அவ்வாறு புதியதாகப் பௌத்த சமயத்தில் சேர்ந்தவர்களுள் இளவரசி அனுலா குறிப்பிடத்தக்கவளாவாள். அவள் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து, துறவியாக விரும்பினாள். அவள் மகேந்திரனை அடைந்து தனக்கு 'ஞானதீக்கை' அளிக்குமாறு வேண்டினாள். பெண்களுக்குப் பெண் துறவிதான். 'ஞான தீக்கை' கொடுக்கவேண்டும் என்று அவர் மறுத்துவிட்டார். இதற்காகச் சிங்கள அரசர், ஒரு தூதர்குழுவை, அசோகப்பேரரசருக்கு அனுப்பினார். உடனே, அசோகர் அக் குழுவினருடன் மகேந்திரனின் தங்கையாகிய சங்கமித்

திரையை அனுப்பி வைத்தார் என்பது மற்றெருருவகைச் செய்தி.

அவள், புனிதமான போதிமரத்தின் கிளையொன்றை வெட்டித், தன்னுடன் எடுத்துக்கொண்டு வந்தாள். இலங்கை மக்கள், சங்கமித்திரையையும் அப்போதிமரக் கிளையையும் பெருமதிப்புடன் வரவேற்றனர். சிறந்ததொரு விழாவிற்குப் பின் அக்கிளையை இலங்கையில் நட்டு வளர்த்தனர்.

சாஞ்சி தூபியிலுள்ள சிற்பம் ஒன்றில், மரம் ஒன்று, வண்டியில் ஏற்றப்படுவது போன்று செதுக்கப்பட்டுள்ளது. அச்சிற்பம், சங்கமித்திரை இலங்கைக்குப் போதிமரக் கிளையைக் கொண்டு வந்ததைக் குறிப்பதாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். புத்த சமயத்தைப் போன்றே அக்கிளையும், இலங்கையில் வேர் ஊன்றி வளரத் தொடங்கியது.

இன்றும் இலங்கைக்குச் செல்லும் யாத்திரிகர்கட்கு, அப் போதிமரத்தின் வழிவந்த பழைய மரம் ஒன்று இலங்கை மக்களால் பெருமையுடன் காட்டப்படுகின்றது.

### மகாவிகாரையின் மாட்சி

மகேந்திரனுல் அமைக்கப்பெற்ற மகாவிகாரை பௌத்த சமயத்தின் தொன்மை வாய்ந்த இருப்பிடங்களுள் ஒன்ருக உலகப் புகழ் பெறத் தொடங்கியது.

சிங்களவர்கள் சமயக் கோட்பாடுகளையோ, கொள்கைகளையோ புதியதாக உலகிற்கு அளிக்கும் ஆற்றலற்றவர்களாகவே இருந்து வருகின்றனர்.

புதிய கருத்துகளும் சமய வழக்குகளும் பௌத்த சமயத்தின் தூய்மையைக் கெடுக்க நேரிட்டபோதெல்லாம், பௌத்த உலகம் பழைய மரபுகளை உணர்வதற்கும், தங்கட்கு வழிகாட்டும் தலைவர்களைப் பெறுவதற்கும் இம் மகாவிகாரையை எதிர்பார்த்து நின்றது. இங்குத் திரிபீடகங்கள் முதல் நூலின் தூய்மை கெடாது காப்பாற்றப்பட்டு வரு-

-கின்றன. பெருஞ்சிறப்போடு போற்றப்படும் பௌத்த சமயக் கலைஞானத்தின் உறைவிடமாய் விளங்கும் இவ்விடத்திற்குப் பல அறிஞர்களும், துறவிகளும், அயல்நாட்டு யாத்திரிகர்களும் தவருது சென்று கண்டு மகிழ்கின்றனர்.

## திசனின் சமயப் பணி (கி. மு. 250-210)

தேவனும்பிரிய திசன் பௌத்த சமயப் பழம் பொருள் சின்னங்களைத் தேடியெடுத்து வருவதற்காக, இன்னொரு முறை பாடலிபுத்திரத்திற்குத் தூதர் குழு ஒன்றை அனுப்பினன். அக்குழுவினர் புத்தர் பெருமானின் 'திருவோட்டை' (பிச்சை ஓட்டை) எடுத்துக்கொண்டு வந்ததாகத் தெரிகிறது. அவ்வோடு, ஒரு தகோபா (Dagoba)[1] வில் வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிறது. இன்றும் அது தூபராம தகோபா (Thuparama Dagoba) என்னும் பெயரால் வழங்கிவருகிறது.

தேவனும் பி(ரி)ய திசன் பல கோயில்களைக் கட்டியதாகத் தெரிகிறது. இவையாவும் இலங்கையில் முதன்முதல் புத்தசமயத்தைப் போற்றிய புரவலன் திசன் என்பதை அறிவிக்கின்றன. மிகக் குறுகிய காலத்திலேயே, பௌத்த சமயத்தின் சிறப்புமிக்க வளர்ப்புப் பண்ணையாக இலங்கை மாறியது. ஈராயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகும், இலங்கை அச்சிறப்புடன் விளங்கி வருகிறது.

## திசனின் வழி வந்த அரசர்

துட்டகாமணி (கி. மு. 161-137) என்ற அரசனுடைய ஆட்சிக்காலத்தில், மாபெரும் தூபிகை இலங்கையில் கட்டப்

---

1. 'தாது கோபுரங்கள்' பௌத்த சமயத்தின் சிறப்புமிகு சின்னமாகும். 'தாது கர்ப்பம்' எனும் வடமொழிச் சொல்லின் திரிபே தகோபா (Dagoba) இது சமயச்சார்பான சின்னங்கள் வைக்கப்பட்டுள்ள அறையை முதலில் சுட்டியது. பின்னர், அவ்வறையைக்கொண்ட நினைவுச் சின்னத்திற்கு இப்பெயர் வழங்கத் தொடங்கியது.

பட்டது. இந்தியாவின் சிறப்புமிக்க பௌத்த விகாரை களிலிருந்து, துறவிகள் பலர் அவ்விழாவிற்கு வந்தனர். அவர்கள்முன்னிலையில் புனித நீராட்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்ட இந்தியநாட்டு பௌத்த துறவிகளின் பெயர்களை மகாவமிசம் குறிப்பிடுகிறது.

இலங்கை நாட்டு புத்த சமயத்தின் வரலாற்றில் வட்ட காமணி (கி. மு. 89-77)யின் ஆட்சி, சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. இம்மன்னனுடைய ஆட்சிக்காலம் வரையில் பௌத்த சமயத்தின் 'புனிதமறைகள்' மகேந்திரன் ஓதுவித்த வாறே, வாய்மொழியாகப் பல தலைமுறைகள் ஓதப்பட்டு வந்தன. அதாவது,இக்காலம் வரையில் பாலிமொழியிலுள்ள **திரிபிடகங்கள்** போன்ற புனித மறை நூற்கள் எழுதிப் போற்றப்படாமல், 'நினைவு'என்ற எழுத்தாணியால், மனித னுடைய 'உள்ளமாகிய' சுவடியில் மட்டும் எழுதி வைக்கப் பட்டிருந்தன. இவ்வரசன் காலத்தில், அப் புனித நூற்களை எழுதிப் படிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ் வரும்பெரும் செயலைச் செய்வதற்கு 500 ஓதுவார்களும் படி யெடுப்பவர்களும் பயன்படுத்தப்பட்டனர். இந்தியாவில் பாலிமொழியில் முதன்முதலில் எழுதி வைக்கப்பட்ட 'திரி பிடகங்கள்' இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டன. இலங்கையில் எழுதிப் போற்றப்பட்ட பாலிமொழி திரிபிடகங்களே பௌத்த உலகிற்கு இன்று உதவிபுரிந்து வருகின்றன.

இலங்கையில் பௌத்தசமயம் பெற்ற செல்வாக்கினை மதிப்பிட்டு உரைக்க இயலாது. இலங்கையின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் பெரும் பகுதி புத்த சமயத்தி லிருந்து பெறப்பட்டவை என்று கூறினால், அது மிகையா காது. இலங்கையின் இலக்கிய மொழியாகப் பாலிமொழி அந்நாளிலேயே சிறப்புற்று விளங்கலாயிற்று. இன்றும், அம மொழி ஆக்கமும், ஊக்கமும் பெற்று விளங்குகிறது.

## ஆந்திரர் கண்ட இலங்கை

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு, இந்தியாவில் ஆந்திரப் பேரரசு தலை தூக்கியது. ஆந்திர மன்னர்களுள் பலர் பௌத்த சமயத்தைத் தழுவி வாழ்ந்தனர். அசோகனுக்குப் பிறகு, பௌத்த சமயத்தைப் போற்றி வளர்த்தவர்கள் சாதவாகனப் பேரரசர்களேயாவர். அக் காலத்தில் (கி.மு.230-கி.பி. 250) அமராவதி, நாகார்ச்சுன கொண்டா முதலிய இடங்களில் ஈடு இணையற்ற பௌத்த சமயச்சார்புடைய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பல, இன்றும் அழியாமல் சிறப்புற்று விளங்குகின்றன அதே காலத்தில், இலங்கையிலும் புத்த சமயம் செழித்தோங்கியது. பேரார்வத்துடன் இலங்கை மன்னர்கள் அதைப் போற்றி ஆதரித்தனர். இதனால், இலங்கைக்கும் ஆந்திர நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டாயிற்று.

இலங்கையில் பௌத்த சமய நூற்கள் பேரளவில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அதனால், அந்நாட்டிற்கு இந்தியாவிலிருந்து எண்ணற்ற பௌத்த துறவிகளும் சான்றோர்களும் சென்றனர். நாகார்ச்சுனரும், அவருடைய சீடர்களும் இலங்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். பிற்காலத்தில் புத்ததேவரும், புத்த தத்தரும் இலங்கையின் சிறப்புமிகு நூல்நிலையங்களைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இலங்கையிலிருந்து வந்த பௌத்த துறவிகள் சிலர் நாகார்ச்சுனருடைய மாணவர்களாகக் கல்வி பயின்றனர். ஆரிய தேவர் என்பவர் நாகார்ச்சுனரின் சீடர்களுள் சிறப்பு மிக்கவராவார். தம்முடைய வாழ்நாளின் பெரும்பகுதியை அவர் நாகார்ச்சுனரிடம் சமய சாத்திரங்களைக் கற்பதிலேயே கழித்தார். அவர் தம்முடைய வாழ்நாளின் இறுதிப் பகுதியில், தம் தாயகத்திற்குத் திரும்பிச்

சென்று, பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்.[1]

ஆந்திரநாட்டு அமராவதி சிற்பக்கலையின் பாணியும், நேர்த்தியும், இலங்கையில் அக்காலத்தில் கட்டப்பட்ட தூபி களில் காணப்படுகின்றன. துட்டகாமணியின் சிலையும், பிற சிற்பங்களும் அமராவதிக் கலைப் பாணியைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை என்பதை அவற்றைக் காணும் பொழுதே நாம் எளிதில் உணரலாம்.

## குப்தர்கள் காலத்திய இலங்கை

காலப்போக்கில் இலங்கையில் வாழ்ந்த பௌத்த துறவி கள், தன்னலச் செருக்கினாலும், போட்டி மனப்பான்மை யாலும் அரசியலில் ஈடுபடலாயினர். அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரர்களுக்கு இடையே போட்டி உண்டா கிய பொழுதெல்லாம், தங்களுக்குள்ளே எதிரிகளாக விளங் கிய பௌத்தசமய மடங்களுள், ஒன்றின் ஆதரவை, அவர்கள் நாடலாயினர். அவர்களுள் வெற்றி பெற்றவர்கள், அரசர் களானவுடன், தங்கள் எதிரியை ஆதரித்த பௌத்த மடத் தினை அழிக்கத் தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில், மகாசேனன் இலங்கையின் அரசனானான். உடனே, அவன் மகாவிகாரையைச் சேர்ந்த துறவிகளை எல்லாம் துன்புறுத்தி னான். பதவிப் போராட்டத்தில் தமக்கு உதவிபுரிந்த 'அபய கிரி தம்மருசி' சங்கத்திற்கு அவன் பேராதரவு தந்தான்.

மகாசேனன் (கி.பி. 276—303) பதினேழு ஏரிகளைத் தன்னாட்டில் நிறுவினான். அவற்றுள் மிகப் பெரியது 'மின் னேரி' என்பதாகும். அவன் பல தூபிகளையும் கட்டினான். அவனுடைய மகன் மேகவர்மனின் (கி.பி. 303—311) ஆட்சி இலங்கையின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

---

1. K. R. Subramaniam, Buddhist Remains in Andhra. P. 151.

இந்தியப் பேரரசனான சமுத்திர குப்தனோடு, அவன் நட்புறவு கொண்டிருந்தான். குப்த பேரரசின் உதவியினால், அவன் புத்தர் பெருமானின் எஞ்சியிருந்த திருப்'பல்லினை'த் தன் நாட்டிற்குக் கொண்டு சென்றான். அதைத் தகோபா ஒன்றில் வைத்துப், புனிதமிக்கதாக அவன் போற்றிச் சிறப்பித்தான்.

## பாகியான் கண்ட இலங்கை

புகழ்மிக்க சீன யாத்திரிகரான பாகியான், இந்தியாவிலிருந்து கி.பி. 412 இல் இலங்கைக்குச் சென்றார். அவர் இலங்கைத்தீவு முழுவதிலும் புத்தசமயம் பரவி இருப்பதைக் கண்டார். புத்தரின் 'திருப்பல்' புனிதத் தன்மையோடு போற்றப்படுவதைக் கண்டு அவர் வியந்தார். புத்தரின் ' பிச்சையோடு ' (திருவோடு) மக்களால், பெரிதும் போற்றப்பட்டதாம். அதைப் பற்றிய பல வியத்தகு கதைகள் மக்களிடையே வழங்கி வந்தன. பாகியான் இலங்கையில் தங்கியிருந்தபொழுது, இந்தியாவைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவர் அத் 'திருவோட்டின்' மாண்பினைப் பற்றிச் சிறந்ததொரு சொற்பொழிவு செய்தாராம். பாகியான் இரண்டாண்டுகள் இலங்கையில் தங்கியிருந்தார். பௌத்த சமயத்தின் முக்கிய நூல்கள் பலவற்றை அவர் சேகரித்தார். அக்காலத்தில் மகாவிகாரையைவிட, 'அபயகிரி' பௌத்த மடாலயமே சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதென்று தெரிகிறது. அபயகிரியில் 5000 துறவிகளும், மகாவிகாரையில் 3000 துறவிகளும் தங்கியிருந்ததாகப் பாகியான் குறிப்பிட்டுள்ளார்.[1]

## இலங்கையில் புத்தகோசர்

பாகியானுக்குப் பிறகு, புத்த கோசர் இலங்கைக்குச் சென்றார். அவர் புத்த கயாவில் பிறந்த பார்ப்பனர். அவர்

[1] K. A. Nilakanta Sastri, Foreign Notices of South India, pp. 68-73.

புதிதாகப் புத்தமதத்திற்கு மாற்றப்பட்டார். புதுமை மோகத்தாலும், ஆர்வத்தாலும் அவர் சமயதத்துவ நூல் களையும் மற்றக் கலைகளையும் கற்று வல்லவரானார்; பாலி மொழியினைக் கற்று, அம்மொழியில் சிறந்த புலமையினைப் பெற்றார். அவர் இலங்கைக்குச் சென்றபொழுது மகாநா மன் (கி.பி. 410—432) என்ற அரசன் ஆண்டுவந்தான். அக்காலத்தில், பாலிமொழி, செல்வாக்கு இழந்திருந்ததைக் கண்டு அவர் வருந்தினார். பௌத்த சமயத்தின் புனித நூற்கள் எல்லாம் சிங்கள மொழியில் எழுதிப் போற்றப்படுவதை அவர் கண்டார். ஆயினும், மனச்சோர்வு அடையாது, அவர் முதலில் சிங்கள மொழியைக் கற்றார். பின்னர், சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த சமய நூல்களைப் பாலிமொழி யில் மொழிபெயர்த்தார். அவர் சிங்கள மொழியில் 'தூய நெறி' எனப் பொருள்படும் 'விசுத்தி மார்க்கம்' என்னும் நூலினை எழுதி, பேரும் புகழும் பெற்றார். அந்நூல் பௌத்த சமயஅறத்தைப் போதிக்கும்தத்துவ நூலாகப் போற்றப்படு கிறது.

# தமிழகமும் ஸ்ரீ லங்காவும்

## தொல்பழங்காலத் தொடர்பு

உலகம் தோன்றி வளர்ந்த காலத்தில், அதனுடைய பகுதிகள் பலவற்றைக் கடல்கொண்டது என்று புவியியல் அறிஞர்கள் அறிவிக்கின்றனர். இக்கடல்கோள்களைப் பற்றிய கதைகளை ஒவ்வொரு நாட்டிலும் வாழுகின்ற மக்களின் இன மரபு (Ethnology) வரலாற்றோடு இணைத்துக் கூறும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் இக்கடல்கோள்களைப் பற்றிய குறிப்புகள் சில காணப் படுகின்றன.

மூன்று தமிழ்ச் சங்கங்களைப் பற்றிய வரலாறு, கடல்கோள்களைப் பற்றிய கதைகளோடு கலந்து காணப்படுகிறது. இன்றைய தமிழகத்தின் தெற்கே, தொல்பழங் காலத்தில் ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது. அங்கே பல ஆறுகளும், மலைகளும் இருந்தன. மேலும் பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட 49 நாடுகளைக்கொண்ட ஒரு பெரிய நிலப்பரப்பாக அது இருந்ததென்று உரையாசிரியர்கள் கூறுவர். கடல் கொந்தளிப்பினால் அப்பெரும் நிலப்பரப்பு கடலுள் மறைந்ததை,

வடிவேல் எறிந்த வான்பாகை பொறுது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

(சிலப். 111: 18–20)

என்று சிலப்பதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. கடல்கொண்ட தென்னாட்டைக் 'குமரி நாடு' என்று குறிப்பிடுவது மரபு. மேனாட்டு அறிஞர்கள், அதனை 'லெமூரியா' (Lemuria) என்னும் பெயரினால் இக்காலத்தில் குறிப்பிடுகின்றனர். கடல்கொள்ளப்பட்ட தென்னாட்டைப் பற்றிய குறிப்புகள், இலங்கையின் காலவழிச் செய்திக்கோவையான மகாவமிசத்திலும் காணப்படுகின்றன.

அப்பெரும் நிலப்பரப்பு அழிந்தபொழுது, அதன் பகுதி ஒன்று அழியாமல் நின்றதென்று புவியியல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அப்பகுதியைச் சார்ந்து புதிய நிலப்பரப்பு ஒன்று தோன்றியது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மறைந்துபோன குமரிக்கண்டத்திலிருந்த 'ஏழ்பனை நாடு' இருந்த இடமே, ஒரு தீவாக மாறியதென்றும், அதனால்தான் அத்தீவு 'ஈழம்' என்ற பெயர் பெற்றதாகவும் அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். 'ஏழ்பனை நாடு' என்ற பெயரே, 'ஈழம்' எனத் திரிந்ததாகவும், அதன் வடபகுதியில் யாழிசையில் வல்ல பாணர்கள் வாழ்ந்துவந்தமையால், அப்பகுதி 'யாழ்ப்பாணம்' என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர்.[1] தமிழர்கள் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றினர் என்று திருத்தந்தை ஹீராசுப் (Father Heras) பெருந்தகை போன்றவர்கள் கருதுகின்றனர்.[2] இக்கருத்தினை அரண் செய்யும் வகையில் அண்மைக்காலத்திய ருஷியநாட்டு அறி

---

[1] முதலியார் இராசநாயகம், யாழ்ப்பாணச் சரித்திரம், அதி. 2.

[2] Father Heras, studies in the Proto-Indo Mediterranean Culture, p. 475.

ஞர்களின் ஆராய்ச்சி அமைந்திருக்கிறது. எனவே, தொல் பழங்காலத்தில் தமிழரின் தாயகமாக விளங்கிய நிலப்பரப் பின் ஒரு பகுதியே இலங்கை என்று கூறினுல், அது தவ ருகாது. பரணவிதாரு (Paranavitana) எனும் சிங்கள வரலாற்று அறிஞர், 'கடல்கொள்ளப்பட்ட (முதற்சங்கம் இருந்த) தென்மதுரையில் இருந்தே விசயனும், அவனுடைய தோழர்களும் தங்களுடைய மனைவியரைப் பெற்றதாக மகாவமிசத்தால் அறியப்படுகிறது[2] என்று மொழிந்துள் ளார். இதனுல் தலைச்சங்கம் சிறப்புற்று விளங்கிய தென் மதுரை, கி மு. ஆறும்—ஐந்தாம் நூற்றுண்டுகளில் பாண்டி யரின் தலைநகரமாக விளங்கியமை தெரிகிறது. அயல்நாட்டு இலக்கியமான மகாவமிசம் இவ்வாறு சான்று பகருவதை எளிதில் யாரும் புறக்கணிக்க இயலாது.

மகாவமிசத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் கடல் கோள்கள் மேற்கண்ட கருத்துகளை அரண் செய்கின்றன. "இலங்கையில் தோன்றிய மூன்று கடல்கோள்களுள் முதற் கடல்கோள் கி.மு. 2387இல் இலங்கையை இந்தியாவினின் றும் பிரித்தது; இரண்டாம் கடல்கோள் கி.மு.504இல் நிகழ்ந் தது. ஆயினும், குறிப்பிடத்தக்க பேரிழப்பு இல்லை. மூன்றும் கடல்கோள், அசோகன் காலத்தில் வாழ்ந்த தேவனும் பி(ரி)ய திசன் காலத்தில் கி.மு. 306இல் உண்டானது. அத னுல், இலட்சம் ஊர்களும் மீன்பிடிப்பவர் வாழ்ந்த சிற்றூர் கள் 910ம் முத்தெடுப்பவர் வாழ்ந்த நானூறு சிற்றூர்களும் அழிந்தன"[3] என்னு செய்தி இங்குக் கருதத்தக்கதாகும்.

இங்குக் குறிப்பிடப்படும் முதற் கடல்கோள், குமரி கண்டத்தின் கடைசிக் காலகட்டத்தில் உண்டானதாகலாம். இரண்டாம் கடல்கோள், தலைச்சங்கம் இருந்த தென்மதுரை

---

1 Alexander Kondratov, The Riddles of Three Oceans, pp. 150-154

2 S. Paranavitana, History of Ceylon, vol. I ; p. 96

3 J E. Tennent, Ceylon, Vol. I; P.7, F.N.

அழிவதற்குக் காரணமானதாக இருந்திருக்கலாம். இக்கடல் கோள் கி.மு.504இல் நிகழ்ந்தது என்பதனுல், விசயன் இலங் கையில் குடியேறிய பிறகு, இப்பேரழிவு தமிழகத்திற்கு உண்டாகியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இதற்குப் பின்னர், பாண்டிய மன்னர் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். இக்கபாடபுரத்தை வான்மீகி இராமாயணமும் கௌடில்யரின் அருத்த சாத்திரமும் சுட்டு கின்றன. இங்குத்தான் இடைச்சங்கம் நிலவியதாகத் தெரி கிறது. இப்பெரும் நிலப்பரப்பும் கி.மு. 306இல் உண்டான மற்ெருரு கடல் கொந்தளிப்பினுல், நீருள் மூழ்கியது என்பதை அறிகிறேம். இதன் பின்னரே, இன்றைய மதுரை யைத் தலைநகரமாகக் கொண்டு பாண்டியர் ஆட்சிபுரியலாயி னர் என்பதும் புலனுகின்றது.

"பண்டைக்காலத்து உலகமெங்கும் கப்பல் ஓட்டிச் சென்று வாணிகம் புரிந்த தமிழர், ஈழத்தையும் நன்கறிந்து அதனுடன் வாணிகம் நடாத்தியே இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சங்கமித்திரை வெள்ளரசங்(போதி மரக்) கிளைகளுடன் யாழ்பாணைக் குடா நாட்டின் வடபகுதித் துறை ஒன்றில் இறங்கினுர் என்று பௌத்த நூல்கள் கூறு கின்றன. அத்துறை திருவடிநிலைக்கருகிலுள்ள, 'கோதை மழுவை' என்னும் துறையாகும். 'போதி மழுவை'ப் பிற் காலத்தில் 'கோதை மழுவை' எனத் திரிந்தது. இந்நிகழ்ச்சி ஒன்றே, தென்னிந்தியாவிற்கும் வடஇலங்கைக்கும் உள்ள தொடர்பு கி.மு. மூன்றும் நூற்றுண்டிற்கு முந்திய தென் பதை உண்மைப்படுத்துகின்றது."[1]

## சங்ககாலத்தில் (கி.மு. 300-கி.பி. 300) தமிழகமும் இலங்கையும்

பேரரசன் அசோகனுடைய இரண்டாம், பதின்மூன்றும் பாறைக் கல்வெட்டுக் கட்டளைகள் (Rock Edicts), தென்னிந்

[1] க. நவரத்தினம், இலங்கையில் கலை வளர்ச்சி, பக். 5-6.

திய அரசுகளையும், இலங்கையையும் குறிப்பிடுகின்றன இரண்டாவது பாறைக்கல்வெட்டுக் கட்டளையில், சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரள (சேர) புத்திரர் எனும் தமிழக அரசகுடிகளும் தாம்பபன்னியென இலங்கையும் சுட்டப்பட்டுள்ளன.[1] இதனால், அசோகர் காலத்தில் தமிழகம் முப்பெருவேந்தர்களின் கீழ், சீரும் சிறப்புமுற்று விளங்கியதை அறிகிறோம். எனவே, அசோகனுடைய ஆட்சிக்காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டைக் கடைசங்க காலத்தின் மேல் எல்லையாகக் கொள்ளலாம். பல்லவர் பற்றிய குறிப்பு சங்கப் பாடல்களில் காணப்படவில்லை. எனவே, பல்லவர்கள் தமிழகத்தில் கால்கொள்ளத் தொடங்கிய கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சங்ககாலத்தின் கீழ் எல்லையாகக் கொள்ளலாம்.[2] இவற்றிற்கு இடைப்பட்ட அறுநூறு ஆண்டுக்காலத்தில் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய அரசியல், பண்பாட்டுத் தொடர்புகளை இங்குக் காண்போம்.

## தாமிழிக் கல்வெட்டுகள்

அசோகருடைய கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துவடிவத்தைப் பிராமி எழுத்துகள் என்பர். அக்காலத்தில், தமிழகத்தின் தேவைக்கேற்பப் பிராமி எழுத்துகளின்வடிவஅமைப்பில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டு, திரிந்த வடிவங்களோடு வழங்கப்பட்டன. இந்தத் தென் பிராமி எழுத்துகளை இலங்கையின் பண்டைப் பாலிமொழி நூல்கள், ''தாமிலி-தாமிழி'' எனும் பெயர்களால் சுட்டுகின்றன.[3] அவ்வெழுத்துகளில், தமிழகத்தின் மலைமுழைஞ்சு

---

[1] D.C. Sircar, (Ed.) Inscriptions of Asoka, P. 47

[2] இதன் விளக்கத்தை, ஆசிரியரின் 'சங்ககாலக் குறுநில மன்னர்' என்னும் நூலில் காண்க.

[3] R. Nagaswamy (Ed.) Seminaron Inscriptions, P. 52

களிலும் பாறைகளிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பலவற்றை முதன்முதல் (அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் கல்வெட்டாய்வாளர்) திரு K.V. சுப்பிரமணிய ஐயர் கண்டு பிடித்து, விளக்கத்தோடு பதிப்பித்துள்ளார். அக்கல்வெட்டுகள் யாவும் கி.மு. மூன்றும் நூற்றுண்டிற்கும் இடைப்பட்டனவாகும்.[1]

அவற்றுள் சில, இலங்கையைச் சேர்ந்த வாணிகர் சிலர் தமிழகத்தில், துறவிகள் தங்குவதற்கு மலேகளில் குகைகளும், படுக்கைகளும் குடைந்து தந்த செய்திகளேத் தெரிவிக்கின்றன. அவற்றுள்,

எருகோடூர் ஈழக்குடும்பிகன் போலாலேயாம்
செய்த ஆய்ச்சயன் நெடுசாதன்

எனும் கல்வெட்டு குறிப்பிடத் தக்கதாகும்.[2] இதனே "எருக்காட்டூர் ஈழக்குடும்பிகன், ஆசாரியன் (அச்சன்) நெடுஞ்சாத்தனுக்காகப் பாழி (பள்ளி) ஒன்றை எடுப்பித்தான்" எனத் தமிழாக்கம் செய்துள்ளனர். இக்கல்வெட்டின் எழுத்து அமைதியைக் கொண்டு, இது கி.மு. இரண்டாம் நூற்றுண்டாகலாம் என முடிவும் செய்துள்ளனர். இதனுல் கி.மு. இரண்டாம் நூற்றுண்டு அளவில், இலங்கையைச் சேர்ந்த இல்லறத்தான் (குடும்பிகன்) ஒருவன் தமிழகத்தில் 'குன்றுறை தவசியர்' தங்குவதற்குப் பாழி ஒன்றை எடுப்பித்தான் என்பது தெரியவருகிறது.

மற்றும், அரிட்டாபட்டி (மாங்குளம்) எனும் இடத்தில் கிடைத்துள்ள மற்ருெரு தாமிழிக் கல்வெட்டு, நம் கருத்தைக் கவருவதாகும். இக்கல்வெட்டு வாசகத்தை ஒரு வகையாக

---

[1] H. Luders Berliu, A List of Brahmi Inscriptions from the Earliest Times to A.D. 400, PP. 1-6.

[2] K. V. Subramaniya Ayyar, Historical Sketches of Ancient Deccan, Vol. 3 ; p. 17

K. V. சுப்பிரமணிய ஐயர் படித்துள்ளார். பிற்கால ஆராய்ச்சியாளரான நாராயண ராவ் என்பவர் பின்வருமாறு அதனைக் கொண்டுள்ளார்:

ஊர் ஊராகச் சுற்றி வாணிகம் செய்யும்
ஈழத்து வாணிகரின்
தலைவனான சாரிகன் கணக்கனுடன் சேர்ந்து,

சிறப்புமிக்க இயக்கர் (yaksha)களுக்கு இந்தச் சைத்தியத்தை (பாழியை)ப் படைத்துள்ளான்[1] என்பதாகும்.

இக்கல்வெட்டுகளினால், ஈழத்தைச் சேர்ந்த வாணிகர்கள் தமிழகத்தில், செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம். மற்றும், தங்கள் நாட்டில் பௌத்த சமயத் துறவிகளுக்கு மன்னரும், பிரபுக்களும் சைத்தியங்களை அமைத்துத் தருவதை, ஒருவகை அறச்செயலாகக் கருதியதைப்போன்று, தாங்களும் வாணிகம் செய்யவந்த நாட்டில், அத்தகைய அறச்செயலைச் செய்வதில் முனைந்து நின்றனர் என்பதும் புலனாகின்றது[2]

இத்தகைய கல்வெட்டுகள் உணர்த்தும் செய்திகள் நிகழ்ந்த காலத்தில், தமிழகமும் இலங்கையும் நேரடியான பண்பாட்டுத் தொடர்புடையனவாக விளங்கின. வாணி

---

[1] T. V. Mahalingam, Early South Indian Palaeography, p 204.

[2] இவ்வாறு அமைக்கப்பட்ட பாழிகள், பௌத்த சமயச் சார்புடையன என்று K. V. சுப்பிரமணிய ஐயர் கருதினார். அண்மைக்காலத்திய ஆராய்ச்சியாளர், 'ஆசீவக சமயத் துறவிகள் அக்காலத்தில் தமிழகத்திலும் இலங்கையிலும் வாழலாயினர். எனவே, இவ்விருவகைச் சமயத் துறவிகளுக்கும் மலையில் தங்கும் இடங்கள் அமைத்துத் தருவது வழக்கமாக இருந்திருக்கலாம்' என்பர். காண்க: டி.வி. மகாலிங்கம் முற்.கூ. நூல், பக். 174-192.

கத்தொடர்பும், சமயப் பரப்புநர்களின் நடமாட்டமும் இரு நாடுகளுக்கு இடையே பேரளவிற்குச் சிறப்புற்றிருந்தன.

இந்நிலையில், தமிழகத்தின் ஆற்றல்மிகு வீரர்கள், வீர தீரச்செயல் புரிவதில் நாட்டம்கொண்ட இளைஞர்கள் இலங்கை அரசின் வீரர்களாகவும்,படைத் தலைவர்களாகவும் கடலோரக் காவலர்களாகவும் பணிபுரியலாயினர். இதனால், தமிழகத்துக் கடல்மறவருக்கும், வீரர்களுக்கும் அந்நாட்டு அரசியலில் தலையிட—ஆட்சியைக் கைப்பற்ற—வேண்டும் என்னும் எண்ணம் எழலாயிற்று. இதற்குகந்த காலத்தை எதிர்நோக்கி அவர்கள் காத்திருந்தனர்.

## தமிழரின் படையெடுப்பு

தேவனும்பி(ரி)ய திசனுக்குப் பிறகு அவனுடைய தம்பியர் மூவர், அடுத்தடுத்து சில ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். அவர்களுள், சூரத்திரசன் என்னும் தம்பி ஆற்றலற்றவனாக இருந்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் (கி.மு. 206) சேனன், குத்தகன் எனும் இருதமிழ்நாட்டு வீரர்கள் இலங்கையின் மீது படை யெடுத்தனர். அவர்கள் குதிரை வாணிகம் செய்துவந்த கப்பல் தலைவனுடைய பிள்ளைகளாவர். தமிழகத்திலிருந்து பெரும்படையுடன் இலங்கைக்குள் அவர்கள் நுழைந்தனர். அவர்களுடைய தாக்குதலை எதிர்த்து நிற்க இயலாத அரசன், அனுராதபுரத்தைவிட்டு ஓடினான். சேனனும் குத்தகனும் சேர்ந்து இருவருமாகச் சில ஆண்டுகள் கூட்டாட்சி நடத்தினர். அவர்கள் நேர்மையாக ஆட்சிபுரிந்ததோடு, பௌத்த சமயத்திடத்து பரிவுடையவர்களாகவும் விளங்கினர். இதனால், இலங்கை மக்களிடம் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இச்சேனனும், குத்தகனும் தமிழகத்தின் எப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதோ, எக்காரணத்திற்காக இலங்கையின்மீது படையெடுத்தனர் என்பதோ தெரியவில்லை. குழப்பமான அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, இவர்கள் இலங்கையின் அரசைக் கைப்பற்றினர் போலும்.

ஆனால், இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தேவனும் பி(ரி)யதிசனுடைய மற்றொரு தம்பியான அசலன், இவர்களுடைய ஆட்சிக்கு ஒரு முடிவுகட்டினான். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடம்பை நதி, தலைநகரைச் சார்ந்து ஓடு மாறு திசை திருப்பிவிடப்பட்டமை சிறப்புமிக்க செய்தியாகும். சிங்கள மொழியில் காணப்படும் மிகப்பழைய கல்வெட்டு ஒன்று, பிராமியின் மிகப்பழைய எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அது, அனுராதபுரத்தில் அக்காலத்தில் இருந்த தமிழரின் மண்டபம் ஒன்றைச் சுட்டுகிறது. அங்குத் தமிழர்கள் ஒன்றாகக் கூடிக் கலந்து அளவளாவுவராம்.[1]

## ஏலேலசிங்கனும் ஈழமும் (கி.மு. 205-161)

இறுதியாக ஆண்ட திசனின் தம்பியர் இருவர் காலத்திலும் இலங்கையில், தமிழர்களின் கை மேலோங்கியது. தமிழகத்துச் சோழ அரசனின் படைத்தலைவனான ஏலேலசிங்கன், கி.மு. 205 அளவில் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்றான். சிங்கள மன்னனை விரட்டிவிட்டு, நாற்பத்து நான்கு ஆண்டுகள் சிறப்புடன் அவன் ஆட்சி புரிந்தான். அவன் தமிழனாக இருந்தபோதிலும், சிங்கள மக்கள் எல்லோரும் கண்டு வியக்கும் வண்ணம், நடுநிலையில் பிறழாது செங்கோலோச்சினான்.

தமிழகத்தில் மனுநீதிச் சோழனைப்பற்றி வழங்கும் கதையைப்போல், அவனைப்பற்றி இலங்கையில் ஒரு கதை வழங்குகிறது. தன் அரண்மனை வாயிலில் ஏலேலன் ஓர் ஆராய்ச்சி மணியைக் கட்டிவைத்தான். அரசனிடம் தங்கள் குறையை முறையிட விரும்புகிறவர்கள், அம்மணியை வந்து ஆட்டியதும், அரசன் வந்து விசாரிப்பான். ஒருநாள் இவ்

---

[1] G. C. Mendis, Ceylon in 'A Comprehensive History of India', Vol. 2. 'The Mauryas and Satavahanas,' p. 579.

வரசனது 'ஒரு குலத்திற்கு ஒருமைந்தனுக' விளங்கிய இளவரசன், வெளியில் சென்றபொழுது ஒரு பசுவினுடைய கன்றின்மீது தன் தேரைஏற்றிவிட்டான்; கன்று இறந்துவிட்டது. சொல்லொணுத் துன்பத்திற்கு ஆளாகிய தாய்ப்பசு, சீற்றங்கொண்டு அரண்மனைக்கு ஓடியது. அங்கு வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்த மணியைப் பசு ஆட்டியது. உடனே, அரசன் ஓடிவந்தான். பசுவின் கண்ணீரைக்கண்டு அவன் உள்ளங் கசிந்து உருகினுன். பிறகு, நிகழ்ந்ததை அறிந்தான். தனது ஒரே மகனை, அத்தேரின் சக்கரத்திலிட்டுத் தண்டித்தான். இதைப்போன்று, ஏலேலசிங்கனின் அறநெறி பிறழாத ஆட்சியை விளக்கும் கதைகள் பல மகாவமிசத்தில் இடம் பெற்றுள்ளன.

ஒருமுறை, அவன் தேரில் சென்றபொழுது, தேரின் நுகத்தடி பட்டு, புத்த சமயத்தினரின் தகோபா ஒன்று இடிந்துவிட்டதாம். உடனே, அவன் நிலத்தில் படுத்துக்கொண்டு, தன்மீது தேரினைச் செலுத்திக் கொலை செய்யுமாறு பௌத்தத் துறவிகளை வேண்டினுனும். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த துறவிகள், 'புத்தர் பெருமான் இக்கொடுஞ்செயலை விரும்பமாட்டார்!' என்று கூறினராம். உடனே, தான் செய்த தவற்றுக்குக் கழுவாய்த் தேடும் வகையில், 15,000 காசுகள் செலவழித்து, பழுதுபட்ட அத் தகோபாவை அவன் செப்பம் செய்து, புதுப்பொலிவுடன் விளங்குமாறு செய்தான் என்பது மகாவமிசம் கூறும் மற்ெருரு கதையாகும். இவை யாவற்றையும், முற்றிலும் உண்மையெனக் கொள்ளுவதற்கு இல்லை எனினும், இவை ஏலேல சிங்கனுடைய நீதி வழுவாத, குடிநலம் காத்த நல்லாட்சியின் மாட்சிக்குச் சான்று பகருவதாகக் கொள்ளலாம்.

தன்னுடைய ஆட்சிக்காலத்தில், இலங்கையின் தற்காப்புக்காக வலிமைமிக்க அரண்களுடைய 33 கோட்டைகளை அவன் கட்டினுன். பயிற்சிமிகு படைகளை அவற்றில் அமைத்துத் தன்னுடைய ஆட்சியை எளிதில் உள்நாட்டுப் பகைவர் அழித்தொழிக்காவண்ணம் அவன் கட்டிக்காத்தான். திரு

வள்ளுவரின் தலைமைச் சீடனாக இந்த ஏலேலசிங்கன் விளங்கினான் என்பது ஒரு மரபுவழிச் செய்தியாகும். திருவள்ளுவர் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருதுவோர், இதையும் ஓர் அடிப்படைச் சான்றாகக் காட்டுவர்.[1]

ஏலேலசிங்கன் செங்கோலனாக ஆட்சிபுரிந்த போதிலும், அவனை வெளிநாட்டான் என்று சிங்களவர்கள் வெறுத்தார்கள். கி.மு. 161இல் சிங்கள இளவரசனான துட்டகாமணி புத்த சமயத்தைக் காப்பதற்காகச் சிங்களவர்களை ஒன்று சேர்த்து, பெரும்படை ஒன்றைத் திரட்டினான். அப்படையினைக்கொண்டு, அவன் ஏலேலசிங்களை எதிர்த்துப் போரிட்டான்; போரில், அவன் வெற்றியும் பெற்றான். அவனுடைய தகப்பன் அத்தமிழரசன் மீது போர்த்தொடுக்கக் கூடாது என்று தடுத்தானும். ஆயினும், அவன் நாட்டின்மீது கொண்டிருந்த பற்றினால், தகப்பன் சொல்லையும் புறக்கணித்துப் போரில் ஈடுபட்டான். அதனால், அவன் 'துட்டன்' (துஷ்டன்)' என்ற பெயரையும் பெற்றான். இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு தமிழர் ஆட்சியைக் கவிழ்க்க அவன் சதிசெய்தான். ஏலேல சிங்கன் அப்பொழுது முதுமை யுற்றிருந்தான். எனவே, துட்டகாமணி அவனை எளிதில் வெற்றிகொண்டான் என்று மகாவமிசம் கூறுகிறது.

## இருபெரும் மன்னர்கள்

துட்டகாமணி (கி.மு. 161—137) சிறந்த போர்வீரன். அவன் பௌத்த சமயத்தில் அழுத்தமான பற்றுக்கொண்டவனாவான். அவனுடைய காலம் முதல் புத்தசமயம் இலங்கையின் தேசிய சமயமாகவும், அங்குக் குடியேறியிருந்த தமிழர்களின் சமயம் அயல் நாட்டிற்குரிய புறச் சமயமாகவும் கருதப்பட்டன. அவன், அனுராதபுரத்தைச் சிறந்தொரு

[1] V. R. Ramachandra Dikshitar, Studies in Tamil Literature and History, p. 133.

நகரமாக்கினன். துட்டகாமணி 'லோகமகா பாயா' என்ற பித்தளை மாளிகையையும்', 'ருவான் வெலிசாயா' என்ற தகோபாவையும் கட்டியதாகச் சிங்களக் காலவழிச் செய்திக் கோவைகள் கூறுகின்றன. 'லோகமகா பாயா' என்பது ஒன்பது அடுக்குகளைக்கொண்ட அழகுமிக்க மாளிகையாகும். அதனுடைய கூரை பித்தளையால் வேயப்பட்டது. நூற்றுக் கணக்கான பௌத்த துறவிகள் தங்குவதற்கு ஏற்ற மடாலய மாக அது விளங்கியது. 'ருவான் வெலிசாயா' தகோபா விற்கு அடிக்கல் நாட்டியபொழுது, காஷ்மீரத்திலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பல விருந்தினர் களும், அலெக்சாண்டிரியா துறைமுகப் பட்டினத்தின் பெருஞ் செல்வர்களான வாணிகர்களும் இலங்கைக்கு வந்து, அவ்விழாவில் கலந்து கொண்டனராம்.

துட்டகாமணியிடம் தோல்வியுற்ற தமிழர்கள், மனச் சோர்வு அடையாது, தக்கசமயத்தை எதிர்பாத்துக் கொண் டிருந்தனர். வலிக்கம்மா எனப்படும் வட்டகாமணி (கி. மு. 89-77) காலத்தில், மீண்டும் தமிழர்கள் படையெடுத்து வந்தனர்.

## தமிழரின் படையெடுப்பு

வட்டகாமணி இலங்கையின் அரசனுனன். அவன் ஆட்சிக்கு வந்த ஐந்தாவது மாதத்தில், ஏழு தமிழ்த் தலை வர்கள் இலங்கையின் மீது படையெடுத்து வந்தனர். அப் பொழுது, தனக்கெதிராகக் கலகம் செய்யத், தன்னு டைய படைத் தலைவன் ஒருவனை எதிர்க்குமாறு இவ்வரசன் அவர்களை வேண்டிக் கொண்டான். அதனுல், தமிழ்ப்படை அந்தச் சிங்களப் படைத் தலைவனை அடியோடு அழித்தது. பின்னர், தமிழகத் தலைவர் களுக்கும்,வட்டகாமணிக்கும் கடுமையாகப் போர் நடந்தது. போரில் தோற்ற சிங்கள மன்னன், மலைப்பகுதிக்குச் சென்று மறைந்து கொண்டான். அது முதல் பதினன்கு ஆண்டுகள் அந்நாடு தமிழருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது.

அத்தமிழ்த் தலைவர்களைப் பாண்டியனுடைய அரசப் பிரதிநிதிகளாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர்கள், இலங்கையை ஆண்டு வந்தனர். முதலில் அவர்களுள் ஆட்சி புரிந்தவன் பெயர். 'புளஹத்தா' என்று மகாவமிசம் குறிப்பிடுகிறது. அவன் இலங்கையைச் சேர்ந்த சிங்களப் படைத் தலைவனாக இருக்க வேண்டும் என்றும், அவன் பாண்டியனுடைய மேலாண்மையை ஏற்றுக்கொண்டுஅவனுக்குத் திறைச் செலுத்தி இருக்கவேண்டும் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். 'பிரஹஸ்தன்' என்று வடமொழிப் பெயரே 'புளஹத்தா' என்று சிங்கள மொழியில் திரிந்து வழங்கியதாகவும் அவர்கள் கூறுவர்.

ஆரிய அரசன் பிரகத்தன் என்பவனுக்குத், தமிழ் நெறியை எடுத்துரைப்பதற்கு, புகழ்மிகு புலவர் பெருமான் கபிலர், பத்துப்பாட்டின் எட்டாம் பாட்டாகிய குறிஞ்சிப் பாட்டைப் பாடினர் என்னும் குறிப்பொன்று பத்துப் பாட்டில் காணப்படுகிறது. அந்த 'ஆரிய அரசன் பிரகத்தன் யார்?' என்பதை வட இந்திய வரலாற்றினால் அறிய முடியவில்லை. ஒருகால் அவன் சிங்களத்தின் அரசனாக இருக்கலாமோ என்று அறிஞர்கள் ஐயுறுகின்றனர். புளஹத்தன் கி. மு. 43 அளவில் ஆட்சிபுரிந்ததாகத் தெரியவருகிறது. கபிலருடைய காலமும் இவ்வரசனுடைய காலமும் ஒன்றென நாம் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், இந்தப் புளஹத்தனையே, தமிழர் பிரகத்தன் எனக் குறிப்பிட்டதாகவும், குறிஞ்சிப் பாட்டின் அடிக்குறிப்பு இவ்வரசனையே சுட்டுவதாகவும் கூறுவர்.

புளஹத்தனுக்குப் பிறகு பனைய மாறன், பிள்ளைய மாறன் என்பவர் ஆட்சிபுரிந்தனர். இவர்களுடைய பெயர்களில் 'மாறன்' எனும் சொல் இடம் பெற்றிருக்கிறது.

1. S. Krishnaswmy Aiyengar, Ancient India and South India culture Vol-62 pp. 711-L712

யாதோ ஒரு வகையில் இவர்களிருவரும் பாண்டிய அரசகுடியோடு தொடர்புடையவர்களாக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. "நக்கீரர் இயற்றிய சங்கப்பாடல் (அகநானூறு 346) ஒன்று, பாண்டியனுடைய படைத் தலைவனுகிய பழையன் மாறன் என்பவனிடம் சோழ அரசன் தோல்வியுற்றதாகத் தெரிவிக்கிறது. இந்தப் பழையன் மாறனுக்கும், இலங்கையின் மீது படையெடுத்து, வெற்றி கொண்டு ஆட்சிபுரிந்த மேற்கண்ட மாறன் என்போருக்கும் இடையே யாதாகிலும் ஒருவகைத் தொடர் இருந்திருக்கலாம்" என்பது இலங்கை வரலாற்றறிஞர் G. C. மெண்டிஸ் அவர்களின் கருத்தாகும். 1

கி. மு. 89 அளவில் வட்டகாமணி பெரும்படையுடன் பாண்டிய மன்னனின் அரசப் பிரதிநிதியைக் கொன்று, இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றினுன். இவனுடைய ஆட்சிக்காலத்தில் அபயகிரி தகோபாவும், இலங்காராமா தூபியும், ஏலேலசிங்கனின் சமாதி என்று கருதப்பட்ட தக்கண தூபியும் கட்டப்பட்டன.

இக்காலத்தில், இலங்கையின் வரலாற்றில் முதன் முதலாகப் பௌத்த சங்கத்தில் கருத்து வேறுபாடு காரணமாகப் பிளவு உண்டாயிற்று. மகாவிகாரையினின்று வெளியேறிய புத்தசமயத் துறவிகள், அபயகிரி மடத்தை அமைத்தனர். அபயகிரி மடத்தினர், தங்களை 'தம்மருசி' கிளையைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். இவ்வாறு பிளவும், பூசலும் பௌத்த சமயத் துறவிகளிடையே உண்டாயின. இதனுல், வழிவழியாக வாய்மொழி மூலம் கற்பிக்கப்பட்டு வந்த 'திரிபீடகத்தைப்' புதிய கிளையினர், தங்கள் விருப்பம் போல் மாற்றியும் திருத்தியும் பாட வேறுபாடுகளை உண்டாக்காமல் தடுக்கும் பொருட்டு, அதை முதன்முதலாக மகாவிகாரையைச் சேர்ந்தோர், ஏடுகளில் எழுதிப் போற்றத் தொடங்கினர்.

---

1. G. C. Mendis, oP. cit; P. 583.

## கரிகாலன் கண்ட இலங்கை

கிறித்துவ நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பே தமிழகத்தலைவர்கள் இலங்கையைப் பல முறை கைப்பற்றி ஆண்டதை நாம் முன்னர்க் கண்டோம். சங்க காலத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் பெருந்தகை, மதுரையில் வாழ்ந்தமை தெரிய வருகிறது.

சோழப் பேரரசர்களுள் கரிகாலன் தலை சிறந்து விளங்கினான். அவன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று பெருவெற்றி பெற்றான்; சிங்களவர் 12000 பேரைச் சிறைப் படுத்தித் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தான்; அவர்களைக் கொண்டு, தற்காலப் பொறியியல் வல்லுநர்களும் கண்டு வியக்கத்தக்க வகையில், காவிரி யாற்றிற்கு நீண்டதொரு கரையையும், பெரியதோர் அணையையும் கட்டிப் பொன்றாப் புகழ்பெற்றான். இன்று திருச்சிக்கு அருகிலுள்ள கல்லணையே கரிகாலன் கட்டியது என்பர்.

கரிகாலன் காலத்தில் இலங்கையிலிருந்து உணவுப் பொருள்கள் காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து குவிந்ததை,

> கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
> (பட்டினப். 190—191)

என்று பத்துப்பாட்டு எனும் பழந்தமிழ் இலக்கியம் குறிப் பிடுகிறது.

கரிகாலன் படையெடுத்த காலத்தில் சிறு பிள்ளையாக இருந்த கயவாகு (கி. பி. 112—134),கி. பி. 112 இல் இலங்கையின் அரசுகட்டிலேறினான். 'கஜபாகு' [யானைக்கையன்] என்னும் பெயரின் திரிபே 'கயவாகு' என்பதாகும். ஒரு

---

[1] ஈழத்துப் பூதந்தேவனார் அகம். 88, 231, 307: நற்றிணை 366: குறுந்தொகை 189, 343, 360 எனும் ஏழு சங்கப்பாடல்களைப் பாடிய புலவராவார்.

நாள் நள்ளிரவில், கயவாகு நகர் சோதனைக்குச் சென்ற பொழுது, ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டான். அப்பெண்மணியின் அழுகைக்குரிய காரணத்தை அறியும் பொருட்டு அவன், அழுகுரல் வந்த இடத்தைத் தேடிச் சென்றான். அங்கிருந்த ஓர் அம்மையைக் கண்டு, அவளுடைய அழுகைக்குக் காரணம் என்னவென்று அவன் விசாரித்தான். சோழ அரசனால், பல ஆண்டுகளுக்கு முன்பு சிறைப்படுத்திச் செல்லப்பட்ட தன் பிள்ளைகளை நினைந்து வருந்துவதாக, அவ்விதவை மொழிந்தாள். அதைக்கேட்டு, கயவாகு சீற்றம் அடைந்தான்; பழிவாங்கத் திட்டமிட்டான். அவன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். அதற்குள் கரிகாலன் மறைந்தான். கயவாகுவிடம் சோழரின் படை தோல்வியுற்றது. கயவாகு 12000 சிங்களவர்களைச் சிறை மீட்டதோடு, தமிழர்களை அழைத்துக்கொண்டு போய் இலங்கையில் குடியேற்றினான்[1] என்பது இலங்கையின் காலவழிச் செய்திக்கோவையான பூஜாவலியில் காணப்படும் செய்தியாகும்.

இதைப்பற்றிய குறிப்பு பாலிமொழியில் உள்ள காலவழிச் செய்திக் கோவைகளிலோ, வங்கநாசிக திசன் அல்லது கயவாகு போன்ற அரசர்களின் கல்வெட்டுகளிலோ, பழந்தமிழ் இலக்கியத்திலோ காணப்படவில்லை. இதனால், இது பிற்காலத்தில் எழுந்த கற்பனைக் கதையாக இருத்தல் கூடும் என்பர்.[2] கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்தான்

---

[1] H. W. Codrington, A Short History of Ceylon, PP. 23–24.
B. Gunasekara, A Contribution to the History of Ceylon, P. 21.

[2] K. A. Nilakanta Sastri, (1) Studies in the Cola History & Administration, P. 29; (2) The Colas, P. 44.

256652

எனும் செய்தியை முதன் முதல் தெரிவிப்பன தெலுங்குச் சோழர்களின் செப்பேடுகளாகும்.

கரிகாலன் குடிவழியில் வந்த அவர்கள்; புனைந்துரையாக இதைப்படைத்து மொழியத்தேவை ஒன்றும் இல்லை. மற்றும் பல்லவர் காலம் முதல், தமிழ் இலக்கியங்கள் கரிகாலன் காவிரிக்குக்கரை அமைத்ததை மறவாமல் குறிப்பிடுகின்றன. தொடர்ந்து வரும் மரபுவழிச் செய்தி, நடைபெறாத ஒன்றைத் தெரிவிக்க எழுந்திருக்க இயலாது. இப்படி ஒரு மரபுவழிச் செய்தி வழங்கிவருவதே, அந்நிகழ்ச்சிக்குத்தக்க தொரு சான்றாகும். இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறும் பழக்கம், பண்டைத் தமிழ்ப் புலவர்களிடம் காணப்படாத இயல்பாகும். எனவே, கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த வரலாறு, மெய்ம்மையாக இருக்கும் எனக் கொள்ளுவோமானால், கயவாகுவின் சாதனையும் வரலாற்று நிகழ்ச்சியாக இருத்தல் கூடும் எனக் கொள்ளுவதில் தவறில்லை.

## சங்கப்புலவர்களும் இலங்கையும்

சங்ககாலத்தில், யாழ்ப்பாணப் பகுதியில் நிலவிய பண்பாடும் தமிழகப் பண்பாடும் ஒரே இயல்புடையனவாக இருந்தன. நெடுங்காலமாக அங்கு நாகர் இனத்தவர் வாழ்ந்தனர். தொடக்க காலத்தில் அவர்கள் 'எழு' எனும் மொழியைப் பேசினர். நாளடைவில் அம்மொழி தமிழோடு இணைந்து, தமிழாகவே மாறிப்போய் விட்டது. இதனால், சங்ககாலத்தில் தமிழ் நாகரிகமே வேங்கடம் முதல் இலங்கையின் மையப்பகுதி வரை பெருவாழ்வு பெற்றிருந்தது. அக்காலம் தொட்டு இன்று வரை சமுதாயப் பொருளாதாரத் துறைகளிலும், சிந்தனைப் போக்கிலும் இலக்கிய வளர்ச்சியிலும் இவ்விரு நாடுகளும் ஒத்த இயல்புடையனவாக உள்ளன.

சங்ககாலத்தில் இயற்றப்பெற்ற பாடல்களைப் பின்னாக தொகைவகைப்படுத்தி, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை

எனும் இலக்கியங்களாகப் பண்டைத் தமிழ்ச் சான்ரேர் உலகிற்கு வழங்கியுள்ளனர். 2277 பாடல்களைக் கொண்ட அத்தொகை நூல்களை, 473 புலவர்கள் பாடியுள்ளனர்.

இவர்களுள் பலருடைய பெயர்கள் 'நாகன்' எனும் விகுதியோடு முடிவதைக் காணுகிறோம்.[1] முரஞ்சியூர் முடிநாகனர் என்பவர் காலத்தால் மிகவும் முற்பட்ட புலவராவர்; முதல் சங்கத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். அம்மெய்யநாகனர், இளநாகனர், இனிசந்தநாகனர், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனர், தீன்மதிநாகனர், நன்னாகனர், மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனர், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனர், மதுரைக் கொல்லன் வெண்ணாகனர், மதுரைப் பூதனிள நாகனர், மதுரைப் பெருமருதிள நாகனர், மருதனிள நாகனர், முப்பேர் நாகனர், விரிச்சியூர் நன்னாகனர், வெள்ளைக்குடி நாகனர் எனும் பதினறு பேரும் ஆண்பாற் புலவராவர். மற்றும் அஞ்சியத்தை மகள் நாகையார், நன்னாகையார் எனும் இரு பெண்பாற் புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். இவர்கள் பெரிதும் நாகர் குடி வழி வந்த தமிழ்மக்களாக இருத்தல் வேண்டும்.

இன்றும் தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் நாகன், நாகி, நாகமணி, நாகமுத்து, நாகம்மாள், நாகலிங்கம், நாகநாதன் எனும் பெயருடைய மக்களைக் காணுகின்ருேம். மேலும், நாகர்கோயில், நாகப்பட்டினம், நாகார்ச்சுன கொண்டா, நாகபுரி போன்ற ஊர்ப்பெயர்கள் தென்னிந்தியாவில் வழங்கி வருவதும் கருதத்தக்கது. இவற்ருல், இலங்கையின் பழங்குடி மக்களான நாகருக்கும் இந்தியத் துணைக்கண்டத்துத் தமிழ் மக்களுக்கும் யாதோ ஒருவகைத் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பது புலனுகின்றது. தமிழரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்ப் பண்பாட்டினை ஏற்றுக்கொண்டதனல், காலப்போக்கில் நாகர்

---

[1] ந.சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், பக் 5-17.

இனமக்கள் தமிழராக மாறியதோடு, தமிழ்ப் புலவர்களாக வும் சிறப்புற்றனர். இவர்களுள் முரஞ்சியூர் முடிநாகனுர் யாழ்ப்பாணத்து அரசர் குடியில் தோன்றியவர் என்பர்.[1]

ஈழத்தைச் சேர்ந்த பூதன் என்பவருடைய மகனுன தேவனுர் (ஈழத்துப் பூதந்தேவனுர்) இலங்கையிலிருந்து, தமிழ்ச் சங்கம் சிறப்புற்று விளங்கிய மதுரைக்கு வந்து, பெரும் புகழோடு வாழ்ந்துள்ளார். அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலு (எண் 88, 231, 307)ம், குறுந்தொகையிலு (எண் 189, 343, 360)ம், நற்றிணையிலு (366)ம் இடம் பெற்றுள்ளதை முன்னரே நாம் கண்டோம்.

வேறு சில சங்கப்புலவர்களும் இலங்கையைச் சேர்ந்த வராகக் கருதப்படுகின்றனர். எழினி, பிட்டன் கொற்றன் ஆகிய சிற்றரசர்களுக்குரிய குதிரைமலை, இலங்கையில் உள்ளதே என்று அறிஞர் சிலர் ஐம்பதாண்டுகளுக்கு முன் னர் கருதினர். ஆனுல், மேற்குமலைத்தொடரில் இன்று தென் கேனராவில் உள்ள குதிரைமூக்குமலையே, சங்க காலத்திய குதிரைமலையாகும். அதனை ஆண்ட பிட்டன் கொற்றன் சேரருடைய படைத்தலைவனுவான். ஆகவே, பண்டைத்தமிழ் நாட்டு குதிரை மலையை, இன்றைய இலங்கையில் தேட வேண்டிய தேவை இல்லை.[2]

பொதுவாக, யாழ்ப்பாணத்தில் பழைய சங்கத் தமிழ்ச் சொற்கள் பல இன்றும் வழக்கில் உள்ளன. இதுமட்டும் அல்லாமல், டாக்டர் கால்டுவெல் கூறுவதைப்போல, தமிழ கத்தில் தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல சமஸ்கிருத மொழி யின் கலப்பு குறைந்து காணப்படுவதோடு, தூய தமிழ்ச் சொற்கள் வழங்கப்படுவதையும் காணுகின்ருேம். தமிழ கத்தைவிட, யாழ்ப்பாணத்தில் வடமொழிச் சொற்கள் மிக மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் படுகின்றன.

---

[1] Tamilian Antiquary, vol.2. NO: 1.

[2] உ. வே. சாமிநாதையர் (பதி.) புறநானூறு பக்.79

ஐது, அதர் என்னும் பழந்தமிழ்ச் சொற்கள் அங்கு இன்றும் வழக்கில் உள்ளன. 'அ' எனும் சுட்டு எழுத்து சேய்மையில் உள்ள பொருளைச் சுட்ட (அவன், அவள், அது) ப் பயன்படுவதாகும். இதைப்போன்று 'இ' எனும் சுட்டு எழுத்து அருகிலுள்ள பொருளைச் சுட்ட (இவன், இவள், இது) ப் பயன்படுவதாகும். இவ்விரண்டிற்கும் இடையில் உள்ளவற்றைச்சுட்ட உகரத்தை (உவன், உவள், உது) பயன்படுத்துவது தொல்காப்பியர் காலத்திய வழக்கமாகும். பிற்காலத்தில், இவ்வழக்கம், தமிழகத்தில் மறைந்துவிட்டது. ஆனால், இன்றும் யாழ்ப்பாணத்தில் அந்தப் பழைய வழக்கம் பேச்சு வழக்கில் இருந்து வருவதைக் காணுகின்றோம். சிறுபிள்ளைகளை, 'மகனே!' என்று விளிப்பது தொல்காப்பியர் காலத்திய மரபாகும். இன்றும், யாழ்பாணத் தமிழர்களின் அன்றாடப் பேச்சு வழக்கில், இவ்வாறு விளிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. பழந்தமிழில் மொழிக்கு முதலில்—சொல்லின் தொடக்கத்தில்—வாரா எழுத்துகள் ட, ண, ர, ல, ழ, ள, ற, ன, என்பனவாகும்.

பிறமொழிச் சொற்கள் இந்த எழுத்துகளில் யாதாகினும் ஒன்றை முதல் எழுத்தாகக் கொண்டு வழங்குவது உண்டு. அச் சொற்களைத், தமிழில் கடன் வாங்கப்பட்ட பிறமொழிச் சொற்களாகப் பயன்படுத்துகிறபொழுது, பொருத்தமான உயிர் எழுத்தை முதலில் சேர்த்து வழங்க வேண்டும் என்பது இலக்கண நூலாரின் துணிவாகும். 'ரதம்' என்பதை 'இரதம்' எனவும், 'ருசி' என்பதை 'உருசி' எனவும், 'லட்டு' என்பதை 'இலட்டு' எனவும் வழங்குவது வழக்கம். இன்றைக்கும் யாழ்ப்பாணத்தில் கல்வியறிவில்லாப் பாமர மக்களும் உருசி (சுவை), இரத்தம் எனப்பேசுவதைக் கேட்கின்றோம். இவை மட்டும்அல்லாமல் கழியும், இறைச்சி, ஒன்ன், அங்காடி, பீலி, சீலை, புழை போன்ற பழந்தமிழ்ச் சொற்கள் இன்றும் பேச்சுத் தமிழில் இடம் பெற்றுள்ளன.[1]

---

[1] யாழ்ப்பாணத்து ஓவியக் கலைஞர் பெனிடிக்ட் நேரில் கூறிய கருத்துகளின் தழுவல்.

இவை யாவற்றையும் கருத்தில் கொண்டு நோக்குகின்ற பொழுது கடைச்சங்க காலத்தில், ஸ்ரீலங்கா தமிழகத்தின் ஒரு பகுதியாக இல்லையென்றாலும், தமிழ் வழங்கும் நிலமாகத் தமிழ்ப்பண்பாட்டுப் பண்ணையாக இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

சமயப்பழக்க வழக்கங்களும் இவ்விரு நாடுகளுக்கு இடையே பேரளவிற்கு ஒத்த இயல்புடையனவாக இருந்து வருகின்றன. முருக வழிபாடு தமிழகத்து முதன்மையான தெய்வ வழிபாடாகும். கண்டியில் உள்ள கதிர்காமத்தில் முருகனுடைய வழிபாடு பன்னெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்கிவருகிறது. வள்ளியை அங்கு வாழும் வேடரின் குல மகளாகக் கூறுவர். மற்றும் சிவன், கொற்றவை , திருமால் வழிபாடு தமிழகத்திலும் வடஇலங்கையிலும் பழமையும் பெருமையும் வாய்ந்ததாகும். முதன் முதல் விசயன், இலங்கையில் காலடி எடுத்து வைத்தபொழுதே, திருக்கேதீச்சுரம் எனும் பழைய சிவன்கோயில் பழுதுபட்டிருந்ததைக் கண்டான்எனவும்,பின்னர், அதைச் செப்பம் செய்தான் எனவும் 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது. இதிலிருந்து தொல்பழங்கால முதலே— ஆரியர் இலங்கைக்கு வருவதற்கு முன்பே— சிவ வழிபாடு அங்குச் சிறப்புற்றிருந்தது எனும் உண்மை புலனாகின்றது.

## கயவாகு போற்றிய கண்ணகி

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் மாபெரும் வேந்தனாக சேரன் செங்குட்டுவன் விளங்கினான். அவன் வடநாட்டு ஆரிய மன்னர்களான கனக விசயரை வென்று, இமயத்தின் உச்சியில் 'வில் கயல் புலி' ஆகிய தமிழ் வேந்தர்களின் மூன்று இலச்சினைகளையும் பொறித்து, வெற்றியுடன் திரும்பினான். அப்பொழுது கற்புக்கரசியாகிய கண்ணகியின் சிலையை வடிக்க, அவன் இமயத்தில் கல்லெடுத்து, கங்கையாற்றில் நாற்பது நாள்கள் நீராட்டி, தன் தலைநகராகிய வஞ்சிமா நகருக்கு அதைக்கொண்டு

வந்தான். தனது தலைநகரில் கண்ணகிக்குக் கோயில் எடுத்துத், தனது இமய வெற்றியைச் செங்குட்டுவன் சிறப்பாகக் கொண்டாடினன். அக்கோயிலில், ஒரு நல்ல நாளில், கண்ணகியின் சிலையை அமைத்து, அவன் கடவுண்மங்கல விழாக் கொண்டாடினன். அவ்விழாவில் குடகுநாட்டுக் கொங்கரும், மாளுவநாட்டு மன்னரும், 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்,' மற்றும் பல மன்னர்களும் கலந்துகொண்டு, கற்புத் தெய்வமாகிய கண்ணகியைப் போற்றி வணங்கி, அவளுடைய அருளைப் பெற்றனர்.[1]

தனது தாயகம் திரும்பியவுடன், கயவாகு இலங்கையில் "நங்கைக்கு (கண்ணகிக்கு) நாள் பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத் தாங்கு, 'அரந்தை கெடுத்து வரம் தரும் இவள்' என, ஆடித்திங்கள் அகவயின் 'ஆங்கு ஓர் பாடிவிழாக் கோள் பன்முறை'[2] எடுத்தான்". இவ்வாறு, முதன்முதல் இலங்கைக்குப் பத்தினி வழிபாட்டைக் கொண்டுசென்று புகுத்தியவன் 'கயவாகு' என்பதை முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரமும், இராசாவலி போன்ற இலங்கையின் காலவழிச் செய்திக் கோவைகளும் குறிப்பிடுகின்றன.

இலங்கையின் வரலாற்றில் இக்கயவாகு வேந்தனை காமணி அபயன் (கி. பி. 112-134) எனச் சுட்டுவர். யானையின் வலிமையுடைய தோள்களைப் பெற்றிருந்தமையால், அவனை, மக்கள் அன்புடன் 'கஜபாகு' என்று அழைத்தனராம். அச்சிறப்புப் பெயரே தமிழில் 'கயவாகு' எனத் திரிந்து வழங்கியது என்பர். மற்றொரு சாரர், காமணி அபயனுக்கு யானைக்கால் நோய் வந்தது. அதனால், அவனுடைய கைகளில் ஒன்று, யானையின் துதிக்கையைப்போன்று பருத்துக் காணப்பட்டது. இதனால் அவனை 'யானைக்கையன்' எனச் சுட்டத் தொடங்கினர் என்பர். சிங்கள மொழியில் 'கஜபாகு' என்பது இப்பொருளையே சுட்டுகிறது என்பதைச்

---

[1] சிலப் 40:158-160
[2] ஷெ, உரைபெறு கட்டுரை, 3.

சான்ருகக் காட்டுவர்.எவ்வாருயினும், காமணி அபயனுக்கு, கயவாகு எனும் பெயர் வழங்கியமை, அவனுடைய கல்வெட்டு ஒன்றில் (Muller AIC, NO. 5) காணப்படுவது இங்குக் கருதத்தக்கது. இன்றைய வரலாற்று அறிஞர்கள் அவனை, 'முதலாம் கயவாகு' எனக் குறிப்பிடுவர்.[1]

எனவே, சேரன் செங்குட்டுவன் காலத்தில் வாழ்ந்த இலங்கை மன்னன் இந்தக் கயவாகுவே என்பது தெளிவாகிறது. அவனே, கண்ணகி வழிபாடாகிய பத்தினி வழிபாட்டு நெறியை இலங்கைக்குக் கொண்டு சென்று பரப்பியவன் என்பதைச் சிலப்பதிகாரத்தாலும், இலங்கையின் காலவழிச் செய்திக்கோவையாலும் அறிகிறோம்.

கண்ணகியின் தூய்மையும், அன்பும், கடமையுணர்வும் அவளைத் தெய்விகத் தன்மையுடையவளாக—பத்தினித் தெய்வமாகப் போற்றச் செய்தன. தன்னை, அவள் ஒரு பத்தினியாகவே கருதினுள். இதனை,

மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்
பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
(சிலப். 21 : 35 - 36)

என இளங்கோவடிகள் கூறுவர். அவனைச் சேர அரசன் முதலியோர், 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' (சிலப். 25 : 114) எனக் கருதி,

கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனிப்
பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து
நித்தல் விழாவணி நிகழ்க என்று ஏவிப்
(சிலப். 30 : 151 - 154)

பத்தினிக்கோட்டம் அமைத்து, விழா எடுத்தனர்.

---

[1] S. Paranavitana, S., op. cit, Vol. I, P. 125

இப்பத்தினி வழிபாட்டு நெறி, இந்தியாவின் பல பகுதி களிலும், இலங்கையிலும் அக்காலத்திலேயே பரவியது. அக்காலம் முதல் கொண்டு இன்றுவரையில் பத்தினிவழிபாடு இலங்கையில் பெருவாழ்வு பெற்றுள்ளது. இலங்கையின் கபூவர் (Kapuwas) எனும் பழங்குடி மக்கள், பத்தினித் தெய்வத்தைத், தங்கள் குலதெய்வமாகவே போற்றி வரு கின்றனர். நாட்டுப்புறக் கோயில்கள் பலவற்றில், பத்தினி யின் சிலம்பே வழிபாட்டிற்குரிய திருச்சின்னமாக இருந்து வருகிறது. பத்தினியின் மூலக்கதையை ஒட்டிப், பல வட்டாரக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள் இலங்கை மக்களிடையே தோன்றியுள்ளன. கொம்பு ஊதுதல், ஏறுதழுவல், தேங்காய்ச் சூறையிடுதல், ஊஞ்சலாட்டம் போன்றவை இன்றும் பத்தினி வழிபாடு செய்யும் சிங்களவர் கிராமங்களிலும் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவை யாவற்றையும்விட 'தீ மிதித்தல்' திருவிழா இப்பத்தினி வழி பாட்டில் முதன்மையிடம் பெறுகிறது. [1]

கந்தரோடைக்கு அருகில், அங்கணமைக் கடவையில் கண்ணகிக்கு ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. இதுவே இங்குக் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட மிகவும் பழைமையான கோயில். இதனை முதலாம் கயவாகு மன்னனே கட்டியிருக் கலாம் என நம்பப்படுகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டபாலையில் உள்ள கண்ணகி கோயிலே, பெரும்புகழ் வாய்ந்த கோயிலாகும்.

சிங்கள மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுள், பத்தினித் தெய்வ வழிபாடு ஒன்றே பெண் தெய்வ வழிபாடாகச் சிறப்புற்று விளங்குகிறது. [2]

இலங்கையில், கற்புத்தெய்வமாகிய பத்தினி, அந்நாட்டு மக்களின் பண்டைச் சமயத்துள் சிறப்புமிகு இடத்தைப்

---

[1] C S. Navaratnam, A Short History of Hinduism in Ceylon, P, 82

[2] N. D Wijesekers, The people of Ceylon, P. 253

பெற்றுள்ளாள். இதனால், அவளுடைய மனிதத் தன்மையும் வரலாறும் மறக்கப்பட்டுவிட்டன. மண்ணக மங்கையாகப் பாரோர் போற்றும் சிறப்பினை அவள் பெற்றாள். அவளுடைய சிறப்புமிகு மனிதப்பண்புகள், முழுநிறைவான வளர்ச்சியுற்றதன் பயனாக, அவள் ஆன்மிகப் பெருமதிப்புக்குரிய தெய்வ நிலையை எய்தினாள். கோவலன் மனைவியாக வாழ்ந்து, அன்பும் அடக்கமும் அணியெனப் பூண்டு, பொறுமையைத் திலகமாக அணிந்து, இலட்சிய இந்தியப் பெண்மணியாக, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வ' நிலையை அவள் அடைந்தாள். இதனை, இன்று இலங்கைமக்கள் மறந்துவிட்டனர். அவளைத் தெய்வப் பிறவியாகவே கருதித் தங்கள் வாழ்வில் வளம் பெருக்க உதவும் தெய்வமாக, அவளைப் போற்றி வழிபட்டு வருகின்றனர் என்பது இலங்கையின் மானிடவியல் (Anthropology) ஆய்வாளரின் துணிவாகும். [1]

இலங்கையில், பத்தினித் தெய்வ வழிபாட்டின் நுழைவால், புத்த சமயத்தின் தூய்மை கெட்டுவிட்டதாக இராசாவலி எனும் காலவழிச் செய்திக்கோவை வருத்தம் தெரிவிக்கிறது. சிங்களவர் இப்பத்தினி தெய்வத்தை, **பத்தினி தெய்யோ** (தெய்வம்) என்று போற்றி வழிபட்டு வரலாயினர். கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு, கற்புக்கரசி கண்ணகியின் வழிபாடு, பௌத்த சமயத்தைச் சேர்ந்த 'தாரையின்' வழிபாடாக அங்கு மாற்றமுற்றது. இலங்கையில், வெண்கலத்தினால் செய்யப்பட்ட பத்தினியின் உருவச்சிலைகள் சில கிடைத்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

அவற்றுள் ஒன்று, லண்டன் மாநகரத்து அரும்பொருள் காட்சியகத்தில் இருக்கிறது; அது பேரழகு வாய்ந்தது. அது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்

---

[1] M. D. Raghavan, The pattiniCult as a Socio-Religious Institution, P. 251

என்று டாக்டர் ஆனந்த குமாரசாமி கருதுகிறார். அழகிய வேலைப்பாடு அமைந்த தலையணியும், கள்ளங்கபடமற்ற இன்முகமும், கவர்ச்சிமிகு கொங்கைகளும், நெளிவும் குழைவுமிக்க திருக்கைகளும் வாய்ந்த பத்தினிச்சிலை, சிங்களக் கலைச்செல்வத்துள்—சிறப்புமிக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது. வளைந்து சுருண்ட வடிவில் அமைந்த சேலையமைப்பு நேர்த்திமிகு கவர்ச்சியாற்றல் வாய்ந்ததாகும். சிலையின் தோற்றப் பொலிவும் கையினால் உணர்த்தப்படும் முத்திரையும் அத்தெய்வத்தின் ஆழ்ந்த அமைதிமிக்க அருள்நிலையைப் புலப்படுத்துகின்றன.[1]

## மணிமேகலையும் மணிபல்லவமும்

தமிழகத்தின் வடபகுதியைக் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகு 'பல்லவர்' எனப்படும் அரச மரபினர் ஆளத் தொடங்கினர். அவர்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர் இராசநாயகம், "இலங்கையை அடுத்துள்ள மணிபல்லவம் (காரைதீவு) பல்லவர் பிறப்பிடமாகும். மணிமேகலையெனும் [2] தமிழ்க்காப்பியத்தில், கூறப்பட்டுள்ள சோழன் நெடுமுடிக்கிள்ளியை மணந்த பீலிவளை என்பவள் நாகர் மகளாவாள். அவளுடைய பெற்றோர் வளைவணன், வாசமயிலை என்பவராவர். அவள் பெற்ற மைந்தனே, திரையால் கடத்தப்பட்டுத் தமிழ்நாட்டுக் கரையினைச் சேர்ந்த முதல் பல்லவன். அவன் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு இருந்தமையால், 'தொண்டைமான்' என்றும் வழங்கப் பெற்றான். அவன் மரபினரே தம் தாயகப் பெயரைத் (மணி-பல்லவம்) தங்கள் குடிப் பெயராகப் போற்றினர். அதனால், அவர்கள் பல்லவர் எனப்பட்டனர். பல்லவரின் முதல்

---

[1] N. D. Wijesekara, Early Sinhalese Sculpture, P. 251

[2] மணிமேகலை 24 : 28 - 60

அரசன் பெரும்பாணாற்றுப் படையில் போற்றப்பெறும் தொண்டைமான் இளந்திரையன் ஆவான்''[1] என்று விளக்கியுள்ளார் இக்கருத்தினை முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலாது. எனினும், தமிழக மன்னர்களுக்கும் இலங்கைக்கும் இருந்துவந்த தொடர்பு இதனால் புலனாகிறது.

மேலும், மணிமேகலை எனும் காப்பியம் தோன்றிய காலத்தில், இலங்கையின் பல பகுதிகளைத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர் என்பதும், தேரவாத புத்த சமயம் இலங்கையில் பரவியிருந்தது என்பதும்,

ஈங்கிதன் அயலகத்து இரத்தின தீவத்து
ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறிவியங் கிழவோன் அடியிணையாகிய
பிறவி யென்னும் பெருங்கடல்
மறவி நாவாய் ஆங்குளது ஆதலின்

என்பதனால் அறிகிறோம். இதனுள், 'ஈங்கிதன்' என்னும் சொற்றொடர், 'நாகதீபம்' எனவும், 'மணிபல்லவம்' எனவும் வழங்கப்படும் யாழ்ப்பாணக் குடா நாட்டையே குறிக்கின்றது என்பது துணிபு. ' ''இரத்தினதீவம்' என்பது தென் இலங்கையையும், 'சமந்தம்' என்பது சிவனொளிபாத மலையையும் குறிக்கின்றன'' என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மணிமேகலை எனும் காப்பியத்தலைவியும், கோவலனுக்கு மாதவியிடத்துப் பிறந்தவளுமான மணிமேகலை, தனிமையில் மணிபல்லவத்திற்குச் சென்றாள்; அங்கிருந்த புத்தரின் திருவடிகளைக் கண்டாள்; வணங்கினாள்; வழிபாடு செய்தாள். அத்தீவில் இருந்த பொய்கை ஒன்றிலிருந்து 'அமுதசுரபி' எனும் பாத்திரத்தைப் பெற்றபின் அவள்

---

[1] Indian Antiquary Vol. III, pp 75 - 80

காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பி வந்தாள் என்றும் மணிமேகலையின் ஆசிரியர் சாத்தனார் கூறுகிறார்.[1]

இதனால், புத்தசமயம் இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தமை புலனாகிறது. மேலும், தமிழகத்து பௌத்த சமயத் தொண்டர்கள் இலங்கைக்குச் சென்று, புத்தருடைய திருவடிகளை வணங்கி, வழிபடும் வழக்கம் இருந்து வந்தமை இதனால் அறியப்படுகிறது.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை இவ்விரு நாடுகளுக்கும் இடையே மிக நெருக்கமான சமயத் தொடர்பு இருந்துவந்தது. அக் காலத்தில், தமிழகத்தில் பௌத்தசமய நிலையங்கள் பல செழிப்புற்று விளங்கின. துறவிகள், எத்தகைய தடையும் இல்லாமல் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்து, இங்கிருந்த பௌத்தசமய நிலையங்களில் தங்கி, தங்கள் அறிவையும், ஆன்மிக அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டனர். இதைப் போன்று, தமிழகத்துறவிகள் இலங் கைக்குச் சென்று பாலிமொழியில் உள்ள பௌத்தசமய கலைஞானங்களைக் கற்றுத் தேர்ந்தனர்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் நாகார்ச்சுன கொண்டா வில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இலங்கையில் நாகார்ச்சுன கொண்டாவைச் சேர்ந்த சில பௌத்த துறவிகள், ஒரு சைத்தியத்தைக் கட்டி, அதனைச் சி(ங்)கள விகாரை என்று வழங்கினர்.

அக்காலத்தில் தமிழகத்தின் காஞ்சிமா நகரம் புகழ்மிக்க பௌத்தசமய வளர்ப்புப் பண்ணையாக விளங்கியது. கடிகைகள் பல அரும்பணியாற்றி வந்தன. அறவண அடிகள் எனும் தருமபாலர் பௌத்தசமயப் போதகராக வும், மாபெரும் ஞானியாகவும், சான்றோராகவும் சிறப்புற்று விளங்கினார்.

---

[1] மணி. 11

கி. பி. நான்காம் நூற்றுண்டில், சோழர்களின் பழைய தலைநகரான உறையூரில் பிறந்து வளர்ந்தவர் புத்ததத்த மகாதேரர். அவர் இருமுறை இலங்கைக்குச் சென்று பௌத்தசமய நூல்களைப் பயின்றுர். பின்னர், அவர் சோழ நாட்டிற்குத் திரும்பி வந்தார். சோழநாட்டில் காவிரிப்பூம் பட்டினம் கடல் கொள்ளப்பட்டு, எஞ்சியிருந்த பகுதியில் அவர் தங்கி இருந்தார் அப்பொழுது பாலி மொழியில் **அபிதம்ம அவதாரம், விநயவிநிச்சியம்** எனும் இரு பௌத்த சமய நூல்களை அவர் இயற்றினர்.[1]

[1] Dr S. K. Aiyangar's commn. Volume, PP. 242 - 244.

இயல் 4

# பல்லவர் காலத் தொடர்பு

## மீண்டும் தமிழரின் படையெடுப்பு

இலம்பகர்ண அரசமரபைச் சேர்ந்த மன்னன் மகாநாமன் (கி.பி. 410-432) இறந்தவுடன், இலங்கையில் அரசுரிமைக் கலகம் உண்டாயிற்று. அவனுடைய தமிழ் நாட்டு அரசிக்குப் பிறந்த மகனுன, சொத்திசேனன், அரசுகட்டில் ஏறினுன். அவனை எதிர்த்து, அவனுடைய மாற்றுந்தாய் (சிங்கள) மகள் கலகம் செய்தாள். இறுதியில், அவன் கொல்லப்பட்டான். இதை அடுத்து, உள்நாட்டுக் குழப்பமும் கொந்தளிப்பும் உண்டாயிற்று. இந்நிலையில், தமிழ் நாட்டிலிருந்து சிலர் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றனர். இருபத்தைந்து ஆண்டுக் காலம் தங்கள் மேலாதிக்கத்தை அவர்கள் அங்கு நிலைநாட்டினர். அந்தப் படையெடுப்பாளிகளின் குழுத் தலைவனுக்குப் பாண்டு என்பது பெயராகும். இப்பெயரால் அவனும், அவனுடைய குழுவினரும், பாண்டிய நாட்டிலிருந்து வந்திருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆனுல் பூஜாவலி, இராசாவலி எனும் சிங்களக் காலவழிச் செய்திக் கோவைகள், அவர்கள் சோழ நாட்டிலிருந்து வந்ததாகத் தெரிவிக்கின்றன.

ஒரு கால் இக்குறிப்பேடுகளின் கருத்தே உண்மையாக இருக்கலாம்.

அனுராதபுரத்தை எளிதில் கைப்பற்றி, அரச மரபினரைப் பாண்டு அப்புறப் படுத்தினன்; தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினன். அவனுடைய ஆட்சி (கி.பி. 433-438) மத்திய, வட இலங்கை முழுவதும் பரவியது. சில ஆண்டுகளுக்குள், அவன் இறந்துபோனன். இதனுல், அவனை அடுத்து பாரிந்தன் எனும் அவனுடைய மகன் அரசு கட்டில் ஏறினன். அவன் மூன்று ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவனையடுத்துப் பாண்டுவின் இளையமகன் குட்டபாரிந்தன் ஆட்சிக்கு வந்தான். அச்சமயத்தில், சிங்கள அரச மரபைச் சேர்ந்த தாதுசேனன், மீண்டும் சிங்களவரின் ஆட்சியை அமைக்க முயன்றுன். ஆனல், அவன் முயற்சியில் படுதோல்வி அடைந்தான். தமிழர் இன்னும் பத்து ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து ஆட்சி புரிந்தனர்.

ஆனல், இடையிடையே தாதுசேனன் கிளர்ச்சியும் கலகமும் செய்துவந்தான். இவற்றைச் சமாளித்த தமிழ் மன்னர்களின் மரபில் பிதியன் என்பவன் ஆண்டகாலத்து, தமிழரின் ஆட்சியை அடியோடு தாதுசேனன் அழித்தொழித்தான். இந்தத் தமிழ் அரசர்களைப்பற்றிய செய்திகள் ஒன்றுகூட, நம் தமிழ் நாட்டுச் சான்றுகளால் அறிய இயலவில்லை! இவர்களுள் கடைசி அரசர்களின் கல்வெட்டுகள் ரோகணத்தில் உள்ள கதிர்காமத்தில் காணப்படுகின்றன. எனவே, இவர்களுடைய ஆட்சி மத்திய இலங்கைக்கு அப்பாலும் சிறிது காலமேனும் பரவி இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## பல்லவர்களும் இலங்கையும்

கி. பி. ஆறும் நூற்றுண்டு முதல் பதினேராம் நூற்றுண்டு வரை, இலங்கையின் வரலாறு தென்னிந்திய அரசுகளோடு போரிட்டுக் குருதியைக் கொட்டிய தொடர்கதை

யாகவே காணப்படுகிறது. இப்போராட்டத்தில், பெரும்பாலும் சிங்களவர்கள் தொடர்ந்து தோல்வியுற்றனர். கி.பி. ஆறும் நூற்றுண்டில், தமிழகத்தின் வடபகுதியை ஆட்சி புரிந்த பல்லவர்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டனர். மகேந்திரவர்மனின் தந்தையான சிம்மவிஷ்ணு, சிங்களவரையும் வென்றதாகக் கல்வெட்டுகளால் தெரியவருகிறது.

நரசிம்மவர்ம மாமல்லன் காலத்தில் (கி.பி. 630-660) இலங்கையில் பதவிப் போராட்டம் மீண்டும் தொடங்கியது. பட்டத்திற்குரிய இளவரசன் மானவன்மன் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டான். அவன் மாமல்லனிடம் வந்து அடைக்கலம் புகுந்தான். அட்டதத்தன் என்பவன் இலங்கையின் அரசைக் கைப்பற்றிக் கொண்டான். மாமல்லனிடம் தஞ்சம் அடைந்த மானவன்மன், பல்லவப் பேரரசனுக்குப் பணிவுடன் எல்லா வேலைகளையும் செய்து, மாமல்லனுடைய நன்மதிப்பைப் பெற்றுன். அதனுல்தான், நரசிம்மவர்மன் வாதாபியின்மீது படையெடுத்துச் சென்றபொழுது, மானவன்மனைக் காஞ்சியில் விட்டுச் சென்றுன். அப்பல்லவ வேந்தனுக்குத் துன்பம் வாராமல் காக்க, மானவன்மன், பிறகு பெரும்படையுடன் சென்று போரில் கலந்துகொண்டு, பல்லவன் வெற்றிக்குப் பேருதவி புரிந்தான். இச்செயலால் மகிழ்ச்சியுற்ற நரசிம்மவர்மன், மானவன்மனுக்குச் சிறந்த வீரர்களைக் கொண்ட நிலப்படை ஒன்றையும் உதவியாக இலங்கைக்கு அனுப்பி வைத்தான். பெரும்படையுடன் இலங்கைக்குச் சென்று இறங்கிய மானவன்மன், முதலில் நிகழ்ந்த போரில் வெற்றிபெற்றுன். எனினும், அடுத்து நடைபெற்ற போர்களில அவன் தோல்வியுற்றுன். அவனுடன் சென்றபடை அவனைக் கைவிட்டது. இதனுல், மானவன்மன் மறுமுறையும் காஞ்சிக்கு வரவேண்டியதாயிற்று

இதையறிந்து மனவருத்தம் அடைந்தான் மாமல்லன். தன்னுடைய படைகள் அனைத்தையும் ஒருங்குதிரட்டி மானவன்மனிடம் ஒப்படைத்துத் தானும் மாமல்லபுரம் (மகாபலி

புரப்) என்ற துறைமுகம் வரை சென்று வாழ்த்தி, மாமல்லன் வழியனுப்பி வைத்தான். இலங்கையை அடைந்த பல்லவர் படை, கடும்போர் புரிந்தது. மானவன்மன் வெற்றி பெற்று, இலங்கையின் அரசனாக முடிசூட்டிக்கொண்டான். இவ்வாறு, இலங்கை இளவரசனுக்குப் பல்லவவேந்தன் தக்க சமயத்தில் செய்த சிறந்த உதவியைப் பாராட்டி, "நரசிம்மவர்மன் இலங்கையில் பெற்ற வெற்றி, இராமன் இலங்கையில் பெற்ற வெற்றியைப் போன்றது" என்று பல்லவர் வழங்கிய காசாக்குடிச் செப்பேடு செப்புகிறது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மானவன்மன் நாடு கடத்தப்பட்டான். அப்பொழுது அரசனாக இருந்த இரண்டாவது நரசிம்ம பல்லவன் கி. பி. 684 இல் ஒரு பெரும் படையைத் துணையாக அனுப்பி, மானவன்மனை இலங்கையில் மீண்டும் ஆட்சியை நிலைநாட்டுமாறு செய்தான்.

## சோழ இளவரசி
## வட இலங்கைப் பட்டத்தரசி

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க நாட்டு அரசன் உக்கிரசிங்கன், யாழ்ப்பாணத்திலுள்ள கதிரைமலையைக் கைப்பற்றி, நாகதீபமாகிய யாழ்ப்பாணத்திற்கு அரசனானான் பிறகு, மாருதப்புரவீக வல்லி என்னும் சோழ அரசகுமாரியை அவன் மணந்தான். அவளுடைய வேண்டுகோட்கு இணங்கி, அவன் மாவிட்டபுரம் கந்தசாமிக் கோயிலைக் கட்டினான். சிறிது காலத்திற்குப்பின், பருத்தித் துறைக்கு அருகிலுள்ள 'வல்லிபுரம்' என்னுமிடத்தில் ஒரு நகரை அமைத்து, அதற்குச் 'சிங்கை நகர்' என்று பெயரிட்டான். அதைத் தலைநகராகக் கொண்டு உக்கிரசிங்கன் ஆண்டுவந்தான்.

## பாண்டியரும் இலங்கையும்

முதலாம் சேனன் (கி.பி. 833-853) என்பவன் இலங்கையை ஆண்டபொழுது, சீமாறன் சீவல்லபன் என்ற

பாண்டிய அரசன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்றான். பல நகரங்களைக் கொள்ளையடித்தும், புத்த விகாரைகளிலிருந்த பொற்சிலைகளையும், விலையுயர்ந்த பிற பொருள்களையும் கைப்பற்றிக் கொண்டு பாண்டியன் திரும்பிச் சென்றான். இதனால், இலங்கை தன்னுடைய செல்வத்தையெல்லாம் இழந்து சிறுமையுற்றது என்று மகாவமிசம் கூறுகிறது. அப்போரில் சிங்கள அரசன், பேராற்றல் வாய்ந்த பாண்டியர் படையோடு போர் புரிய முடியாமல், தன் நாட்டைவிட்டு மலேயாவிற்கு ஓடியதாகத் தெரிகிறது. போர்க்களத்தில் இளவரசன் மகிந்தன் உயிர் துறந்தான்; காசிபன் என்பான் போர்க்களத்தை விட்டோடி உயிர் தப்பினான்[1]

போரில் புறமுதுகிட்ட முதல் சேனன், பாண்டியனைப் பணிந்து, சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான். அதன் பயனாகத் தன் நாட்டை, திரும்பப் பெற்றான். இவனுக்குப் பிறகு, அரசனான இரண்டாம் சேனன் சீவல்லபனுக்குப் பகையாயிருந்த மாயா பாண்டியனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, பாண்டி நாட்டின் மேல் படையெடுத்து வந்தான். இப்படையெடுப்பில் பல்லவ அரசன் நிருபதுங்கனைத் தனக்கு உதவி செய்யுமாறு இவன் வேண்டினான். பல்லவனுடைய படைக்கும் பாண்டியப் படைக்கும் அரிசிலாற்றங்கரையில் கடும்போர் நடந்தது; பாண்டியன் தோல்வியுற்றான். எனினும், சீவல்லபன் சிங்கள அரசனையும் மாயா பாண்டியனையும் மற்றொரு போரில், பாண்டி நாட்டை விட்டுப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தான். இதைப் பற்றி மகாவமிசம் வேறு வகையாகத் திரித்துக் கூறுகிறது.

பல்லவருக்கும் சிங்களவருக்கும் இடையே நிலவிய அரசியல் தொடர்பு, வெறும் அரசியல் தொடர்பாக

---

[1] K. A. Nilakanta Sastri, The Pandyan Kingdom P. 69.

அமைந்துவிடாமல், கலை, பண்பாட்டுத் துறையில் (சிங்கள வரின் எண்ணப் போக்கில்) தமிழ்நாட்டு மரபுகளைத் தழுவத் தூண்டியுள்ளது. அனுராதபுரத்தில், இக்காலத்தில் அமைக்கப்பட்ட ஈசுவரமுனிய விகாரையில், பல்லவர் கலைப் பாணியின் தாக்கத்தை நாம் காணுகின்றோம். மகேந்திர வர்மனின் திருச்சிராப்பள்ளி, சித்தன்ன வாசல் குடைவரை கோயில்களைப் பின்பற்றி, ஒரே பாறையை விகாரையாக அமைக்கும் பாணியைப் பின்பற்றி இலங்கையில் மேற் கண்ட விகாரை எடுக்கப்பட்டுள்ளது. ''இக்கோயிலின் கட்டு அமைப்பில் மட்டும் பல்லவருடைய கலைப் பாணியின் சாயல் பதிந்திருக்கவில்லை. அக்கோயிலில் உள்ள சிற்பங் கள் கூட 'நாங்கள் பல்லவருடைய கலைமுறையை உணர்த் தவே இங்கு வந்திருக்கிறோம்' எனச் சொல்லுவது போலத் தோன்றுகின்றன.''[1]

அக்கோயிலைச் சார்ந்துள்ள மாடிகளின் சுற்றுப்புறச் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் அனைத்தும், மாமல்லபுரப் பாறைச் சிற்பங்களை ஒத்துள்ளன. அங்குள்ள யானையின் சிற்ப வடிவங்கள், மாமல்லபுரத்து 'கங்கையின் தோற்றம்' காட்டும் சிற்ப வரிசையில் உள்ள யானைகளைப் பெரிதும் ஒத்துள்ளன.

## மாணிக்கவாசகரும் இலங்கை இளவரசியும்

'நிகய சங்கிரகம்' எனும் சிங்கள மொழி வரலாற்றுக் குறிப்பேடு, முதலாம் சேனனை, ஒரு சைவ சமயத்துறவி, சித்துக்கள் பல செய்து காட்டி, சைவனாக மாற்றினார் என்று கூறுகிறது. மேலும், ஊமையாக இருந்த அவ்வரசனுடைய

---

[1] M. D. Raghavan, India in Ceylonse History Society and Culture, P. 81

மகளைப் பேச வைத்துப் பெரும் புகழ் பெற்றார் என்றும் அது குறிப்பிடுகிறது [1]

தமிழிலுள்ள திருவாதவூரர் புராணம், இந்நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. சிவநெறியின் சிறப்பினை உலகம் எல்லாம் பரப்புதல் வேண்டும் என்ற குறிக்கோளுடன், அரும்பணிபுரிந்த மாணிக்கவாசகப் பெருமான், இலங்கையிலிருந்து சிதம்பரத்திற்கு அழைத்து வரப்பட்ட ஊமைப் பெண்ணைப் பேச வைத்து, பின்னர் பௌத்தரை வாதில் வென்றார் என்று கூறப்படுகிறது. இக்கதையினை மேற்கண்ட சிங்கள நூலின் கூற்றிேனாடு தொடர்புபடுத்திப் பார்ப்போமானால், மாணிக்கவாசகருக்கும் இலங்கைக்கும் யாதோ ஒரு வகைத் தொடர்பு இருந்திருக்கிறது என்பது புலனாகும். இதன் மூலம், மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது உறுதிப்படுகிறது.

---

Nelson: Madura District Manual, P. 147.

மற்றும், காண்க: Nikaya Samgragava, P. 18.
K. Navaratnam; **Tamil and Ceylon** P. 95.
Rasanayagam: **Ancient Jaffna**, PP. 253-254.

# சோழப் பேரரசரும் இலங்கையும்

## பராந்தகனும் இராசசிம்மனும்

தமிழகத்தில் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு இறுதியில், பிற்காலச் சோழர் ஆட்சி தலையெடுக்கத் தொடங்கியது. விசயாலயன் வழிவந்த முதற்பராந்தக சோழன் கி. பி. 907 இல், சோழநாட்டின் அரசுரிமையைப்பூண்டான். அவன் பாண்டிய நாட்டின்மீது, 910 இல் படையெடுத்துச் சென்ருன். பாண்டிய மன்னன் இரண்டாம் இராசசிம்மன், சோழனை எதிர்த்துப் போரிட இயலாது தோல்வியுற்ருன். தோல்வியுற்ற பாண்டிய அரசன், இலங்கையை ஆண்டு வந்த ஐந்தாம் காசிபனைத் தனக்கு உதவி புரியுமாறு வேண்டினன். அம்மன்னனும் அவ்வரசனது வேண்டுகோட்கிணங்கி, தனது படைத்தலைவன் சக்க சேனுதிபதியின் கீழ், சிறந்ததொரு படையை அனுப்பி வைத்தான். இரு படைகளும் ஒன்ருகத் திரண்டு சோழன் பராந்தகனை எதிர்க்கப் புறப்பட்டன. வெள்ளூர் என்னும் இடத்தில் மிகக் கொடிய போர் நடந்தது. பராந்தகன் வெற்றி பெற்ருன். இதனுல், பாண்டிநாடு சோழருடைய ஆட்சிக்கு உட்பட்டது.

இராசசிம்மன் தன்னுடைய நாட்டை இழந்தான். உடனே, அவன் சிங்கள அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அவ்வரசனின் உதவியைக் கொண்டு தன் நாட்டை மீட்கும் பொருட்டு அவன் அங்குத் தங்கினன். நான்காம் தப்புலன் (கி. பி. 924-935) என்பவன் அப்பொழுது சிங்களத்தை ஆண்டு வந்தான். அவனுக்குப் பாண்டிய நாட்டை மீட்டுத்தரும் நோக்கம் இல்லை. அதனால், பாண்டியன் இலங்கையில் தங்கியிருப்பதால் பயன்விளையாது என்பதை உணர்ந்தான். தன் முன்னோரிடமிருந்து தனக்குக் கிடைத்துள்ள சுந்தரமுடியையும், பிற அரசச் சின்னங்களையும் காப்பாற்றிப் பிற்காலத்தில் அவற்றைத் தன்னிடம் சேர்க்குமாறு வேண்டினன். பிறகு பாண்டியன் சேர நாட்டிற்குச் சென்றான்.

## இலங்கைப் போர்

பாண்டியநாடு முழுவதையும் பராந்தகன் தன் ஆட்சிக்குட்படுத்தினன். பின்னர், அந்நாட்டின் தலைநகராகிய மதுரையில் முடிசூட்டு விழாவினை நடத்துவதற்கு அவன் முயன்றான். அப்பொழுது, பாண்டியர்க்குரிய அரசச் சின்னங்களும், முடியும் அங்கு இல்லாமல் போனதை அவன் அறிந்தான். அவை இலங்கை அரசனிடம் இருப்பதாகத் தெரிந்தவுடன், அவற்றை இலங்கை அரசனிடமிருந்து வாங்கிவருமாறு சிங்களத்திற்குத் தூதர்களை அனுப்பினன்.[1]

அப்பொழுது சிங்களத்தை ஆண்டுவந்த நான்காம் உதயன் என்பான் அவற்றைக் கொடுப்பதற்கு மறுத்தான். அதனால், சீற்றம் அடைந்த பராந்தகன், இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப்பற்றிக் கொண்டு வர விரும்பினன். அதற்காக, அவன் பெரும்படையொன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அங்கு நடைபெற்ற போரில் இலங்கைப் படைத்தலைவன்

---

[1] K. A Nilakanta Sastri, The Colas, P. 124

இறந்தான். சோழன் வெற்றி பெறவே, உதயன் வேறு வழி ஒன்றும் அறியாதவனாய்ப், பாண்டியன் கொடுத்துச் சென்ற முடியையும், பிறவற்றையும் எடுத்துக்கொண்டு, இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான். அப்பொருள்களைக் கைப்பற்ற முயன்ற சோழருடைய படை, அங்குச் செல்ல இயலாது, தன் நாட்டிற்குத் திரும்பியது.

கி. பி. ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகள் இலங்கையின் 'பொற்கால'மெனப் போற்றப்படுகிறது. "பொதுவாக நாட்டின் செழிப்புமிக்க நிலையை இந்நூற்றாண்டுகள் நம் உள்ளத்தே நிலையாகப் பதித்துச் சென்றுள்ளன. முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் மேலெழுந்தவாறாகக் காட்சியளிக்கும் அமைதியையும் செழிப்பையும்விட, இக்காலத்தில் ஆழ்ந்த அமைதியையும் மிகுந்த செழிப்பையும் உடையதாகச் சிங்களம் சிறப்புற்றது." [1]

இரண்டாம் பராந்தக சோழன் காலத்தில் வீரபாண்டியன் நான்காம் மகிந்தனுடைய படையுதவியோடு, சோழரை எதிர்த்துப் போரிட்டான். வீரபாண்டியனும் அவனுடைய நண்பன் படையும் படுதோல்வி அடைந்தன. ஆதித்த கரிகாலன் (கி பி. 970) வீரபாண்டியனைக் கொன்றான். பிறகு, கொடும்பாளூர் சிறிய வேளார் தலைமையில், ஒருபடை இலங்கையைத் தாக்கியது. அப்போரில் அவர் கொல்லப்பட்டார்.

## இராசராசனின் படையெடுப்பு

பிற்காலச் சோழப் பேரரசர்களுள் தன்னிகரற்று விளங்கிய இராசராசனும், அவன் மகன் இராசேந்திரனும் இலங்கையின் பெரும் பகுதியினைக் கைப்பற்றித் தங்கள்

---

[1] H. w. Codrington, of. cit; P. 42

ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தனர். கி.பி. 982இல், இலங்கையின் அரசனாக ஐந்தாம் மகிந்தன் முடிசூட்டிக் கொண்டான். இராசராசனுக்குப் பகைவர்களாகிய பாண்டியனுக்கும் சேரனுக்கும் அவன் உதவிபுரிந்து வந்தான். இதனால், இராசராசன் இலங்கையின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அவனுடைய மகன், இராசேந்திரன் மாபெரும் படைக்குத் தலைமை தாங்கி இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றான். அந்நிலையில், இலங்கையில் உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. அதை அடக்க முடியாது தத்தளித்த மகிந்தன், ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான்.

இதனால், சோழரின் படை, அந்நாட்டின் வடபகுதியை எளிதில் கைப்பற்றிக் கொண்டது. திருவாலங்காட்டுச் செப்பேடு, இராசராசனின் இலங்கைப் படையெடுப்பைச் சிறப்பாகப் பேசுகிறது. "வானரப் படையின் உதவியைக் கொண்டு அயோத்தி அரசன் இராமன், கடலில் பாலம் அமைத்தான். பிறகு, அரும்பாடுபட்டு இலங்கை வேந்தனைத் தன் கூரிய அம்பினால் கொன்றான். அந்த இராமனை விட, இராசராசன் பேராற்றலும் பெருந்திறனும் உடையவன். அவனுடைய ஆற்றல்மிகு படை அலைகடலை மரக்கலங்களைக் கொண்டு கடந்தது; இலங்கை மன்னனைத் தீயிட்டுக் கொளுத்தியது" என்பதனால் (செ. 80) இராசராசனுடைய இலங்கைப் படையெடுப்பின் மாட்சியை நன்குணரலாம். மேலும், அந்நிலப் பரப்பு 'மும்முடிச் சோழமண்டலம்' என்று பெயரிடப் பெற்று, இராசராசனுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

தொன்றுதொட்டு இலங்கையின் தலைநகராக விளங்கிய அனுராதபுரம், சோழரின் படையெடுப்பின்போது அழிக்கப்பட்டது. எனவே, அந்நாட்டின் நடுப்பகுதியில் இருந்த பொலனறுவா என்ற நகரம், சனநாதமங்கலம் எனப் பெயரிடப்பட்டுச் சோழர்க்குரிய இலங்கைத் தலைநகரமாகச் சிறப்புற்றது. கொழும்பு மாநகர், அரும்பொருள் காட்சியகத்

தில், தமிழ்க் கல்வெட்டோடு கூடிய கற்பாறை ஒன்று காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கிறது.

அதில் ''சோழ மண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, வெளா (விளா) நாட்டுச் சிறு கூற்ற நல்லூர்க் கிழவன் தாழிகுமரன் ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து மாதோட்டமான ராஜராஜபுரத்து எடுப்பித்த ராஜராஜ ஈசுவரத்து மகாதேவர்க்குச் சந்திராதித்தவல் நிற்க'' எனத் தொடங்கும் கல்வெட்டு வாசகம் காணப்படுகிறது. இக்கல்வெட்டால், சோழ நாட்டுத் தலைவன் ஒருவன், ஈழமண்டலத்து மாதோட்ட நகரத்தில், தன் நாட்டு வேந்தன் பெயரால், 'இராசராசேச்சுரம்' என்னும் சிவன் கோயிலை எடுப்பித்தான் என்பதும், அதற்கு அர்த்த சாம வழிபாட்டிற்கும், வைகாசித் திருவிழாவிற்கும் நிவந்தமாக, இறையிலி நிலம் அளித்தான் என்பதும் அறியப்படுகின்றன. அன்றியும், ஈழமண்டலம் இராசராசன் சிறப்புப் பெயரால், 'மும்முடிச் சோழ மண்டலம்' என்று அந்நாளில் வழங்கப்பட்டு வந்தது என்பதும், மாதோட்ட நகரம், 'இராசராசபுரம்' என்னும் மற்றொரு பெயரும் பெற்றிருந்தது என்பதும் இக்கல்வெட்டால் தெரிய வருகின்றன.

சோழரின் தலைநகராக இருந்த பொலனறுவாவில் சிவன் கோவில் ஒன்று கற்றளியாக அமைக்கப் பட்டிருக்கிறது. கி.பி. பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் கட்டப்பெற்ற சோழர் கோயில்களைப் போல், இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், அக்கோயிலை 'வானவன் மாதேவீச்சுரம்' என்று அக்கோயில் கல்வெட்டொன்று குறிப்பிடுவதால், இராசராசனின் மனைவியும் முதலாம் இராசேந்திரனுடைய தாயாருமான 'வானவன் மாதேவி'யினுடைய பெயரினை அக்கோயிலுக்கு இட்டு வழங்கியுள்ளனர் என்பது தெரிய வருகிறது தஞ்சையில் இராசராசன் எடுப்பித்த பெருவுடையார் கோயிலான இராச இராசேச்சுரத்திற்கு இலங்கையில் உள்ள சில ஊர்களை நிவந்தமாக இராசராசன் அளித்துள்ளான்.[1]

---

[1] S. I. I. Vol. 2; No. 92.

இராசராசன் காலத்தில் நடந்த இலங்கைப் போரில் தோல்வியுற்று, ரோகணத்திற்கு ஓடிய ஐந்தாம் மகிந்தன், சில ஆண்டுகள் கழித்து, சோழர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு முயன்றான். சோழருடைய ஆதிக்கத்திற்கு உட்படாத, இலங்கையின் தென்கிழக்குக் கோடியில் உள்ள ரோகண நாட்டிலிருந்து, அவன் சிங்களவர் படையொன்றைத் திரட்டினான். சோழருடைய ஆதிக்கத்தை அவன் அழிக்க முயலுவதை அறிந்த முதலாம் இராசேந்திரன், கி.பி. 1017இல் இலங்கையின்மீது, படையெடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று.

இலங்கையில் நடைபெற்ற போரில், இராசேந்திர சோழன் வெற்றி பெற்றான். சிங்கள மன்னனுக்குப் பல தலைமுறைகள் உரிமையுடையதாக இருந்து வந்த சிறந்த முடியினையும், அம்மன்னனின் தேவியரது திருமுடிகளையும் சோழவேந்தன் கைப்பற்றிக் கொண்டு, சோழநாட்டிற்குத் திரும்பினான். மேலும், மூன்றும் இராசசிம்ம பாண்டியன், நூறாண்டுகட்கு முன்பு இலங்கை அரசனிடத்து அடைக்கலமாக வைத்துச் சென்ற பாண்டியர் முடியையும், அவர்களுக்குரிய இந்திரன் ஆரத்தையும் இராசேந்திரன் கைப்பற்றிக் கொண்டு வந்தமை சிறப்புமிக்க செய்தியாகும். மகிந்தன், சோழ நாட்டிற்குச் சிறைப்படுத்திக் கொண்டு வரப்பட்டான். அவன் பன்னிரண்டு ஆண்டுகள் சிறையில் உயிருடனிருந்து, பிறகு இறந்தான். இராசேந்திரனுடைய படையெடுப்பின் பயனாக, இலங்கை முழுவதும் சோழரின் ஆதிக்கத்திற்குட்பட்டது.

### சிங்களவர் எழுச்சி

ஐந்தாம் மகிந்தனுடைய மகனான காசிபன் என்பவனை, இலங்கை மக்கள் தலைமறைவாக வளர்த்து வந்தனர். தந்தை இறந்தவுடன், அவனைத் தங்கள் அரசனாக

அவர்கள் அறிவித்தனர். பின்னர், அவர்கள் சோழரின் படையை ஆறு மாதங்கள் எதிர்த்துப் போரிட்டு, தென் கிழக்கிலுள்ள ரோகண நாட்டைக் கைப்பற்றிக் கொண் டனர். அதற்கு மகிந்தனுடைய மகனை அவர்கள் அரசனாக் கினர். 1029இல் அவன் விக்கிரமவாகு என்ற பெயருடன் அரியணை ஏறினன். ஏழாம் காசிபன் எனும் பெயரும் அவனுக்கு வழங்கியது. அவன் கி.பி. 1040 வரையில் ஆண்டான் என்பது மகாவமிசத்தால் அறியப்படுகிறது.

இலங்கை முழுவதும். சற்றேறக்குறைய பத்து ஆண்டு கள், இராசேந்திரன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கி.பி. 1029இல் ரோகண நாட்டைக் கைப்பற்றி அரசனான விக்கிர மவாகு, சோழர்களை எதிர்த்துப் போரிட்டு, இலங்கை முழு வதையும் தன்னுடைய ஆதிக்கத்திற்குக் கொண்டுவர ஆவல் கொண்டான். எனவே, அவன் பெரும்படையைத் திரட்டிக் கொண்டிருந்தான். அந்நிலையில் அவன் இறந்துபோனன்.

அவனுக்குப் பிறகு அரசுகட்டிலேறிய அரசர்களும் சோழர் ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து வெளியேற்றக் கருதினர். அதற்காக, அவர்கள் பலமுறை முயன்றனர். இரண்டாவது இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 1051-1063), சோழப்படை ஒன்று இலங்கைக்கு அனுப்பப் பட்டது. அப்படைக்கும் சிங்களப் படைக்கும் கடும்போர் நடந்தது. அப்போரில் வீரசலாமேகன் என்ற சிங்களப் படைத்தலைவன் கொல்லப்பட்டான். இலங்கையின் மன் னன் ஓடி ஒளிந்தான். அவனுடைய மக்களிருவர் போர்க் களத்தில் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

## சிங்களவரின் விடுதலை வேட்கை

எனினும், போரில் தோற்றோடித் தலைமறைவாக வாழ்ந்த விசயவாகு (கி.பி. 1055-1110), சில ஆண்டுகளுக் குப் பிறகு ரோகணத்திற்குச் சென்று, மீண்டும் இலங்கையை ஆளத்தொடங்கினன். அவன் ஆட்சிக்கு வந்த நாள் முதல்,

அயலாருடைய ஆட்சியிலிருந்து தன் தாய்நாடு முழு விடுதலை பெறவேண்டும் என்று எண்ணினான். அதற்கேற்ற முறையில், அவன் திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தான். முதலில், அவன் பொலனறுவாவைக் கைப்பற்ற முயன்றான். அம்முயற்சி பயன் அளிக்கவில்லை. இதனால், வடகிரியில் கோட்டைக் கொத்தளங்கள் அமைத்து, அதை அவன் பலப்படுத்திக் கொண்டான். விசயவாகுவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டாயிற்று. அரும்பாடு பட்டு அவன் அவற்றை அடக்கினான். இந்நிலையில், முதலாம் குலோத்துங்கன் அரசனாவதற்கு முன்பு சோழநாட்டில் நிலவிய குழப்பமான அரசியல்நிலை விசயவாகுவிற்கு ஏற்றதொரு சூழ்நிலையாக அமைந்தது.

## குலோத்துங்கனும் இலங்கையும்

முதலாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1070 இல் சோழப் பேரரசனானான். சிங்களவர், ரோகணத்திலிருந்த தங்கள் அரசகுமாரனாகிய விசயவாகு என்பவனை அழைத்து வந்து, கி.பி. 1073இல் அவனுக்கு முடிசூட்டி, இலங்கை முழுவதற்கும் அவனே அரசன் என்று அறிவித்தனர். அங்கிருந்த சோழரின் படைக்கும் சிங்கள அரசனுக்கும் பெரும்போர் நடந்தது. இறுதியில் அவ்வரசனே வெற்றி பெற்றான். பிறகு, சோழநாட்டிலிருந்து சென்ற பெரும்படை ஒன்று அனுராதபுரத்தில் விசயவாகுவைத் தோற்கடித்தது அந்நகரைச் சோழநாட்டுப் படை கைப்பற்றிக் கொண்டது. அப்படைக்குத் தலைவனாகச் சென்றவன் கருணாகரத் தொண்டைமான் என்ற மாவீரனாவான். அவன் கைப்பற்றிய பகுதியில் ஓர் ஆற்றை வெட்டினான். இன்றைக்கும், அது 'கருணாகரத் தொண்டைமான் ஆறு' எனும் பெயரால் வழங்கிவருகிறது. இப்பொழுது, உரும்பராயிலிருக்கும் கருணாகரப் பிள்ளையார் கோயிலையும் அவன் கட்டியதாகத் தெரிகிறது.

விசயவாகு போரில் தோல்வியுற்றான். அதனால், தக்க அரண்வாய்ந்த இடமொன்றைத் தேடி, அங்கிருந்து

சோழரை எதிர்த்துப் போரிடுவதற்கு அவன் முயன்று கொண்டிருந்தான். தான் திட்டமிட்டபடி பொலனறுவா, அனுராதபுரம் ஆகிய இருநகரங்களிலும் சோழரைத் தாக்குவதற்கு இருபெரும் படைகளை அனுப்பியதோடு, தானும் அவ்விடங்கட்கு வேறு வழியாக சென்றான். பொலனறுவாவில் பெரும்போர் நடந்தது. இறுதியில் சிங்கள மன்னனால் அந்நகரம் கைப்பற்றப்பட்டது.

பிறிதொரு சிங்களப்படை கடும்போர் புரிந்து அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. சோழருடைய படை இரண்டு போரிலும் படுதோல்வி அடைந்தது. வாகை சூடிய விசயவாகு, இலங்கை முழுவதற்கும் அரசனானான். அன்று முதல், அவனே அந்நாட்டை ஆண்டுவரலானான். இதனால், முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் தொடக்கத்திலேயே, ஈழமண்டலத்தைச் சோழப் பேரரசு இழந்து விட்டமை தெளிவாகிறது. இராசராசன் காலம் முதல் சோழப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய இலங்கை, இக்காலத்தில் முழுவிடுதலை பெற்ற சுதந்திர நாடாக மாறியது. முதலாம் குலோத்துங்கன், தன்னுடைய மகளான சுத்தமல்லியார் என்பவளை வீரப்பெருமாள் எனும் இலங்கை இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். இதனால், சோழரும் இலங்கை அரசரும் மணவுறவு மூலம் அமைதிகாண முயன்றமை புலனாகின்றது.

## விசயவாகுவின் தமிழகப் படையெடுப்பு

விசயவாகு அரசனானவுடன் பொலனறுவாவிற்குச் சோழர்கள் சூட்டிய பெயரை மாற்றி, விசயராசபுரம் என்று பெயரிட்டான். கன்னோசி நாட்டு அரசன், ஜகதிபாலனுடைய மகளான லீலாவதியை, விசயவாகு திருமணம் செய்து கொண்டான். தன்னுடைய தங்கை மித்திரையைப் பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு, இவன் திருமணம் செய்து கொடுத்தான். விசயவாகு, புத்தசமய மடாலயங்களையும் கோயில்களையும் புதுப்பித்தான். மேலும், புத்தர் பெருமா

னின் 'திருப்பல்' லிற்கு நுவரகிரியில் ஒரு கோயில் எடுப்பித்தான்.

இவன் மேலைச் சாளுக்கிய வேந்தனை ஆளும் விக்கிரமாதித்தனுக்கு, தூதர் குழு ஒன்றை அனுப்பினன். சோழ வேந்தன் அத்தூதர்களை வழிமறித்து, அவர்களுடைய கை கால்களை வெட்டி, முடமாக்கினன். இதையறிந்து சீற்ற முற்ற விசயவாகு, சோழநாட்டின்மீது படையெடுத்தான். விசயவாகுவின் வேளக்காரப் படையிலிருந்த தமிழ் வீரர்கள், தமிழரசனாகிய சோழனை எதிர்த்துப் போரிட மறுத்துக் கலகமும் குழப்பமும் செய்தனர். தங்கள் அரசனுடைய அரண்மனையைத் தீயிட்டு அவர்கள் கொளுத்தினர். அரசன் உயிர் பிழைத்தால் போதுமென்று தப்பி ஓடினன். சிறிது காலத்திற்கெல்லாம், பெரும்படையுடன் இவன் திரும்பி வந்தான். இவன் கலகக்காரர்களைத் தோற்கடித்து, முக்கியமான தலைவர்களை எல்லாம் தூக்கிலிட்டான். மீண்டும் விசயவாகு, இலங்கையின் தலைவனானன். அவன் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். ஆதாம் சிகரத்திற்கு (Adam's peak)ச் செல்லும் நெடுஞ்சாலையின் பலவிடங்களில், வழிப்போக்கர் தங்குவதற்கு இவன் சத்திரங்கள் (விடுதிகள்) கட்டினன். அவ்விடுதிகளில் வந்து தங்குவோருக்கு உணவளிப்பதற்காக ஓர் ஊரையே இவன் நன்கொடையாக வழங்கினன். இச் செய்தியை இவனுடைய ஆட்சியாண்டின் இறுதிக் கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது.

## உள்நாட்டுப் போர்

விசயவாகுவிற்குப் பிறகு, அவனுடைய தம்பி செயவாகு அரசனானன். இந்நிலையில், அரச குடும்பத்தில் கலகம் உண்டாயிற்று. ரோகணத்தின் அரசப் பிரதிநிதியாக இருந்த விக்கிரமவாகு, நாட்டில் இல்லாத சமயத்தில் பாண்டிய இளவரசனுக்கும், விசயவாகுவின் தங்கை மித்திரைக்கும் பிறந்த மூன்று குழந்தைகளுள் மானாபரணன் என்ற வீரவாகுவை, விசயவாகு இலங்கையின் இளவரசனாக்கினன்

இச்செயல், தொன்றுதொட்டு நடைமுறையில் இருந்துவந்த மரபிற்கு மாறாக அமைந்தது. ஆட்சிபுரியும் அரசனுடைய மகனோ, உடன்பிறந்தாரோ இளவரசு பட்டம் கட்டப்பெறுவது வழக்கம். இதற்கு நேர் மாறாக, நாடாளும் அரசனுடைய தங்கையின் மகன் இளவரசு பட்டம் கட்டப்பெற்றான். சிறிது காலத்திற்கெல்லாம் செயவாகுவை எதிர்த்து வீரவாகு போரிட்டு, வெற்றியும் பெற்றான்.

## சோழர் ஆட்சியின் விளைவுகள்

சோழரின் ஆதிக்கம், முதலாம் பராந்தகன் கி.பி. 915ல் இலங்கையில் பெற்ற வெள்ளூர் வெற்றியில் தொடங்கியது எனலாம். ஆனால், உண்மையில் வட இலங்கையும், தென் பகுதியும் நேரடியாகச் சோழரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம் 77 ஆண்டுகளேயாகும். இலங்கையின் சிங்கள மொழி நூல்களான நிக்கிய சங்கிரகம், பூஜாவலி என்பன, இலங்கையில் சோழருடைய ஆட்சி ஐந்தாம் மகிந்தனுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் (கி. பி, 985) தொடங்கியதாகக் கொண்டு 86 ஆண்டுகள் அவ்வாட்சி நடைபெற்றதாகக் கூறுகின்றன. இக்கருத்து பொருத்தம் இல்லை. வெள்ளூர்ப் போரே, சோழரின் ஆட்சிக்குக் கால்கோள்விழா நடத்தியது எனலாம். அப்போரின் விளைவால், இலங்கையில் சோழருடைய ஆதிக்கம் நிலைநாட்டப்படவில்லை. முதலாம் இராசராசனின் காலத்திலேயே (கி.பி. 993), இலங்கையின் கணிசமான பகுதி சோழருடைய ஆட்சிக்கு உட்படலாயிற்று.

சோழப் பேரரசு தமிழகத்தில், எத்தகைய ஆட்சி அமைப்பு முறையை நிறுவியதோ, அதே வகையான ஆட்சியமைப்பை இலங்கையிலும் நிறுவ முயன்றது. சோழப் பேரரசரின் மண்டலங்களுள் ஒன்றாக இலங்கை சேர்த்துக் கொள்ளப்பட்டது. இராசராசனின் சிறப்புப் பெயர்களுள் மும்முடிச் சோழன் என்பது ஒன்றாகும். அப்பெயரை அடையாகக் கொண்டு மும்முடிச் சோழ மண்டலம் எனும் பெயர், இலங்கைக்கு வழங்கப்பட்டது. தன்னுடைய அரசின் ஒரு

பகுதியாக, அதைக் கருதியதனால்தான், அதனைத் தன் ஆட்சிக்குட்பட்ட பல்வேறு மண்டலங்களுள் ஒன்றாக இராசராசன் அமைத்து, சிறப்பான ஆட்சி நடத்துவதற் குரிய வழி வகைகளை வகுக்கலானான்.

அம் 'மும்முடிச் சோழ மண்டலம்', இராசராச வளநாடு, விக்கிரம சோழ வளநாடு போன்ற பல் வளநாடு களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வளநாடும், நாடு அல்லது கோட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. நாட்டாட்சியை நல்ல முறையில் நிறுவிய தனால், போர்க்களத்தின் கொடுமைகளை மக்கள் விரைவில் மறந்தனர்; அமைதியான மரபு வழிவந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டு மக்கள் தொடர்ந்து வாழ்ந்தனர்.

சோழருடைய ஆட்சியின் புதிய தலைநகராகப் பொலனறுவா அமைக்கப்பட்டது. அத்தலைநகரில் இருந்து பேரரசரின் இராசப் பிரதிநிதி இலங்கையை ஆண்டு வந்தான். பன்னெடுங்காலமாக அனுராதபுரமே இலங்கை யின் தலைநகராக விளங்கியது. அங்கிருந்து சோழ வேந்தன் பொலனறுவாவிற்குத் தலைநகரை மாற்றிய செயல், வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். பின்னர், சோழரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர், சிங்கள அரசு களும், பொலனறுவாவையே தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யலாயின.

பேரரசனின் அரசப் பிரதிநிதி, தாயக ஆட்சி அமைப்பு முறையைப் பின்பற்றி, அரசவையையும், பல பெருந்தர சிறுதர அதிகாரிகளையும் கொண்ட ஆட்சி இயந்திரத்தைச் செம்மையாக இயக்கி வந்தான். பேரரசன் இராசேந்திரன் காலத்தில், பெருந்தரத்து அதிகாரி ஒருவன் திருவீர மீசுவரத்துத் திருக்கோயிலுக்கு நிவந்தம் அளித்ததைக் கல்வெட்டு ஒன்றால் அறிகின்றோம். இத்தகைய அதிகாரி களின் பதவிப் பெயர்கள், பிற சோழர் கல்வெட்டுகளிலும் வழங்குவதைக் காணுகின்றோம். மேலே குறிப்பிடப்பட்ட

கல்வெட்டில், வெற்றிலை வாணியர், வாழைக்காய் (பழம்) வாணியர்,சங்கரப்பாடியார் (எண்ணெய் வாணியர்)பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.[1] இத்தகைய வாணிகர்கள் பலர் இருந்தமை அக்காலத்திய கல்வெட்டுகள் பலவற்றால் தெரிய வருகின்றது.

இராசராசனுடைய ஆட்சியில், இலங்கையின் வடபகுதியாகிய இராசராட்டிரமே அடங்கி இருந்தது. கி. பி. 1017 இல், முதலாம் இராசேந்திரனே இலங்கையின் தென் பகுதியை வென்று, இலங்கை முழுவதிலும் சோழருடைய ஆதிக்கத்தை நிலை நாட்டினான். தென் மாநிலமான ரோகணம், சோழருக்குப் பெருந்தொல்லை கொடுத்து வந்தது. கி. பி. 1029 முதல் 1070 வரையில் ரோகணம் சோழருடைய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சியும், கலகமும் செய்து வந்தது. கடைசியாக 1070 இல், சோழரின் மேலாதிக்கம் முறியடிக்கப்பட்டது.

அயலாருடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருத்தலைச் சிங்களவர் தன்மானப் பிரச்சினையாகக் கருதினர். அதனால், ரோகணத்தில், கிளர்ச்சியும் போராட்டமும், கலகமும் குழப்பமும் மாறிமாறித் தலையெடுக்கலாயின. சோழவேந்தரும், இலங்கையில் உள்ளாட்சி முறையை மாற்றித் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டாமல் போய்விட்டனர். பிடித்த நாட்டில், தங்கள் ஆட்சியை அமைப்பதில் அவர்கள் தீவிர திட்டங்களை மேற்கொள்ளவுமில்லை. இதனால், சிங்கள நாட்டின் உள்ளாட்சி அதிகாரங்கள் சிங்களவர் கையிலேயே இருந்தன; ஒருமுகப்படுத்தப்பட்ட பேரரசின் ஆட்சி வேரூன்றவில்லை. ஆண்டுதோறும் செலுத்தப்பட வேண்டிய திறைப் பொருளைத் தண்டுவதிலும், குறிப்பிட்ட தேவைகளுக்காக வரி விதிப்பதிலும், படை சேர்ப்பதிலும் பேரரசு ஈடுபட்டிருந்தது. மற்ற வகையில், மாநில சுயாட்சி இலங்கையில்

---

[1] S. I. I.,VOl- 4, NO. 14

திலவியது. இத்தகைய மெத்தனத்தால், சோழப் பேரரசு விரைவில் ஈழமண்டலத்தை இழக்க நேர்ந்தது.

வரி விதிப்பிலும், தண்டுதலிலும் தமிழகத்தில் இருந்த முறையை இலங்கையிலும் சோழப் பேரரசு பின்பற்றியது. அரசின் வருவாய், நிலவரியையே பெரிதும் சார்ந்திருந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு, மானியமாக இலங்கையில் ஐந்து ஊர்கள் விடப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து, ஆண்டு தோறும் பணமும், நெல்லும், கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்கு இலுப்பைப்பாலும் (எண்ணெய்), கடமைப் பொருளாக மரக்காலால் அளந்து அனுப்பப்பட்டு வந்தன. இராசராசன் காலத்தில், நிலவருவாயில் மூன்றில் ஒரு பகுதியை, அரசுக்கு இறையாகச் செலுத்துவது வழக்கம். இம்முறையே இலங்கையிலும் பின்பற்றப்பட்டிருத்தல் கூடும்.

சோழர்காலத்தில் சிறப்புற்று விளங்கிய 'காசு' எனும் பணம், இலங்கையில் புழக்கத்தில் இருந்தது. இலங்கையில் புழக்கத்திலிருந்த ஒருவகைக் காசினை 'ஈழக்காசு' எனச் சுட்டியதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம் இலங்கையில் கிடைத்துள்ள காசுகள் முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன் போன்ற மன்னர்களின் காசுகளாகக் காணப்படுகின்றன.[1]

இலங்கையிலிருந்த முக்கியமான நகரங்களில் சோழரின் படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. சிறப்பாகத் தலைநகரான பொலனறுவாவில் ஆற்றல்மிக்க படையொன்று, நிலையாக நிறுத்தப்பட்டிருந்தது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை எனும் மூவகைப் படைகள் அதில் இடம்பெற்றிருந்தன. படைகளுக்குத் தக்கப் பயிற்சி கொடுக்கப் பட்டது. படைகளின் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் காப்பதில் மேலதிகாரிகள் கருத்துடையவர்களாக இருந்

---

1. Godrington, Coins of Ceylon, PP. 84-85.

தனர். சோழரின் படை, இலங்கையில் கொள்ளை, கொலை, தீவைப்புப் போன்ற கொடிய செயல்களில் ஈடுபட்டதாகவும் தெரிகிறது. படையெடுப்பின்போது, நாட்டைக் கைப்பற்ற வேண்டும் எனும் துடிப்பால் இத்தகைய செயல்களில், படைகள் உலகமெங்கும் ஈடுபடுவதுண்டு. இதனைப் பௌத்த சமய ஏடுகளான மகாவமிசம் போன்றவை சிறிது மிகைப் படுத்திப் பேசுகின்றன.

சில புத்தவிகாரைகளைச் சோழர் படைகள் அழித்து விட்டன. இதனைப் பெரிதும் மிகைப்படுத்தி மகாவமிசம் போன்ற பௌத்த சமயத் தொடர்பான காலவழிச் செய்திக் கோவைகள் தெரிவிக்கின்றன. பௌத்தரின் கோயில்கள், அறநிலையங்கள் சில போர்க்காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அப்படையைச் சேர்ந்த தலைவர்களும், பிற தமிழர்களும் பல விகாரைகளைப் புதுப்பித்தும், சிலவற்றைப் புதியதாகக் கட்டியும் உள்ளனர் என்பதை நாம் மறத்தல் இயலாது. திருக்கோணமலை மாவட்டத்தில் மட்டும், இருபத்தைந்து தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் பதினாறு கல்வெட்டுகள் புத்த சமயத் தொடர்பானவை. சோழ மன்னர்கள் புத்தவிகாரைகளுக்கு ஏராளமான மானியங்களை வழங்கியுள்ளனர்; அறக் கட்டளைகளை அமைத்துள்ளனர். திருக்கோணமலையில் கிடைத்துள்ள சில கல்வெட்டுகள் இதைப்பற்றிப் பல செய்திகளைத் தெரிவிக்கின்றன. முதலாம் இராசராசனுடைய ஆட்சிக்காலத்தில் அங்கிருந்த பௌத்தப் பள்ளிக்கு 'இராசராசப் பெரும் பள்ளி' என்று பெயரிடப்பெற்றது. தமிழர் பலர், அக்கோயில்களுக்குப் பல நிவந்தங்கள் வழங்கியுள்ளனர். பல தமிழ்க் கல்வெட்டுகள் அவற்றில் காணப்படுகின்றன.

முதலாம் விசயவாகுவின் காலத்தில், வேளைக்காரப் படைப் பிரிவு அமைப்பு இலங்கையில் நிறுவப்பட்டது. அரசனின் தற்காப்பிற்காக அமைக்கப்படும் அரசப்படையே, வேளைக்காரப்படை. அரசனுடைய மெய்க்காப்பாளராகவும், ஆபத்துதவிகளாகவும் எந்நேரமும் அரசனைச் சூழ்ந்து

இருந்தவர்கள் வேளைக்காரப் படையினராவர். இத்தகைய படையமைப்பு முறை, சோழருடைய ஆட்சியின் பொழுது, தமிழகத்தில் தோன்றியது. எனவே, சோழரின் ஆட்சியால் உண்டான தாக்கங்களுள், இலங்கையரசர் வேளைக்காரப் படையினரை நிலையாகத் தம்பக்கத்தில் நிறுத்திக் கொண்டமை ஒன்றாகும். இலங்கையின் வேளைக்காரப் படையினர், பெரிதும் அயல்நாட்டுக் கூலிப்படை யினராவர். அவர்கள், அரசனிடம் பற்றுறுதி உடையவராக இருந்தனர். சோழருடைய ஆட்சிக்காலத்தில் அவர்கள், பெரிதும் தமிழராகவே இருந்தனர்.

இப்படைமுறை, முதலாம் விசயவாகுவிற்குப்பிறகு, ஒரு நூற்றாண்டுவரை இலங்கை மன்னரால் பின்பற்றப்பட்டு வந்தது; வேளைக்காரப் படையினர் பெரிதும் இந்துக்களாகவே இருந்தனர். எனினும், அவர்கள் புத்தர் பெருமானின் திருப்பல் வைக்கப்பட்ட கோயிலைக் காக்கும் பொறுப்பை, விசயவாகுவின் காலத்தில் மகிழ்ச்சியுடன் ஏற்றனர் என்பதை அறிகிறோம். கந்தளாயில் உள்ள சிவன் கோயிலின் அறக்கட்டளைகளை வேளைக்காரர் சிலர் நிருவகித்து வந்தனர் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இலங்கை வாழ் சிங்களவருக்கும் சோழருக்கும் இடையே உண்டான மனக்கசப்பிற்குச் சமய வெறுப்பு ஒரு காரணமாக இருந்ததில்லை. பொதுவாகச் சோழ மன்னர் எல்லாரும் சைவர்களாகவே இருந்தனர். எனவே, சமயக் காழ்ப்பு காரணமாகவே இலங்கை மன்னருக்கும் சோழவேந்தருக்கும் தீராப்பகைமை இருந்து வந்ததாகக் கூறுவர். சோழரைப் பொறுத்த வரையில், 'பேரரசை நிறுவவேண்டும் என்னும் பேரார்வமே' அவர்களுடைய படையடுப்புகளுக்குக் காரணமாக இருந்தது. ஆனால், சிங்களவர்களே, சமயக் கண்ணோட்டத்தில், 'சோழர் படையெடுப்புகளை இழித்தும் பழித்தும் வெறுத்தும் மிகைப்படுத்தியும் தூற்றினர்.' இதை இலங்கையின் காலவழிச் செய்திக் கோவைகள் ஒரே குரலில் சோழ

ருடைய யடையெடுப்புகளைக் கண்டிப்பதாலும், ஓயாமல் சோழர் ஆட்சியைத் தூற்றுவதனுலும் அறிகிரும்.

பௌத்த சமயத்திற்குச் சோழ மன்னர் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அதே சமயததில், அவர்கள், பல இந்துக் கோயில்களையும் இலங்கையில் கட்டியுள்ளனர். சில சிவன் கோயில்களாகவும் சில திருமால் கோயில்களாகவும் உள்ளன. சனநாத மங்கலமாகிய பொலனறுவாவில், இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் இன்றுவரை நல்ல நிலையில் இருந்து வருகிறது. தமிழகத்தில் பத்து, பதினேராம் நூற்றுண்டுகளில் எடுக்கப்பட்ட கோயில்களின் கட்டடக்கலைப்பாணி வாய்ந்ததாக அது காணப்படுகிறது. தாழிகுமரன் எனும் சோழ அதிகாரி ஒருவன், மகாதிட்டையில் ஒரு சிவன் கோயிலை எடுப்பித்ததை நாம் முன்னரே கண்டோம். அக்கோயிலுக்கு இராசேச்சுவரம் எனும் பெயர் வழங்கியமை இங்குக் கருதத்தக்கது.

பொலனறுவாவில் உள்ள மற்ருெரு கோயிலுக்கு வானவன் மாதேவி ஈச்சுவரம் எனும் பெயர் வழங்கிவருகிறது. இராசராச சோழனின் பட்டத்தரசி வானவன் மாதேவி யாவர். எனவே, அவரைச் சிறப்பிக்கவோ, அவ்வம்மையின் நினைவாகவோ, இலங்கையில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இக்கோயிலில், முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனல், முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரன் போன்ற சோழவேந்தர்களின் கல்வெட்டுகள் அக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. இதனுல், அக்கோயிலில், முதலாம் இராசராசனுடைய இறுதிக் காலத்தில் எடுக்கப்பட்டதாகும் என்பது தெரியவருகிறது. அக்காலத்தில் பொலனறுவாவின் அருகில் வேறு சில வைணவக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. பொலனறு வாவில் உள்ள சிவன் கோயில் ஒன்றில், நான்கு

தூண்களில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கற்பகம் எனும் பெண்மணி ஒருதூணை நாட்டியுள்ளாள். அக்கோயில்களில் வெண்கலச்சிலைகள் - தெய்வத் திருமேனிகள் பல உள்ளன. அவை யாவும் தமிழகத்தின் சோழர்காலத்திய சிலைகளைப்போன்ற நேர்த்தியும் கவர்ச்சியும் வாய்ந்தனவாக உள்ளன. இவற்றைப்பற்றிப் பின்னர்க் காண்போம்.

இயல் 6

# பாண்டிய நாட்டு அரசியலில் சிங்களவர் தலையீடு

## *அரசியல் கொந்தளிப்பு*

*கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், பாண்டிய நாடு இரு பகுதிகளாகப் பிரிந்து இருந்தது. திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்ட தென்பாண்டி நாட்டைச் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1161) ஆண்டுவந்தான். அதே காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு, பாண்டிய நாட்டின் வடபகுதியைப் பராக்கிரம பாண்டியன் ஆட்சிபுரிந்தான். இவ்விருவருக்கும் அரசுரிமை காரணமாகப் பகைமை உண்டாயிற்று. குலசேகரன் மதுரையை முற்றுகையிட்டான். பராக்கிரம பாண்டியன், இலங்கை அரசனுடைய உதவியை நாடினான். அவனும் பாண்டியன் வேண்டுகோளுக்கு இணங்கி, இலங்காபுரித் தண்டநாயகன் தலைமையில், பெரும்படை ஒன்றை அனுப்பி வைத்தான். அச்சிங்களப் படை, பாண்டிய நாட்டிற்கு வருவதற்கு முன்னரே, மதுரையை முற்றுகையிட்டிருந்த குலசேகர பாண்டியன் பராக்கிரம பாண்டியனையும், அவன் மனைவியையும் கொன்று, அத்தலைநகரைக் கைப்பற்றிக் கொண்டான்.*

இச்செய்தியைச் சிங்களப் படைத் தலைவன் கேள்வி யுற்றான்; பெரும் சீற்றங் கொண்டான். இராமேச்சுரம், குந்துகாலம் என்னும் ஊர்களைச் சிறிதுசிறிதாகப் பிடித்துக் கொண்டு வந்த சிங்களப் படைக்கும், குலசேகரப் பாண்டியன் படைக்கும் கடுமையான போர் நடந்தது. போரில் பாண்டியன் இருமுறை தோல்வியுற்றான். இலங்காபுரித் தண்டநாயகன் வெற்றிபெற்று, மதுரை மாநகரைக் கைப் பற்றினான். கொலையுண்ட பராக்கிரம பாண்டியனின் கடைசி மகனும், மலைநாட்டில் ஒளிந்துகொண்டு இருந்தவனு மாகிய வீரபாண்டியனை அழைப்பித்து, அவனைப் பாண்டிய நாட்டின் அரசனாக இலங்காபுரித் தண்டநாயகன் முடி சூட்டினான்.

சிங்களப் படைத் தலைவன், பாண்டிய நாட்டின் தென் பகுதியிலிருந்த கீழை மங்கலம், மேலை மங்கலம் முதலான ஊர்களைப் பிடித்தான். அவற்றைக்,கண்ட தேவ மழவராயன் என்ற பாண்டியர் படைத் தலைவனிடம் ஒப்படைத்தான்; தொண்டி, கருந்தங்குடி, திருவேகம்பம் முதலான ஊர்களைப் பிடித்து அவற்றை மழவ சக்கரவர்த்தி என்ற பாண்டியன் படைத் தலைவனுக்கும் கொடுத்து, அவர்களை ஆளுமாறு செய்தான்.

இவ்வாறு, குலசேகரப் பாண்டியனின் படைத் தலைவர் களை, இலங்காபுரித் தண்டநாயகன் தன் வசமாக்கிக் கொண் டான். மீண்டும், குலசேகரப் பாண்டியன் போருக்குப் புறப் பட்டான். மேற்கண்ட படைத்தலைவர் இருவரும் தங்க ளுடைய அரசனை குலசேகரப் பாண்டியனோடு சேர்ந்து கொண்டனர். மூவரும் ஒன்றாகச் சேர்ந்து மதுரையைத் தாக்கினர். வீரபாண்டியன் மதுரை மாநகரை விட்டு ஓடினான். இதையறிந்த இலங்காபுரித் தண்டநாயகன், இலங்கையிலிருந்து தனக்கொரு துணைப்படை அனுப்புமாறு இலங்கை அரசனை முதலாம் பராக்கிரமபாகுவிற்கு (கி. பி. 1153-1186) ஒரு கடிதம் அனுப்பினான்.

அவ்வரசன் சரத்விசய தண்டநாயகன் தலைமையில் ஒரு பெரும்படையை அனுப்பி வைத்தான். சிங்களப் படைத் தலைவர் இருவரும் சேர்ந்து, குலசேகர பாண்டியனைத் தாக்கினர். குலசேகரன் புறமுதுகிட்டு ஓடினன். இலங்கைப் படைத்தலைவர் இருவரும், மீண்டும் வீரபாண்டியனை மதுரையின் மன்னனாக முடிசூட்டினர்.

## சோழரின் தலையீடு

சிங்களவரிடம் பன்முறை தோல்வியுற்ற குலசேகர பாண்டியன், கி. பி. 1167 இல் சோழ நாட்டிற்குச் சென்று, அப்போது ஆட்சி புரிந்து கொண்டிருந்த இரண்டாம் இராசாதிராசனைத் தனக்கு உதவி புரியுமாறு வேண்டினன். சோழனும், அவன் வேண்டுகோட்கு இசைந்தான். சோழ மன்னன் உடனே, ஒரு பெரும்படையைத் திருச்சிற்றம்பலம் உடையான் பெருமான் நம்பிப் பல்லவராயன் தலைமையில் பாண்டிய நாட்டிற்கு அனுப்பினன். சோழரின் படை, சிங்களப் படையைத் தொண்டி, பாசிப்பட்டினம் முதலிய இடங்களில் தாக்கியது. இரு திறத்தார்க்கும் இடையே, கடுமையான போர் நடந்தது. அப்போரில் சிங்களத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களுடைய தலைகளை, யாவரும் காணுமாறு மதுரைக் கோட்டை வாயிலில் காட்சிப் பொருளாகச் சோழ சேனபதி வைத்தான். குலசேகரனை மதுரையிலிருந்து அரசுபுரியுமாறு அவன் முடி சூட்டினன்.

பராக்கிரமபாகு தனக்குண்டான பெரும் மானக் கேட்டைப்,போக்கிக் கொள்வதற்காகவும், சோழ பாண்டிய மன்னர்களைப் பழி வாங்கவும் கருதினன். அதற்காக, அவன் முயன்று கொண்டிருப்பதை அறிந்த சோழனின் படைத் தலைவன் பல்லவராயன், அவனுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினன். இலங்கையின் அரசுரிமை பற்றிப் பராக்கிரம பாகுவோடு அவ்வரசனின் மருமகன் சீவல்லபன் பகைமை கொண்டிருந்தான். அவன் சோழநாட்டிற்கு வந்து தங்கியிருந்தான்.

அவனுக்கு ஆற்றல் மிக்க பெரும்படையைச் சோழன் உதவி, அவனை இலங்கையின் மீது படையெடுக்குமாறு தூண்டினான். அப்படை இலங்கை ஊராத்துறை, வல்லிக்காமம், மட்டிவாழ் முதலிய ஊர்களிலே புகுந்தும், புலைச்சேரி, மாதோட்டம் முதலிய ஊர்களை அழித்தும், சில சிங்களத் தலைவர்களைக் கொன்றும் பெரும்பொருளுடன் சோழநாடு திரும்பியது.

## சூழ்ச்சியும் வீழ்ச்சியும்

இதனால் பேரதிர்ச்சியும் பெருந்துன்பமும் பராக்கிரமபாகு அடைந்தான். இனியும் வீரபாண்டியனை ஆதரிப்பதால் தனக்குத் துன்பமே உண்டாகும் என்பதை அவன் உணர்ந்தான். எனவே, மதுரையிலிருந்து அரசாண்ட குலசேகரனைப் பாண்டிய மன்னனாக ஏற்றுக் கொண்டு, அவனோடு சிங்கள அரசன் நட்புறவு கொண்டாடத் தொடங்கினான். அவன் விலை மதித்தற்கரிய பொருள்களை அன்புப்பரிசாகப் பாண்டியனுக்குத் தூதர் மூலம் அனுப்பி வைத்தான்.

இதைக் கண்டு மகிழ்ந்த பாண்டியன், தனக்குதவியாக இருந்த சோழனுடைய உடன்பாட்டைப் பெறாது, சிங்கள அரசன் அனுப்பிய பரிசுகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டான். மேலும், சிங்கள அரசனிடத்துத் திருமணத்தொடர்பு கொள்ள விழைவதாகவும் பாண்டியன் அறிவித்தான். மற்றும், வேறுசில உள்நாட்டு நிகழ்ச்சிகளில் சோழ மன்னனுக்கு வெறுப்புண்டாகுமாறு குலசேகரன் நடந்து கொண்டான். இவற்றால், சீற்றம் அடைந்த சோழன் இரண்டாம் இராசாதிராசன், குலசேகரனை எதிர்த்துப்போரிட்டு, வெற்றியும்பெற்றான். பின்னர், சோழமன்னன் வீரபாண்டியனுக்குப் பாண்டிய நாட்டை அளித்து ஆட்சிபுரியுமாறு செய்தான்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில், குலசேகர பாண்டியனுடைய மகனான விக்கிரம பாண்டியன்,

சோழ அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அச்சமயத்தில் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டியன், சோழருக்கு எதிராக இலங்கை அரசோடு நட்புறவு கொண்டான். இதனால் கி. பி. 1186இல், பாண்டியன் மீது குலோத்துங்கன் படையெடுத்துச் சென்றான். இலங்கை அரசன் முதல் பராக்கிரமபாகு பெரும் படையொன்றை அனுப்பி வைத்தான். பாண்டியநாட்டில் சோழன் வெற்றி பெற்றதோடு அமையாது இலங்கைக்குப் படைகளை அனுப்பி, பராக்கிரம பாகுவை அடிபணிய வைத்தான்.

மூன்றும் இராசேந்திர சோழன் காலத்தில் (கி. பி. 1253க்கு முன்னர்), வீர ராட்சசர் மிகுந்த இலங்கையின் மீது இவ்வரசன் படையெடுத்துச் சென்று, வடஇலங்கையை வென்றதாக இவனுடைய மெய்க்கீர்த்தி கூறுகிறது. பாண்டியனுக்கு உதவி செய்து, சோழரின் ஆதிக்கத்தைக் குலைக்க இரண்டாம் பராக்கிரமபாகு முயன்றமையே இப்போருக்குக் காரணமாகும்.

சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றதும், பாண்டியருக்கும் சிங்களவருக்கும் இடையே இருந்து வந்த நட்புறவு முறிந்தது. பாண்டியர், சிங்களவர்களின் கொடிய பகைவர்களாயினர்; இலங்கை மீது படையெடுத்துச் சென்றனர். சடையவர்ம சுந்தரபாண்டியனும், மாறவர்மன் குலசேகர பாண்டியனும் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, வாகை சூடினர்.

# இயல் 7

# யாழ்ப்பாணத் தமிழரசு

## அரசின் தோற்றம்

சோழரின் மேலாதிக்கம் இலங்கையில் முறியடிக்கப்பட்ட பிறகு, இலங்கையின் வடபகுதியில் தனியரசு ஒன்று தோன்றியது. அதனை 'யாழ்ப்பாணத் தமிழரசு' எனச்சுட்டுவது மரபு. அது தமிழகத்தோடு நெருக்கமான தொடர்புடையதாக இருந்தது. இவ்வரசின் தோற்றம் பற்றிய செய்திகள் இருள் சூழ்ந்தனவாக உள்ளன. ஓரளவிற்கு வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கும் யாழ்ப்பாண வைபவ மாலை, கயிலாய மாலை எனும் இருநூல்களிலும் யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிய மரபுவழிச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

"சாலிவாகன சகாப்தம் 717 (கி. பி. 795) இல், புகழ்மிகு அரசன் விஜயனுடைய உடன் பிறந்தவனாய், வடதேசத்தில் (இந்தியா) நிறுவப்பட்ட அரசமரபில் தோன்றியஉக்கிர சிங்கன் என்பவன், பெரும்படையோடு இலங்கையில் வந்து இறங்கினான். கடுமையான போருக்குப் பிறகு, அவன் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றித், தன்னுடைய ஆட்சியை நிறுவினான். அவன், கதிரை மலைப்பகுதியை ஆண்டான்

மற்ளுருவன் தென் இலங்கையை ஆண்டு வந்தான்" என்று யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூல் தெரிவிக்கிறது.

விசயனின் பங்காளி ஒருவனுக்குப் 'பாண்டுவாசா' என்பது பெயர். அவனுடைய மரபிலே வந்தவன் உக்கிர சிங்கன் என்று மேற்கண்ட நூல் தெரிவிக்கிறது. இதனால், இலங்கையில் முதன்முதல் இந்திய நாட்டிலிருந்து (கலிங்க) குடியேறிய விசயனோடு, இந்த அரச மரபும் தொடர்புடையது என்று அக்கால இலங்கை மக்கள் கருதினர் என்பது புலனாகின்றது. சிறிது காலத்திற்குப் பிறகு, உக்கிரசிங்கன், தன் தலைநகரைக் கதிரைமலையிலிருந்து சிங்கை நகருக்கு (நல்லூர்) மாற்றினான் என்று அந்நூலினால் அறிகிறோம். இவ்வாறு யாழ்ப்பாணத்தின் 'ஆரியசக்ரவர்த்தி'களுக்கும் பொலனறுவாவின் 'கலிங்க சக்கரவர்த்தி'களுக்கும் ஆதி முதல்வனாக அவன் கருதப்படுகிறான்.

யாழ்ப்பாண அரசின் தோற்றம்பற்றி வழங்கும் மற்றொரு மரபுவழிச் செய்தி, இங்கு ஆராயத்தக்கது. தமிழ் நாட்டைச் சேர்ந்த யாழில் வல்ல பாணன் ஒருவனே இந்த அரசைத் தோற்றுவித்தவன் என யாழ்ப்பாண வைபவமாலை, கயிலாய மாலை, தட்சிண கயிலாச புராணம் போன்ற நூல்கள் தெரிவிக்கின்றன. இவை தெரிவிக்கும் செய்திகளுள் முரண்பாடுகள் உள்ளன. உக்கிரசிங்கனுடைய மகனான செயதுங்கவரராச சிங்கன் காலத்தில்தான், யாழில் வல்ல பாணன் இலங்கைக்கு வந்ததாகக் கயிலாய மாலை கூறுகிறது. இச்செய்திகள் யாவும், 'யாழ்ப்பாணம்' எனும் பெயரிற்குப், பிற்காலப்புலவர்களின் கற்பனையில் தோன்றிய விளக்கத்தை அறிவிப்பனவாக உள்ளன.

கதிரைமலையில் உக்கிரசிங்கன் ஆட்சியை நிறுவிய பிறகு, கதிரைமலைக்கு யாத்திரையாக வந்த சோழநாட்டு இளவரசியான 'மருதப்பிறவிகவல்லி' என்பவளிடம் அவன் காதல் கொண்டான். அவளை வன்முறையில் கவர்ந்து சென்று, அவளை திருமணம் செய்து கொண்டான் என்று யாழ்ப்பாண

வைபவமாலை தெரிவிக்கிறது. இக் கதையில் பொதிந்துள்ள அடிப்படை உண்மை, சோழ இளவரசியை உக்கிரசிங்கன் திருமணம் செய்துகொண்டதன் மூலம், தன்னுடைய அரசினை வலுப்படுத்திக் கொண்டான் என்பதாகும். இவ்வரசனும் அரசியும் சேர்ந்து மாவிட்டபுரத்தில் கந்தசாமிக் கோயிலைக் கட்டினர் என்று மேற்கண்ட நூல் தெரிவிக்கிறது. இவ்வரசி, தன்னுடைய தகப்பனுரை வேண்டிக் கொண்டதற்கு இணங்க, சிதம்பரத்தைச்சேர்ந்த 'பெரியமனதுளார்' எனும் குருக்கள் இக்கந்தசாமி கோயிலில் பணிபுரிவதற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அறிகிறோம். இதைப்போன்ற வேறு சில (முன்னுக்குப்பின் முரணுக உள்ள) செய்திகளை யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் மற்றொரு தமிழ்நூல் கயிலாயமலை என்பதை முன்னரே நாம் கண்டோம். யாழ்ப்பாணத் தமிழரசின் தோற்றத்தைப்பற்றி இந்நூல் வேறு வகையானதொரு செய்தியைத் தெரிவிக்கிறது. இலங்கையில் வாழ்ந்த வேளாளர் தலைவனை பாண்டிமழவன் என்பவன், பாண்டிய இளவரசன் ஒருவனை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து, அரசனுக்கினுன் எனச் சொல்லுகிறது. அவ்விளவரசனைச் 'சேகரராசன்' எனவும், 'சிங்கை அரையன்' எனவும் இந்நூல் சுட்டுகிறது. பின்னர் அவனை, 'விசய கூழங்கை சக்கரவர்த்தி' எனவும் இந்நூல் போற்றுகிறது. அவனுடைய ஒரு கையில் ஊனம் இருந்தமையால் அவனைக் 'கூழங்கை' என அடை கொடுத்துச் சுட்டுவது வழக்கமாயிற்று என்பது இதனுல் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தமிழரசின் தோற்றம்பற்றி நம்பஇயலாத பல செய்திகளை ஒன்ருகக் குழைத்து, சுவைமிக்க வகையில் இக்கதைகள் யாவும் படைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து ஓர் உண்மை புலனுகின்றது. கி.பி.795 அளவில் யாழ்ப்பாண அரசு உக்கிரசிங்கன் என்பவனுல் தோற்றுவிக்கப்பட்டது என்பதும், கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண்டிற்குச் சிறிது முன்னர் இருந்து, இந்த அரசமரபினர் 'ஆரியச்சக்கரவர்த்தி

கள்' எனும் சிறப்புப்பெயரால் சுட்டப்பட்டனர் என்பதும் அறியப்படுகின்றன.

## ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்பு

ஆரியச்சக்கரவர்த்தி எனும் குடிப்பெயர் எவ்வாறு உண்டாயிற்று என்பது பெரிய புதிராகவே இருந்து வருகிறது. கி.பி. 1284இல், முதலாம் புவனேகவாகு இறந்தவுடன், பாண்டிய மன்னன் இலங்கையின் மீது படையெடுத்தான். அப்பொழுது ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் பாண்டியன் படைக்குத் தளபதியாக விளங்கினன். அவன் கொடுஞ் செயல்கள் பலவற்றின் மூலம் இலங்கையைப் பாழ்படுத்திய தோடு அமையாது, புத்தரின் திருப்பல்லையும், அளவிறந்த செல்வத்தையும் கவர்ந்து சென்றான்; தாயகம் திரும்பியதும் அவற்றைப் பாண்டியன் குலசேகரனிடம் வெற்றிப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தான் என்று சூலவமிசம் கூறுகிறது.

'இந்த ஆரியச்சக்ரவர்த்திக்கும் யாழ்ப்பாண அரச மரபினரான ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் யாதாகிலும் தொடர்பு உண்டா?' என்பதை உறுதியாகக் கூற இயலவில்லை. பாண்டியர் படைத்தலைவனை ஆரியச்சக்கரவர்த்தியின் இயற்பெயர் மதிதுங்கன் என்பதாகும். அவன், பாண்டிய மண்டலத்து சேவிருக்கைநாட்டுச் சக்கரவர்த்தி நல்லூரைச் சேர்ந்தவனாவான். ஆரியச்சக்கரவர்த்தி என்பது அவனுடைய குடும்பத்தின் சிறப்புப் பெயராகும். ஒருகால், தந்தை வழியில் அவன் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி மரபோடு தொடர்புடையவனாக இருந்திருக்கலாம். ஆனால், அவன் 'தமிழ்நாட்டு இந்து' என்பதில் ஐயமில்லை. எனவே, அவனை முஸ்லீம் என்று K. V. சுப்பிரமணிய ஐயர் கருதியமை பொருத்தமாகத் தோன்றவில்லை.[1] அவனுடைய இலங்கைப் படையெடுப்பால், யாழ்ப்பாண ஆரியச்சக்கர

[1] K. V. Subramania Aiyer, Historical Sketches of Ancient Dekhan, Vol. 1., PP.120-21

23 DEC

வர்த்திகளின் ஆற்றலும் சிறப்பும் பெருகியது பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்ட அரசப் பிரதிநிதிகளாகவே, அவர்கள் தங்களைக் கருதினர். மற்றும், அவர்கள் எப்பொழுதும் பாண்டிய அரச குடும்பத்தினிடம் ஈடுபாடும், பற்றுறுதியும் உடையவர்களாக இருந்து வந்தனர்.

## கலிங்கமும் ஆரியச்சக்கரவர்த்திகளும்

இந்நிலையில், மற்றோர் உண்மையையும் நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம். உக்கிரசிங்கன் முதலான யாழ்ப்பாண அரசர்கள் அனைவரும் கலிங்கர் என்று சுட்டப்படுகின்றனர். உக்கிரசிங்கன் விசயனுடைய உறவினன் எனும் செய்தியை இணைத்துப் பார்க்கின்றபொழுது, உக்கிரசிங்கன் கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்தவனாகவே தோன்றுகிறது. மற்றும், யாழ்ப்பாண அரசர்கள், தாங்கள் 'கங்கை மரபைச்' சேர்ந்தவர் எனப்பெருமையாகக் கருதியதையும் காணுகின்றோம். அவர்கள் ஆட்சியில் சிறப்புற்று விளங்கிய தமிழ்ப் புலவர்கள் இயற்றிய நூல்களில், 'கங்கை நாடன்' எனவே அவர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.[1] அவர்கள் வெளியிட்டுள்ள காசுகளில், கலிங்கத்தை ஆண்ட சங்க அரசர்களின் காசுகளில் காணப்படுவதைப் போன்றே, படுத்துள்ள எருதின் சின்னம் ஒரு பக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவையாவும், இவர்களுக்கு இடையே நிலவிய உறவினை வெளிப்படுத்துவனவாகும்.

பழந்தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கலிங்கநாட்டுச் சிங்கபுரத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[2] யாழ்ப்பாணத்து அரசினைத்

---

1 C. Rasanayagam, Ancient Jaffna, P.304. F.N.

2 கடிமொழிலுடுத்த கலிங்க நன்னாட்டு தீம் புனல் பழனச் சிங்காபுரத்தினும் (சிலப். 23:138-140), சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோர் (சிலப். 23:149)

தோற்றுவித்தவர்கள் அந்தச் சிங்கபுரத்திலிருந்து வந்தவர்களாக இருத்தல் கூடும். இது, அவர்கள் இலங்கையில் கண்ட அரசின் தலைநகருக்குச் 'சிங்கபுரம்' என்று பெயரிட்டுள்ளமையால் வலியுறுகிறது. சூலவமிசத்தில் இக்கருத்தினை அரண் செயும் சான்று ஒன்று காணப்படுகிறது. நான்காம் மகிந்தன் (கி.பி. 956-972) எனும் சிங்கள அரசன், 'கலிங்க சக்கரவர்த்திக்குடும்பத்து இளவரசியைமணம்செய்துகொண்டானும்.[1] கி.பி. பத்தாம் நூற்றுண்டில் 'கலிங்க சக்கரவர்த்திகள்' என்று சுட்டப்பட்டவர் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசமரபையே குறிப்பதாகத் தோன்றுகிறது. இதைப் போன்றே, முதலாம் விசயவாகு (கி.பி. 1055), தன் குலவிருத்திக்காக கலிங்க இனத்து இளவரசியான திலகசுந்தரியை மணம் செய்துகொண்டான்.[2] இங்குக் குறிப்பிடப்படும் அரசமரபு, கலிங்க இன அரசமரபேயொழிய, கலிங்க நாட்டு அரச மரபு அன்று. எனவே, யாழ்ப்பாணத்து அரச மரபையே, சிங்கள மொழி ஏடுகள், கலிங்க இன அரசமரபாகக் குறிப்பிடுவது புலனுகின்றது.

## மணவுறவும் போரும்

இத்தகைய திருமண உறவுகள் சிங்கள அரசர்க்கும் யாழ்ப்பாணத்து அரசகுடும்பத்திற்கும் இடையே தொடர்ந்து நிலவிய போதிலும், சில சமயங்களில் இரு மரபினரும் போரிட்டுக் கொண்டும் இருந்தனர். முத்துக் குளிப்பு உரிமையின் காரணமாக முதலாம் புவனேகபாகு விற்கும் (கி.பி. 1272-84), யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தியான கனகசூரிய சிங்கை ஆரியனுக்கும் இடையே கடுமையான போர் நடந்தது. கி. பி. 1450 அளவில் யாழ்ப்பாணத்

---

காசில் பூம்மொழில் கலிங்க நன்னாட்டு சிங்கபுரம் (மணி. 26:15-17).

[1] சூலவமிசம் 44:7:7-16.

[2] ஷை 49 : 29-30.

தின்மீது சிங்களவரின் பெரும்படையெடுப்பு ஒன்று நடந்தது. ஆறும் பராக்கிரமபாகு, தன் மகனுடைய தலைமையில் படையினை அனுப்பினான். முதற்படையெடுப்பில் சிங்களவர் படை படுதோல்வி அடைந்தது. சிறிது காலத்திற்குப்பின் நடைபெற்ற இரண்டாவது படையெடுப்பில், ஆரியச்சக்கரவர்த்தி நாட்டைவிட்டு ஓடினான்; சிங்களவர் படை சிங்கைநகரைக் கைப்பற்றிக் கொண்டது. அரசைத் துறந்து ஓடிய கனகசூரிய சிங்கை ஆரியன், தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தான். கி. பி. 1467 இல், தென்னாட்டு அரசர்களின் பெரும்படையோடு அவன், இலங்கைக்குத் திரும்பினான். சிங்களவரைத் தோற்கடித்து, தன் அரசினை மீண்டும் அவன் திரும்பப் பெற்றான்.

## சிறப்புமிகு அரசர்

இவ்வரசு, பன்னிரண்டாம் நூற்றாண்டு இடைப்பகுதி முதல் தனியரசாக விளங்கலாயிற்று. இவ்வரச குடும்பத்தினர் தமிழகத்துப் பாண்டிய, சோழ அரசர் குடிகளின் பெண்களை மணந்து, தங்கள் வாழ்க்கையை வலிவும் பொலிவும் உடையதாக்கிக் கொண்டனர். நான்கைந்து தலைமுறைகளுக்குள் இவர்கள் தமிழர்களாகவே மாறிவிட்டனர். இவர்கள் பரராசசேகரன் என்ற பட்டத்தையும், செகராசசேகரன் என்னும் பட்டத்தையும் அடுத்தடுத்து சூட்டிக் கொண்டனர்.

அவர்களுள், பன்னிரண்டாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய அரசன் பரராச சேகரனாவான். அவ்வரசனுடைய காலத்தில், யாழ்ப்பாணத்தில் பெரும்பஞ்சம் உண்டாயிற்று. அவ்வரசன், தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய நிலக்கிழாரான சடையப்ப வள்ளலின் உதவியை நாடினான். கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் இவரேயாவார்.

---

1 Rasanayagam, Ancient Jaffna, PP. 217-8.

ஆயிரம் மரக்கலங்களில் உணவுதானியங்களை ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு அவர் அனுப்பி, அவ்வரசனுக்கு உதவி புரிந்தார். இச்செய்தி சோழமண்டல சதகத்துள் குறிப்பிடப் பட்டுள்ளது.

சோழமண்டல சதகம் கூறும் இச்செய்தியை வெறும் கற்பனை என ஒதுக்க முயல்வது பொருந்தாது. பெரிதும் சோழநாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகளையும் நிகழ்ச்சிகளையுமே சோழமண்டல சதகம் தெரிவிக்கிறது. சில செய்திகளை, இந்நூல் எடுத்துரைக்கும் முறையில் குறைகள் இருக்கலாம். ஆனால், அவை உணர்த்தும் அடிப்படை கருத்துகளில் உண்மை உறைந்துகிடப்பதை யாரும் எளிதில் மறுக்க இயலாது.

நளவெண்பா எனும் இலக்கியத்தை இயற்றிப் பொன்றாப் புகழ்பெற்றவர் புகழேந்திப் புலவராவார். சிங்கைநகர் ஆரிய சேகரனைப் புகழேந்தி பாடிய பாடல்கள் மூன்று, தமிழ் நாவலர் சரிதையில் உள்ளன. ஒரு பாடல் ஆரிய சேகரனுடைய கொடைச் சிறப்பைப் போற்றுகிறது.

பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வரகண்டி யொன்பதினும்
மேலவர் மார்பினுந் திண்டோளினும் செம்பொன்
மேருவினுஞ்
சேலெழுதும் பெருமான் சிங்கையாரிய சேகரனே [2]

இதைப் போன்றே மற்றொரு பாடலும், ஆரியசேகரன் இறந்த பொழுது பாடிய கையறுநிலைச் செய்யுளும் காணப் படுகின்றன. இவற்றிலிருந்து, தொண்டை நாட்டைச் சேர்ந்த புகழேந்தியார், ஈழத்திற்குச் சென்று, யாழ்ப்பாண

---

[1] இரா. இராகவையங்கார், செந்தமிழ், தொகு. 3; பக். 176-179

[2] தமிழ் நாவலர் சரிதை, பக். 53

அரசனால் பாராட்டப்பட்டார் என்பது தெரியவருகிறது. சந்திரன் சுவர்க்கி எனும் குறுநில மன்னனை 'நளவெண்பா' வின் பலவிடங்களில் அவர் புகழ்ந்து பாடியுள்ளார். அந்தச் சுவர்க்கி கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் வாழ்ந்தவன் என்பது வரலாற்றால் அறியப் படுகிறது.[1]

எனவே, புகழேந்திப்புலவர் பாடிய ஆரிய சேகரன் எனப்படும் யாழ்ப்பாணத்து அரசனும் பதின்மூன்றாம் நூற் றாண்டில் வாழ்ந்தவனாவான்.

இதனால், தமிழ்நாட்டு அரசருக்கும், ஆரியச் சக்கர வர்த்திகளுக்கும் இடையே நட்புறவு நிலவியதோடு அல்லாமல், தமிழகப் புலவர்களும் யாழ்ப்பாண அரசரால் ஆதரிக்கப்பட்டமை தெரியவருகிறது. நாயக்கமன்னர் ஆட்சிக் காலத்திலும் இந்நிலை தொடர்ந்து நீடித்தது.

இந்த ஆரியச்சக்கரவர்த்திகளுள், கனகசூரியனுடைய மகனான பரராசசேகரன், யாழ்ப்பாணத்தில் தமிழினைப் போற்றி வளர்த்த பெருமகனாவான். அவனுடைய தம்பி செகராசசேகரன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போன்ற தோர் அமைப்பினை, தங்கள் தலைநகரில் நிறுவினான். அச் சங்கத்தில் சிறப்புமிகு புலவர்கள் பலர் விளங்கினர். அவர்கள் பள்ளு, பிள்ளைத்தமிழ், புராணம், மாலைபோன்ற பல அரிய சிற்றிலக்கியங்களைத் தமிழில் படைத்துள்ளனர். 'பரராசசேகரம்' எனும் மருத்துவ நூலும் அக்காலத்தில் இயற்றப்பெற்றது. செகராசசேகரமாலை எனும் நூல், சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்கும் போசள (ஹொய்சள) அரசனுக்கும் போர் நடந்த பொழுது ஆரியச் சக்கரவர்த்தி, பாண்டியனுக்கு உதவியாகப் படை அனுப்பிய செய்தியைக் குறிப்பிடுகிறது. போர் நடந்த இடம், கண்ணனூர் கொப்பம் என்பதும், அதில் போசள அரசன் தோற்கடிக்கப்பட்டான் என்பதும் குறிப்பிடப்

[1] கலைச்செல்வி (பதி), தனிப்பாடல் திரட்டு, பக். 151.

பட்டுள்ளன. இதைப் போன்று, சாவக அரசன் சந்திரபானு யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தபொழுது, சடையவர்மன் வீரபாண்டியன், ஆரியச்சக்கரவர்த்திக்கு உதவி புரிந்தான் என்பதும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய செகராசசேகரனே ஒரு புலவனாக விளங்கினான். சோதிடம், மருத்துவம் பற்றிய நூல்களை அவன் இயற்றியதாகத் தெரிகிறது. மற்றும், பல புலவர்களை ஏவி, தமிழகத்திலிருந்து அரிய பல சுவடிகளைச் சேகரித்து வருமாறு செய்து, தங்கள் தமிழ்ச்சங்கத்தில் அவன் ஒரு நூல்நிலையத்தை நிறுவினான் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். அவனுக்குப்பின் வந்த அரசர்களும் தமிழ்ப் புலவர்களாக விளங்கினர்.

ஆரியச்சக்கரவர்த்திகள் சைவ சமயத்தைத் தழுவியவர்களாவர். அவர்களுடைய காசுகளில் ஒரு புறம், படுத்திருக்கும் நந்தியும் மற்றொருபுறம் 'சேது'வைக் குறிக்கும் சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தன.[1] அவர்கள், பல சிவன் கோயில்களைக் கட்டியுள்ளனர். கி. பி. 1414இல், யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த பரராசசேகரனுடைய கல்வெட்டு ஒன்று இராமேசுவரத்தின் கோயிலில் கிடைத்துள்ளது. அவன் மகனுடைய கல்வெட்டுகளும் இராமேசுவரக் கோயிலின் கீழ்த்தளத்தில் காணப்படுகின்றன.

சகம் 1336 (கி பி. 1414) இல், இராமேசுவரம் கோயிலின் பல பகுதிகள் பரராசசேகரனால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருக்கோணமலையில் கல்லை எடுத்துச் செதுக்கிப் படகுகளில் ஏற்றிக்கொண்டு வந்து, இராமேசுவரத்து இராமநாதரின் கோயில்புதுப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

இவற்றால், ஆரியச்சக்கரவர்த்திகள், தங்கள் தாயகத்தில் மட்டும் அல்லாமல், தமிழகத்திலும் திருக்கோயில் திருப்பணிகள் செய்துள்ளனர் என்பது புலனாகிறது.

---

[1] S. S. I., Vol. 4: P P. 56-57

## இயல் 8

# அடிமை விலங்கு

### பொற்காலம்

பராக்கிரமவாகுவின் ஆட்சியினுடைய பிற்பகுதி சிங்களத்தின் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. மூன்று குழுக்களாகப் பிரிந்து பூசலிட்டுக் கொண்டிருந்த பௌத்த சமயத்துறவிகளை, அவ்வரசன் பெரு முயற்சிக்குப் பின்னர், ஒருங்கு சேர்த்தான். அவர்களிடையே ஓர் உடன்பாடு உண்டாகுமாறு அவன் செய்தான். இதனால், புத்தசமயத்தினுள் புகுந்திருந்த தீயசக்திகள் களைந்து எறியப்பட்டன. பொலனறுவாவில் பௌத்தத்துறவிகள் தங்குவதற்காகப் பல மடங்களை அவன் அமைத்தான். அவற்றிற்கு இடையே, அவன் பல தூபிகளையும் கட்டினான். மேலும், இலங்கையின் வடபகுதியில் ஒரு புத்த விகாரத்தைப் பராக்கிரவாகு கட்டியதோடு, அனுராதபுரத்தில் இருந்த கோயில்களையும் அவன் புதுப்பித்தான்.

அவன் பொலனறுவா நகரைப் பேரழகும் பெருஞ்சிறப்பும் வாய்ந்த நகராக மாற்றியமைத்தான்; பல அழகிய அரண்மனைகளைக் கட்டினான். அந்நகரின் பல பகுதிகளில்

எழில்மிகு பூங்காக்கள் பலவற்றை அழகுற அவன் அமைத்தான். மேலும், வேளாண்மைக்கு உதவும் பொருட்டு, நீர்ப்பாசன வசதிக்காக 'ஆகாய கங்கை' எனப்படும் வாய்க்காலை அவன் வெட்டினான்; பராக்கிரமன் ஏரி போன்ற பல புதிய ஏரிகளை அமைத்தும், நாட்டிலிருந்த பல பழைய ஏரிகளைப் புதுப்பித்தும் உழவுத்தொழில் செழிப்புற்று விளங்குமாறு செய்தான். அவன், நாட்டின் ஆட்சிமுறை அமைப்பை மாற்றிச் செம்மைப்படுத்தினான், இவ்வாறு பராக்கிரமனுடைய ஆட்சி, சிங்களத்தினைச் செழிப்புறச் செய்தது. தாடியோடு கூடிய, பெருந்தன்மை வாய்ந்த துறவி ஒருவர், ஓலைச் சுவடியைக் கையில் ஏந்திப் படிப்பதைப் போன்று காட்சி வழங்கும் 3.45 மீட்டர் உயரம் உடைய கற்சிலை ஒன்று, பொலனறுவாவில் காணப்படுகின்றது. அச்சிலை பராக்கிரமவாகுவினுடைய உருவச்சிலை யாகலாம் என்பது ஆராய்ச்சியாளரின் கருத்தாகும்.

## அரசியல் குழப்பம்

பராக்கிரமவாகுவிற்குப் பிறகு, சிங்களத்தில் அரசியல் குழப்பம் உண்டாயிற்று. அதை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நிசங்கமல்லன் என்ற சிற்றரசன், இலங்கையின் அரசனானான். அவன் கலிங்க நாட்டில் பிறந்தவன் என்றும், பராக்கிரமவாகுவின் மகளைத் திருமணம் செய்து கொண்டமையால் இலங்கையில் குடியேறியவன் என்றும் மகாவமிசம் கூறுகிறது. அவன், தன்னுடைய முன்னோர்களின் சாதனைகளையெல்லாம் தன்னுடைய அருஞ்செயல்கள் என்று கூறிக் கொள்ளுவதில் பெரு விருப்புடையவனாவான். இதனை அவனுடைய கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அவன், சில தகோபாக்களைக் கட்டியதாகத் தெரிகிறது. அக்காலத்தில், அவனுக்கும் பாண்டிய நாட்டு ஆட்சியுரிமை காரணமாகச் சோழ மன்னன், மூன்றாம் குலோத்துங்கனுக்கும் போர் நிகழ்ந்தது. அவன் இராமேசுவரத்தில், 'நிசாங்கேச்சுரம்' என்னும் கோயிலைக் கட்டியதாகப் பெருமைப்பட்டான்.

நிசங்கமல்லனுக்குப் பிறகு, அவனுடைய மாற்றுத் தாயின் மகனான சாகசமல்லன் சிங்களத்தின் அரசனானான். அவன் கி. பி. 1200 ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் இருபத்து மூன்றும் நாள் முடிசூட்டிக் கொண்டான். இலங்கையின் வரலாற்றிலேயே முதன்முதலாக, நன்கு வரையறுக்கப்பட்ட ஆண்டு சாகசமல்லன் ஆட்சிக்கு வந்த ஆண்டேயாகும்.

இலங்கையில் அவனுக்குப் பிறகு, போரும், பூசலும் உண்டாயின. நிலையாக ஆளக்கூடிய அரசர்கள் யாரும் தோன்றவில்லை. அரசமரபைச்சார்ந்த பலகிளை யினரிடையே உண்டான பதவிப் போராட்டம், நாட்டின் அமைதியைக் குலைத்தது. இலங்கை மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடித்தனர்.

கி. பி. 1215-இல், மாகன் (Magha) என்ற கலிங்க இளவரசன், கேரளத்து வீரர்களின் உதவியைப் பெற்று, பொலனறுவாவில் தன் ஆட்சியை நிலைநாட்டினான். அவன், புத்த சமயத்துறவிகளைத் துன்புறுத்தியதனால், வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறான். அவனது கொடுங்கோலாட்சி மக்களால் வெறுக்கப்பட்டது.

## பாண்டியர் படையெடுப்பு

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1311) ஆட்சிக்காலத்தில், ஈழநாட்டின் மீது ஒரு படையெடுப்பு நடைபெற்றது. அவனுடைய படைத்தலைவர்களுள் மிகச் சிறந்தவனாகிய ஆரியச் சக்கரவர்த்தியின் தலைமையில், ஒரு பெரும்படையை ஈழநாட்டிற்கு அனுப்பி வைத்தான். அப்படைத்தலைவன் அந்நாட்டில் பல பகுதிகளைப் பேரழிவிற்குள்ளாக்கினான். அவன் பல நகரங்களைக் கொள்ளையிட்டு சுபகிரி என்னும் நகரிலிருந்த பெருங்கோட்டையையும் கைப்பற்றினான். இறுதியில், அந்நாட்டில் கிடைத்த பெரும் பொருளையும், புத்ததேவரது திருப்பல்லையும் கைப்பற்றிக் கொண்டு அவன் வெற்றியுடன் தாயகம் திரும்பினான். பின்

ன்ர், பாண்டியரோடு போர்புரிந்து. அப்பல்லைப் பெறுவதற்கு இயலாத நிலையிலிருந்த இலங்கை மன்னன் பராக்கிரமபாகு என்பான், பாண்டியன் குலசேகரனைப் பணிந்து, நட்புறவு கொண்டு, அத்திருப்பல்லைப் பெற்றுச் சென்றான்.[1]

## இலங்கையின் வீழ்ச்சி

பிற்காலத்தில், இலங்கையை ஆண்ட அரசர்கள் எல்லாம், டாம்பெடெனியத் (Dambc Deniya) திலிருந்து ஆண்டு வந்தனர். ஆயினும், அக்காலத்தில் பொலனறுவா, தன் முழுச் சிறப்பையும் இழந்துவிடவில்லை. மூன்றும் விசயவாகு என்ற அரசன், அப்புதிய தலைநகரிலிருந்து ஆண்ட அரசர்களுள் சிறப்புமிக்கவனுவான். அவன் புத்த சமயத்திற்குப் பேராதரவு தந்தான். அவன் இறந்த பிறகு, ஆட்சியை வேறு சிலர் இரண்டாம் பராக்கிரமபாகு (கி.பி. 1236—1270) அரசு கட்டிலேறினுன். கி. பி. 1245 அளவில் ஜாவாவின் சைலேந்திரப் பேரரசை வன்முறையில் கைப்பற்றிய சந்திர பானு என்ற அரசன், இலங்கையைத் தாக்கினுன். மேலும், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சிங்களத்தின் வடபகுதியைத் தனது அடிமை நாடாக்கினுன். இலங்கையின் தென்பகுதியை ஆளுவதோடு இரண்டாம் பராக்கிரமபாகு மனநிறைவு கொள்ள வேண்டியதாயிற்று. அவன் சமயத்தையும், இலக்கியத்தையும் போற்றி ஆதரித்த புரவலன் என்ற காரணத்தால், சிறப்புமிக்க அரசனுகக் கருதப்படுகிறான். அவன் சமயச்சாத்திரங்கட்குச் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளதோடு, சிங்களமொழியில் செய்யுள்மூலம் சிறந்த தோர் இலக்கியத்தையும் படைத்துள்ளான்.

மகாவம்சம் எனும் இலங்கையின் காலவழிச் செய்திக் கோவையை, கி. பி. ஆரும் நூற்றுண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை—தொடர்ந்து எழுதுமாறு அவன்

1. K. A Nilakanta Sastri, The Pandyan kingdom, P P. 184-85

பணித்தான். அதற்கு சூலவமிசம் என்று பெயரிட்டான். பௌத்த சமயத் துறவிகளைக் கொண்ட மாநாடு ஒன்றை நடத்தி, அவன் சமயத்தைத் தூய்மைப் படுத்தினன். கி. பி. 1268 இல், பராக்கிரமபாகு தன்னுடைய அரசுரிமையைத் துறந்தான்.

இவனுடைய மகன், நான்காம் விசயவாகு (கி.பி. 1270-72) மன்னனானன். அச்சமயத்தில் சந்திரபானு இலங்கையின் மீது இரண்டாவது முறையாகப் படையெடுத்து வந்தான். அவனைத் தோற்றேடுமாறு விரட்டினன். இவன் அனுராதபுரம், பொலனறுவா முதலிய நகரங்களை மீண்டும் சிறப்புடன் விளங்குமாறு புதுப்பித்தான். இவனுடைய தந்தை மீண்டும் முடிசூட்டிக் கொண்டார். கி. பி. 1269 இல் இரண்டாம் பராக்கிரமபாகு இறந்தான். இவனுடைய மகனை விசயவாகு படைத்தலைவனல் கொலை செய்யப் பட்டான்.

அப்படைத்தலைவன் சிறிது காலம் ஆண்டான். விசயவாகுவின் தம்பியான, புவனேகபாகு, படைத்தலைவனைக் கொன்று, நாட்டைக் கைப்பற்றினன். இத்தருணத்தில், சுந்தரபாண்டியன் இலங்கையின் மீது படையெடுத்து வந்தான். அப்பொழுது அவன் திருக்கோண மலையில் பாண்டியனுடைய சின்னமாகிய கயல் மீன்களைப் பொறித்துச் சென்றன். திருக்கோண மலையின் வாயிலின் இருபக்கங்களிலுமுள்ள கற்களில் அக்கயல் மீன்கள், காண்பவர் கருத்தைக் கவரும் நிலையில் இன்றும் காணப்படுகின்றன. போரில் வெற்றிபெற்ற பாண்டியன், சிங்கள அரசன்பால் யானைகளையும், பலவகை விலையுயர்ந்த பொருள்களையும் திறையாகப் பெற்றுத் திரும்பினன். அவனுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில், எகிப்து நாட்டின் சுல்தானேடு அவன் நேச உடன்படிக்கை செய்துகொண்டான்.

கி. பி. 1283 முதல் 1302 வரை இலங்கையின் வரலாறு இருள் செறிந்து காணப்படுகிறது. இச் சமயத்தில் 'மார்கோபாலோ' என்ற வெனிசு நகர யாத்திரிகன்

இலங்கைக்கு வந்தான். கி. பி. 1302 இல், ஆட்சிக்கு வந்த நான்காம் பராக்கிரபாகு பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, புத்தரின் புனிதப்பல்லைத் திரும்பத் தாயகத்திற்குக் கொண்டு வர முயன்றான். போரின் மூலம் இதைச் சாதிக்க முடியாமையால், பாண்டியனோடு நட்புறவு கொண்டு, அவனிடம் அதனை வேண்டிப் பெற்றான். அச் செயலால், அவன் இலங்கை வரலாற்று ஏடுகளில் சிறப்பிடத்தைப் பெற்றான். நான்காம் பராக்கிரமபாகு காலத்தில் புத்த சாதகக் கதைகள், சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அவன் பல விகாரைகளைக் கட்டினான். சூலவமிசத்தை, அவனுடைய ஆட்சிக் காலம் வரையில் நிறைவுடையதாக்கினான். இபின் படுடா (Ibin Batuta) என்னும் அராபியப் பயணி 1342 இல், இலங்கையைக் காண வந்தான்.

நான்காம் புவனேகபாகு (1341—51) என்ற அரசன், தன் தலைநகரைக் கண்டிக்கு அருகிலுள்ள கம்போலா (Gampala) விற்கு மாற்றிக் கொண்டான். அங்கு இரண்டு புத்தவிகாரைகளை அவன் கட்டினான். மூன்றும் விக்கிரம பாகுவின் ஆட்சிக்காலத்தில் (1357—1374) கொழும்புவிற்கு அருகில் 'கோட்டி' என்ற கோட்டைக் கட்டப் பட்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களின் படையெடுப்பை யெதிர்த்து, அவன் வெற்றி பெற்றான்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சிக்கு அருகில் உள்ள ஆலம்பூண்டியில் விசயநகர மன்னன் முதலாம் விருபாக்கனின் கல்வெட்டொன்று கிடைத்திருக்கிறது. அது கி. பி. 1383-இல், பொறிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதில் விசய நகர அரசன் சிங்களத்தை வெற்றிகொண்டதாகவும், அங்குக் கைப்பற்றிய பொருள்களையும், பெற்ற திறைப்பொருளையும் தன்னுடைய தந்தையான இரண்டாம் ஹரிஹரனுக்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதைப் பற்றித் தெளிவாக ஒன்றும் நாம் அறிய முடியவில்லை.

ஆரும் பராக்கிரம பாகு (1412-67) ஜெயவர்த்தன புரம் எனும் கோட்டையைத் தலைநகரமாகக் கொண்டு ஆளத் தொடங்கினான். சிங்கள மக்கள் வரட்சி பொருந்திய வன்னிப் பகுதியிலிருந்து இயற்கை வளமிக்க தென்மேற்கு இலங்கைப் பகுதிக்குச் சென்று குடியேறினர். இதன் விளைவாக சிங்கள அரசின் தலைநகரம் மத்திய மாகாணத்திலுள்ள கம்பளைக்கு மாற்றப்பட்டு, பின்னர் அங்கிருந்து கொழும்புக்கு அருகிலுள்ள கோட்டைக்கு நிலையாக மாற்றப்பட்டது. ஏறக்குறைய இதே காலத்தில், இயற்கை அரண்கள் பல பொருந்திய மலைநாட்டில், கண்டியைத் தலைநகராகக் கொண்டு தனியரசு ஒன்று தோன்றியது முன்னரே, நாம் கண்ட யாழ்ப்பாணத் தமிழரசு வட இலங்கையில் சிறப்புற்று விளங்கியது. இந்த மூன்று அரசுகளுக்கும் இடையே வன்னியக் குறுநில மன்னர் தலையெடுத்தனர். இத்தகைய சூழ்நிலையிலேதான், ஆரும் பராக்கிரமபாகு அரசு கட்டில் ஏறினான்.

அவன் அரசனான பொழுது, இலங்கையின் கோட்டைப் பகுதியே அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. மெல்ல மெல்ல, அவன் மலையப் பகுதியைக் கைப்பற்றினான் பின்னர் வன்னியரை அடக்கி யொடுக்கினான். அதன் பிறகு, அவன் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசன் மீது படையெடுத்துச் சென்றான். ஆரும் பராக்கிரமபாகுவின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டில், சிங்களவருக்கும் பெகு (Pegu) நாட்டினருக்கும் (பர்மா) யானை வாணிகத்தில் தகராறு உண்டாயிற்று. கம்போடியா (காம்போஜம்) விற்கு இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட இளவரசியைப் பெகு நாட்டினர் சிறைப்படுத்தினர். இவ்விரு காரணங்களால், பெருஞ்சீற்றம் கொண்ட பராக்கிரமபாகு கடற்படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு போய், பெகுவின் நகரமான குசுமியாவைத்தாக்கினான். ஐந்து மாதங்கள் சிங்களவர் படை அங்கு முற்றுகையிட்டிருந்தது. பெகுவின் அரசன் கொலை செய்யப்பட்ட பிறகு, இரு நாடுகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தன.

சிங்களப் படைத் தலைவனுக்குப் பரிசாக நாட்டின் ஒரு பகுதியைப் பெகு அளித்தது. அக்கொடைக்காக வெட்டப் பட்ட கல்வெட்டு ஒன்று கேக்கல்லா (Kegella) மாவட்டத் தில் ஒரு பாறையில் இன்னும் காணப்படுகிறது. அவன் பல கோயில்களையும், விகாரைகளையும் கட்டினான். தோட காமுவ ஸ்ரீ இராகுலதேரர் போன்ற சிங்கள மொழிப் புலவர் களைப் போற்றி ஆதரித்தான். இதன் மூலம், அவன் சிங்கள மொழி இலக்கியத்தை வளர்த்தான். " இரண்டாம் பராக் கிரமபாகுவிற்குப் பிறகு, இவ்வரசன் ஆட்சிக் காலத்தில் இலங்கை பல துறைகளிலும் உயர்ந்த நிலையை அடைந்து சிறந்தது; இதற்கு ஒப்புமை கூறத்தக்க நிலையினை அப்புகழ் மிக்க நாடு, பின்னர் அடையவில்லை " என்பது இங்கு நினைவு கூர்தற்குரியதாகும்.

## அடிமை விலங்கு

எட்டாம் பராக்கிரமவாகு (1484-1508) வின் ஆட்சிக் காலத்தில், போர்ச்சுகீசிய இராசப் பிரதிநிதியின் மகள், இலங்கைக்கு வந்தாள். அந்நிலையில், அவர்களிடம் இலங்கை அரசன், ' தன்னைப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றினால், அவர்களுக்கு யானைகளையும் இலவங்கப் பட்டைகளையும் தரு வதாகக் ' கூறினான். பிறகு, போர்ச்சுகீசியரோடு இவ்வர சன் 1505 இல், ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். போர்ச்சுகீசியரின் நாடு பிடிக்கும் பேராசையும், தங்கள் சமயத்தைப் பரப்புவதில் கொண்டிருந்த ஆர்வமும் இலங்கை யின் பெரும்பகுதியைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரத் தூண்டியது.

இந்நிலையில், கண்டி ஒன்றுதான் சுதந்திர நாடாகத் தனித்து நின்றது. கண்டிச் சிங்கள மன்னர் மதுரை நாய்க்க மன்னரோடு திருமணவுறவு கொண்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், கண்டி அரசுரிமை நாயக்க மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்தது. கண்டியிலே தமிழர் ஆதிக்கம் நிலவியது. கடற்கரை யோரங்களில் வாழ்ந்த

சிங்களவர்களுள் பெரும்பான்மையோர், போர்ச்சுகீசியப் பாதிரிமார்களால் கிறித்துவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர்.

கி.பி பதினேழாம் நூற்றாண்டில் இலங்கைக்கு டச்சுக்காரர்கள் வந்து சேர்ந்தனர். இதையடுத்து ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே, கடல்கடந்த நாடுகளில் தங்கள் பேரரசை நிறுவும் போராட்டம் தொடங்கியது. இறுதியில் இந்தியாவோடு இலங்கையும் ஆங்கிலேயரின் (1796இல்) ஆட்சிக்குட்பட்டது. பலவகை இன்னல்களையும், இடையூறுகளையும் அனுபவித்தது. இந்திய விடுதலைப்போரின் விளைவாக இந்தியா விடுதலைபெற்ற 1948 ஆம் ஆண்டிலேயே இலங்கையும் சுதந்திர நாடாக மாறியது. இப்பொழுது ஸ்ரீலங்கா எனும் பெயருடன் தன்னுரிமைத் தனியரசாக இலங்கை சிறப்புற்று விளங்குகிறது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நெடுங்காலமாக இருந்துவரும் தொடர்பு இன்றுவரை நிலைபெறுடையதாகவே இருந்து வருகிறது. இலங்கையில் வாழும் தமிழர்கள், தமிழகத்தைத் தங்கள் மூதாதையரின் தாயகமாகவே கருதிப் போற்றி வருகின்றனர். இலங்கையில் வாழும் சைவ, பௌத்த மதங்களைத் தழுவிய மக்கள், இன்றும் இமயம் முதல் குமரிவரை யாத்திரை செய்து திருக்கோயில்களைக் கண்டு வழிபடும் வழக்கமுடையவர்களாகவே உள்ளனர். மேலும், பன்னெடுங்காலமாக இலங்கையில் சிறப்புமிக்க பொருள்களாகப் போற்றி வணங்கப்படும் பழம்பொருள் சின்னங்களான போதிமரமும், புத்தரின் திருப்பல்லும் இந்தியாவோடு இலங்கை கொண்டுள்ள நெருங்கிய தொடர்பிற்குக் கண்கண்ட சான்றுகளாக விளங்குகின்றன.

இலங்கையில் வாழும் மக்களுள் பெரும் பகுதியினர் பௌத்த சமயத்தவர்களாவர். பௌத்த சமயப் பிரிவுகளுள் ஒன்றாகிய ஈனயானத்தின் (சிறுநெறியின்) நிலைக்களமாக இலங்கை சிறப்புற்று விளங்குகிறது. இங்குள்ள ததோபாக்

களையும் புத்தருடைய திருவுருவங்களையும் போன்ற அழகிய வடிவங்களை உலகில் வேறெங்கும் காண்பதரிது புத்த சமயத்தின் தாயகமாகிய இந்தியாவில், புத்தசமயம் பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பே, தன் செல்வாக்கினை இழந்து, இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போயிற்று. ஆனால், இங்கிருந்து இலங்கைக்குச் சென்ற புத்த சமயம், புதிய மண்ணில் நன்கு வேரூன்றித் தழைத்து வளர்ந்து, பூத்துக் காய்த்துச் சிறந்த கனிகளை உலகிற்கு அளிக்கும் நிலையில் இன்றும் பொன்றாப் புகழ்பெற்று விளங்குகிறது.

# இரண்டாம் பகுதி

# நாகரிக ஒளி

இயல் 9

# தமிழரின் குடியேற்றம்

விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே, திராவிட இனத்தவர், அங்கு வாழ்ந்தனர் என்பதை முன்பு கண்டோம். விசயன், பாண்டிய வேந்தனுடைய மகளைத் திருமணம் செய்து கொண்ட பிறகு, பதினெண்வகைத் தொழில் வினைஞர்கள் குடும்பத்தோடு இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர் என்பதும் நாம் அறிந்த செய்தி. அக்காலம் முதற்கொண்டு தமிழ்மக்கள் பலர், அவ்வப்போது இலங்கையில் குடியேறியுள்ளனர். வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்று விசயனுக்குப் பிறகு பேரளவில் யாரும் குடியேறவில்லை. சில சமயங்களில் கலிங்க நாட்டுப் படைவீரர்கள், வாணிகர்கள் அங்குச் சென்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றுள்ளனர்.

## ஈழத்து மக்கள்

ஆனால், வரலாற்றுக் காலம் நெடுகத் தமிழ்நாட்டு மக்களே இலங்கையில் குடியேற்றங்கள் அமைத்துள்ளனர். சிற்சில சமயங்களில்—சிறப்பாகச் சென்ற சில நூற்றாண்டுகளில கேரளநாட்டு மலையாளிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டதை அறிகிறோம். 'இவற்றைப் போன்று இலங்கை

மக்கள் எப்பொழுதாவது பேரளவில் தமிழகத்தில் குடியேற முயன்றுள்ளனரா?' என அறிய முயலுவோமானால், அம் முயற்சி பெரிதும் ஏமாற்றத்தை அளிப்பதாகவே அமைகிறது. முதலாம் கரிகாலன் இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றபொழுது, பன்னீராயிரம் சிங்களவர்களைச் சிறைப்படுத்தித் தமிழகத்திற்குக் கொண்டுவந்து, காவிரிக்குக் கரையமைத்தான் என்பது உண்மையானால், ஒரே வொரு முறை இலங்கை மக்கள் வனமுறையில் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டனர் எனக் கூறலாம்! இச் செய்தியும் புராணமாகப் பேசப்படுவது, பத்துப் பாட்டுள், இரண்டாம் பட்டாக உள்ள பொருநராற்றுப் படையில், இதைப் பற்றிய குறிப்பு உள்ளதாகக் கூறுவர்.[1] ஆனால், இராசாவலி என்னும் சிங்கள மொழி காலவழிச் செய்திக் கோவையில் (பக். 47) இச்செய்தி விரிவாகப் பேசப்பட்டுள்ளதை நாம் முன்னரே கண்டோம். இதிலிருந்து, கரிகாலன், இலங்கை படையெடுப்பிற்குப் பிறகு, காவிரிக்குக் கரை அமைத்தான் என்பதும், அப்பணியில் இலங்கையிலிருந்து சிறைப்பிடிக்கப்பட்டு வந்தவரை ஈடுபடுத்தினான் என்பதும் புலனாகின்றன.

இப்பழங்கதைச் செய்தி அல்லாமல், வேறு சில சமயங்களிலும் இலங்கை மக்கள், தமிழகத்திற்கு வந்து, குடியேறியதை சரித்திரம் பேசுகிறது. யாழ்ப்பாணத்தில் கலகங்களும் குழப்பங்களும் உண்டான காலங்களில், இலங்கை மக்களுள் ஒரு பகுதியினர் தமிழகத்திற்குச் சென்று குடியேறியுள்ளனர். யாழ்ப்பாண வைபவமாலையும் கயிலாய மாலையும் தமிழகத்திலிருந்து சில தலைவர்கள், வாணிகர்கள் வரவழைக்கப்பட்டு, இலங்கையில் குடியேற்றப்பட்ட நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. தமிழகத்திலிருந்து சிங்கை ஆரியன் அழைக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தின் அரச பதவி ஏற்றதையும்,

---

[1] P. T. Srinivasa Iyengar, History of rhe Tamils P. 361.

பாண்டி மழவன் எனும் வெள்ளாளன் பொன் பற்றியூரி லிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேறியதையும் இங்கு நாம் குறிப்பிடலாம்.

## தமிழகத்து மக்கள்

தமிழகத்திலிருந்து சென்றவர்கள் பெரும்பாலும் வாணி கர்களாகவும், படை வீரர்களாகவும், தொழில் வினைஞர் களாகவும், கடலோடிகளாகவுமே தொடக்க காலத்தில் இருந்தனர். பின்னரே, சமயத் தலைவர்களும், மத குரு மார்களும், துறவிகளும், சமயத் தொண்டர்களும் அங்குச் சென்று தங்கி, சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். முதன் முதல் சிறப்புற்று விளங்கிய எலாரா (ஏலேல சிங்கன்) சோழ நாட்டு வாணிகனுவான். அவன் இலங்கையின் மன்னனுக விளங்கினுன். அவனுடைய ஆட்சியின் கடைப் பகுதியில் (கி. மு. 205-161) துட்டகாமணியை எதிர்த்துப் போரிட்ட பொழுது, உண்டான தோல்வியால், தமிழர் வடப்பக்கத்தில் உள்ள யாழ்ப்பாணத்திற்குச் சென்று, அங்குள்ள தமிழ் மக்களோடு தங்கி, கலந்து வாழ்ந்திருத்தல் கூடும். தமிழகத்தின் ஊர்களுக்கு வழங்கும் பெயர்கள் பல, இலங்கையின் பல பகுதிகளிலுள்ள ஊர்களின் பெயர் களாக இடம் பெற்றிருக்கின்றன. நெல்வேலி, இராமநாத புரம், வல்லிபுரம், நாகர்கோயில் போன்ற பெயர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் முக்கியப் பகுதிகளுக்கு வழங்கும் பெயர்களாகும். இவற்றுள் சில, கடற்கரைப் பட்டி னங்களாகும் இவற்ருல், தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து மக்கள் பலர், அங்குக் குடியேறியுள்ளனர் என்பதை அறி கிருேம். அப்பகுதிகளில் தங்கி வாழ்ந்த காலத்தில், தங்கள் சொந்த ஊர்களின் பெயர்களையே, தங்கள் குடியேற்றங் களுக்கு, அவர்கள் இட்டு வழங்கியுள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

சோழ, பாண்டிய வேந்தர்கள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் சிவன் கோயில்கள் பல யாழ்ப்பாணத்

திலும், பிற பகுதிகளிலும் கட்டப்பட்டன. அப்பொழுது கோயில் கட்டுவதற்குச் சிற்பிகள் போன்ற பல தொழில் வினைஞர்கள் அங்குக் குடியேறினர். கோயில் வழிபாடு தொடங்கிய பிறகு பிராமண பூசாரிகளும், சைவ வேளாளக் குருமார்களும், ஓதுவார்களும், இசைவாணர்களும், நாட்டிய நங்கையரும், இசைக் கருவிகளை இயக்குவோரும், வேறு பிற கோயில் ஊழியம் செய்வோரும், எடுபிடிகளும் போன்ற பல்வகைப் பணிமக்கள், தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் குடியேற்றப்பட்டும் மானியங்கள் வழங்கப்பட்டும் உள்ளனர்.

மாவிட்டபுரத்தில், உக்கிரசிங்கனின் மனைவியான சோழ நாட்டு இளவரசி, தான் கட்டிய கந்தசாமி கோயிலில் பணி செய்ய, தன் தந்தையின் உதவியால் சிதம்பரத்திலிருந்து பிராமண பூசாரி ஒருவரை வரவழைத்ததை நாம் கண்டோம். அந்தப் பிராமணன், யாழ்ப்பாணத்தில் நிலையாகத் தங்கியபொழுது, யாழ்ப்பாணத்துச் சாம்பசிவ ஐயர் என்பவருடைய மகளான வாலாம்பிகையை மணந்து கொண்டமை தெரியவருகிறது. சிங்கள அரசர்களிடம் புரோகிதர்களாகவும், சோதிடர்களாகவும் தமிழ்நாட்டுப் பிராமணரே பணிபுரிந்தனர்.

சில சமயங்களில் மருத்துவக் கலையிலும், மந்திர தந்திரங்களிலும் வல்லவர்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்பட்டனர். இடைக்காலத்தின் பிற்பகுதியில் தமிழ் உடையார்களும், வன்னியரும், முக்குவர் (மூழ்குவார்) எனப்படும் பரதவரும் தமிழ் நாட்டிலிருந்து அங்குக் குடியேறியுள்ளனர்.

பட்டுநூல் நெசவாளரான தமிழ்நாட்டுச் சாலியரும் நெடுங்காலமாக இலங்கையின் நெசவுத்தொழிலை வளமுறச் செய்து வருகின்றனர். காஞ்சிபுரத்து நெசவாளர், குணபூஷண சிங்கை அரையன் காலத்தில் இலங்கையில் குடியேற்றப்பட்டனர்.


இலங்கையின்
பண்டை நகரங்கள்
கதிரை மலை
சிங்கை நகர்
திருவடிநிலை
யாழ்ப்பாணம்
இராமேசுவரம்
மாதோட்டம்
திருக்கோணமலை
மிகுந்தலை
அநுராதபுரம்
சிகிரியா
பொலனறுவை
மட்டக்களப்பு
யாப்ப
கூவா
மாத்தளை
மகியங்
கனை
கண்டி
கம்பளை
கொழும்பு
ரோகணம்
சமந்தகூடம்
கதிர்காமம்
மாத்தறை
இந்தியப் பெருங்கடல்

பாண்டிய நாட்டை முஸ்லீம்கள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தாக்கியும், தகர்த்தும், தங்கள் ஆட்சியைநிலைநாட்டியும் அல்லற்படுத்தியபொழுது, பேரளவிற்குத் தமிழ் மக்கள், இலங்கைக்குச் சென்று குடியேறியுள்ளனர். (விசயநகர, நாயக்க மன்னர்களின் காலத்தில் பாளையப்பட்டுகளின் தொல்லைக்கு அஞ்சிய வேளாளர் பலர், தங்கள் உடைமைகளையெல்லாம் விட்டு, யாழ்ப்பாணத்திற்குச் சென்று வாழ முயன்றனர். இவ்வாறு அமைந்த குடியேற்றங்களைப்பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை', 'கயிலாயமாலை' போன்ற நூல்கள் தெரிவிக்கின்றன.) இந்த வேளாளரோடு, அவர்களுடைய வயல்களில் வேலைசெய்த பள்ளரும் உடன்சென்று அங்குக் குடியேறியதாகக் கூறுவர்.

## பௌத்தத் துறவிகள்

இத்தகைய பொதுமக்கள் அல்லாமல், பௌத்த சமயத் துறவிகளும், அறிஞர்களும் அவ்வப்போது தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று வந்துள்ளனர். மகாசேனன் காலத்தில் மகாயான பௌத்த சமயத்தைப் பரப்பிய சங்கமித்திரதேரர், சோழநாட்டைச் சேர்ந்த தமிழராவார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்ததத்த மகாதேரர் இலங்கைக்குச் சென்று வாழ்ந்தார். அங்குப் புத்த சமயத்தை நிலைநாட்டிய இரண்டாவது பெருந்தலைவராக அவரைச் சிங்கள மக்கள் போற்றுகின்றனர். சிங்கள மொழி விளக்கவுரைகளை, அவர் பாலிமொழியில் திரும்பப் பெயர்த்து எழுதினார். அவர் அனுராதபுரத்து மகாவிகாரையில் தங்கி இருந்தார். சோழநாட்டினரான ஆசாரியர் தருமபாலர், மகாவிகாரையில் தங்கிஇருந்து, திரிபிடகத்திற்குத் தமிழிலும், சிங்களத்திலும் விளக்கவுரைகள் எழுதியுள்ளார். காஞ்சிமாநகரைச் சேர்ந்த ஆனந்த தேரர் என்பவர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில், பர்மாவிற்கு அழைக்கப்பட்டார். அங்கு, அவர் புத்த சமயத் திருப்பணியாற்றி மறைந்தார்.

இரண்டாம் பராக்கிரமபாகுவால், பாண்டிய நாட்டினரான தம்மகீர்த்தி (தருமகீர்த்தி) இலங்கைக்கு அழைக்கப்

பட்டார். அங்கு அவ்வரசனுடைய குருவாக அவர் விளங்கினார். மகாவமிசத்தின் இரண்டாம் பகுதியாகிய சூலவமிசத்தின் ஆசிரியர் தம்மகீர்த்தியேயாவார். தமிழகத்தைச் சேர்ந்த மற்றொரு பௌத்த சமய அறிஞர் அநிருத்ததேரர். அவர் 'அபிதம்மார்த்த சங்கிரகம்' எனும் நூலை இயற்றினார். இன்றுவரை, அந்நூல் இலங்கை, பர்மா நாடுகளின் பௌத்தர்களால் போற்றிப் படிக்கப்பட்டு வருகிறது. கி.பி.பதினான்காம் நூற்றாண்டில், சோழநாட்டிலிருந்து சென்ற மகாதேரர் ஒருவர், நான்காம் பராக்கிரமபாகுவின் குலகுருவாக விளங்கினார். பாலி மொழியிலிருந்து 350 சாதகக் கதைகளை, அவர் சிங்களத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

## தமிழ அதிகாரிகள்

இலங்கை அரசர்களின் அமைச்சர்களாகத் தமிழர் சிலர் சிறப்புற்று விளங்கினர். பதினான்காம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மூன்றாம் விக்கிரமவாகுவின் புகழ்மிக்க அமைச்சர் அழகக் கோனார் என்பவராவார், அவர், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். ஆரியச் சக்கரவர்த்தியைத் தோற்கடித்து, சிங்கள அரசனுக்கு அவர் பெருவெற்றியைத் தேடித்தந்தவராவர். அவருடைய வழித் தோன்றல்கள் சிங்களப் பெண்களை மணந்து, காலப்போக்கில் சிங்களவராகவே மாறிவிட்டனர். இதனால், அவர்கள் தொடர்ந்து சிங்கள அரசர்களிடம் பெரும் பதவிகளில் அமர்ந்து, பணி புரிந்தனர்.

மற்றும், இலங்கை அமைச்சர் சிலர், தமிழ்ப் பெயர்களை உடையவர்களாக இருந்தனர். 'அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து சென்றவரா? யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரா?' என்பது தெரியவில்லை ஆறாம் புவனேகபாகு, போர்ச்சுகல் நாட்டு அரசனுக்கு, ஒரு தூதனை அனுப்பினான். அங்குச் சென்றவன் செல்லப்ப ஆராச்சி (ஆச்சாரி) என்பவனாவான். போர்ச்சுகீசிய பதிவேடுகள் இந்தத் தூதனை, 'பண்டிதர்' என்று 'அர்' விகுதி சேர்த்து மதிப்புடன் வழங்கும் தமிழ் மரபுப்படி சுட்டுகிறது. கோட்(டே)டையை ஆண்ட அரசர்

களின் ஆணைகளை, அதிகாரிகளுக்கு அனுப்பும் 'திருமந்திர ஓலை நாயகம்' பதவியில் இருந்தவன் சன்னன் திருவராகப் பெருமாள் என்பது, அவனுடைய கையொப்பங்களால் தெரிய வருகிறது. இதே பெயருடையவர்கள், இரண்டு நூற்றாண்டுகள் தொடர்ந்து கையொப்பமிட்டுள்ளனர். இதனால், ஒரே தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தொடர்ந்து இருநூற்றாண்டுகள் இப் பதவியை அணி செய்தனர்என்பது புலனாகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய மன்னருக்கும் சிங்கள மன்னருக்கும் இடையே திருமணவுறவு நிலவியதைக் காணுகின்றோம். நரேந்திரசிம்மன் (1707-39), பாண்டிய மன்னரின் மகளை மணக்க விரும்பினான். பாண்டியன் தனக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தால், பாண்டிய அரசகுமாரர் இருவரைத் தன்னுடைய அமைச்சர்களாக அமர்த்துவதாகச் சிம்மன், பாண்டிய அரசனுக்குத் தூது அனுப்பினான். இவ்வேண்டுகோளை ஏற்று, தன் மகளான சுமித்திரையையும், சுவாமிநாதன், ஏமநாதன் எனும் இரு ஆண் மக்களையும் பாண்டிய மன்னன் சிங்களத்திற்கு அனுப்பி வைத்தமை இங்குக் கருதத்தக்கதாகும்.

## முத்துக் குளிப்போர்

இவர்கள் அல்லாமல், கடல் மறவர்களும், கப்பலோட்டிகளும் பேரளவில் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர். துணிச்சல் மிக்க வாணிகர்களாகவும், வீரமிக்க கடற்போர் வீரர்களாகவும் விளங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு, இலங்கையில் நல்ல வரவேற்பு, தொடக்க காலத்தில் இருந்தது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி. பி. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திய பிராமிக் கல்வெட்டு ஒன்றில், அநுராதபுரத்தில் தமிழருடைய மண்டபம் ஒன்று இருந்ததைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்த அவையின் தலைவனாக இருந்தவன் கப்பல்

ஒன்றின் மீகாமன் என்பதும் தெரிய வருகிறது. காலப் போக்கில், உள்நாட்டு மக்களே-மண்ணின் மைந்தரே பயிற்சி கொடுக்கப்பட்டு இப்பணிகளில் பயன்படுத்தப் பட்டனர். எனினும், அண்மைக்காலம் வரையில் மன்னர் குடாவில் முத்துக் குளிக்கும் தொழில் தமிழருக்கே யுரியதாக இருந்துவந்தது. கவாடபுரமும், காயல்பட்டினமும் நெடுங் காலமாகத் தமிழகத்தில் முத்துக் குளித்தலில் உலகப் புகழ் பெற்றவையாகும். இவற்றைப் போன்று, இலங்கைப் பகுதியில், மன்னார் முத்துக்குளித்தலுக்குப் பேர்போன பட்டினமாகும். இத்தொழில் தென்னாட்டுத் தமிழரிடத் தும், யாழ்ப்பாணத் தமிழரிடத்தும் செழித்தோங்கியதாகத் தெரிகிறது.

## படைவீரர்

சிங்கள, யாழ்ப்பாண அரசரின் படைகளில் பெரும் பாலோர் தமிழகத்து வீரர்களாக இருந்தனர். தமிழ் வீரர்களுக்குச் சீவிதமாக நிலங்கள் அரசர்களால் வழங்கப் பட்டதைப் பற்றிய இடைக்காலக் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. 'இலங்கை வாழ் மக்கள் போரியல்பண்பு அற்றவர்களாக இருந்தமையால் தமிழகத்திலிருந்து படை வீரர்கள் கொண்டு வரப்பட்டனர்' என்று மார்க்கோ போலோ குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

சிங்கள அரசர்களான அபயநாகன் (கி. பி. 291-99) முதலாம் தாதோபதீசன் (கி. பி.. 643-50), மானவர்மன் (682-718) போன்றோர் தமிழ்நாட்டு வீரர்களையே பயன் படுத்தி வந்தனர். ஐந்தாம் மகிந்தன் (கி. பி. 981-1029), கன்னட கேரள வீரர்களைத் தன் படைகளில் பேரளவில் சேர்த்துக் கொண்டிருந்தான். ஆரியச்சக்கரவர்த்திகளின் தாக்குதல்களை எதிர்க்க கோட்டையின் படைகளில் அழகக் கோனர் தமிழ்நாட்டு வீரரைச் சேர்த்து, பலப்படுத்திய தாகத் தெரிகிறது. தமிழப்படைத் தலைவரையே தலைமைச் சேனாதிபதிகளாகச் சிங்கள அரசர் அமர்த்தியும் உள்ளனர்.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் புத்தகுத்தன் எனும் தமிழ்ப்படைத்தலைவன் சிங்களத்தின் வரலாற்றில் முதன்மை இடம் பெற்றுள்ளான். அனுராதபுரத்தில் அடுத்தடுத்து இரண்டுபேரை அவன் அரசராக்கினுன். அவர்கள் வெறும் பொம்மைகளாக இருந்தனர் அவர்களை ஆட்டிப் படைக்கும் பேராற்றல் வாய்ந்தவனுக அப்படைத்தலைவன் விளங்கினுன். நான்காம் காசிபன் (கி. பி. 898-914) காலத்தில். உதூர் பாண்டிராதன் எனும் தமிழ அதிகாரி சிறப்புற்றிருந்தான். படை வீரருக்குச் சீவிதமாக அளிக்கப்பட்ட நிலங்களை மேற்பார்வையிடும் அதிகாரியாக அவன் பணி புரிந்திருத்தல் கூடும் முதலாம் பராக்கிரம பாகுவின் (கி. பி. 1153-86) ஆட்சியில், தமிழ்ப் படைத் தலைவன் ஒருவன் அரசனுடைய பேரை நிலைநாட்டவும், புகழைப் பெருக்கவும், அரும்பாடுபட்டான். அவனைச் சிங்களக் காலவழிச் செய்திக் கோவைகள் 'தமிழாதிகாரி ராக்கன்' எனக் குறிப்பிடுகின்றன.

## வேளைக்காரப் படை

சோழப் பேரரசன் முதலாம் இராசராசன் காலத்தில், வேளைக்காரப்படையினர் எனும புதுவகைப் படைப் பிரிவினர் அரசரின் மெய்க்காப்பாளராக அமர்த்தப் பட்டனர். இப்படைப்பகுதி இலங்கையிலும் செல்வாக் குற்றது. குறிப்பிட்ட வேளைகளில் குறிப்பிட்டப் பணியைச் செய்வதற்காக, முதன் முதல் தங்களைத் தாங்களே மனமுவந்து அப்பணியில் ஈடுபடுத்திக்கொண்ட சிறு சிறு குழுவினரே, பிற்காலத்தில் நிலைப்படையாக மாறினர். அப்பொழுது வேளைக்காரப் படையினர் எனப் பெயர் பெற்றனர்.[1]

சோழப் பேரரசின் தோற்றத்தின் பொழுது இவ்வாறு இருந்திருக்கலாம். ஆனல், பிற்காலத்தில் இப்படையினர்

---

1. S. I. I. Vol. 2, Introd. P. 10.

நிலைப்படையின் ஒரு பகுதியாகவே இருந்ததோடு. போர்களில் அவர்கள் ஈடுபட்டு மெய்சிலிர்க்கும் வீரதீரச் செயல்களைச் செய்துள்ளனர். மற்றும் அரசனுடைய மெய்க் காப்பாளராகப் பணிபுரிவதே, அவர்களுடைய தலையாய கடமையாக இருந்து வந்தது. வேளை (நெருக்கடி வேளை) வந்த பொழுது, தங்கள் உயிரைக் கொடுத்தேனும் அரசனைக் காப்பாற்ற அவர்சள் ஆயத்தமாக இருந்ததை அறிய முடிகிறது [2]

சோழப் பேரரசின் ஆதிக்கம் இலங்கையில் முரிந்த பொழுது. வேளைக்காரப் படையினர் பலர், தாயகத்திற்குத் திரும்பிச் செல்லவில்லை! இலங்கையிலேயே தங்கி, சிங்கள அரசர்களிடத்தில் பணிபுரியலாயினர். சில சமயங்களில், சிங்கள அரசர்களுக்கு எதிராக, அவர்கள் கலகமும் செய்தனர். 'தங்களை நம்பவில்லை' எனும் காரணத்தாலும், வேறு சில அரசியல் சூழ்நிலைகளாலும் அக்கலகங்கள் உண்டாயின முதலாம் விசயவாகு, இரண்டாம் கயவாகு, மாண்புமிகு பராக்கிரமவாகு ஆகிய அரசர்களுக்கு அவர்கள் பெருந் தொல்லை கொடுத்தனர்.

பன்னிரண்டாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில், வேளைக்காரப்படையினர், சிங்கள நாட்டினரோடு இரண்டறக் கலக்கலாயினர். புகழ்மிக்க புத்தர் பெருமானின் புனிதப்பல் ஆலயத்தைப், போற்றிக் காக்க அவர்கள் முன் வந்தனர். அப்புனித நிலையத்தைக் காப்பதற்கு எடுத்துக் கொண்ட சூளுரையைத் தெரிவிக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று, நன்னிலையில் கிடைத்து இருக்கிறது. அக்கல்வெட்டு தமிழில் பொறிக்கப்பட்டு இருக்கிறது. இதனல், பொலனறுவா அரசரிடத்துத் தமிழ்மொழி பெற்றிருந்த செல்வாக்கினை அறிய முடிகிறது.

''நாங்கள் துன்பப்பட்டாலும், இறக்க நேர்ந்தாலும், ஊர்களைக் காப்போம்; வேலையாட்களையும், நிலவருவாயை

2 Gibbs : Ibi Batuta, PP. 237-88

யும், இவ்வாலயத்தில் அடைக்கலம் அடைந்தோர்களையும் தவறாமல் காப்போம். நாங்கள் ஒரு குழுவாக உள்ள வரையில், இத்திருக்கோயிலை அவ்வப்போது பழுதுபார்த்து, காத்து வருவோம்... எங்களிடையே இச்சூளுரைப்படி நடக்கத் தவறுகின்றவர் யாராகிலும் தோன்றுவாராஞல், அவர் அரசுக்கும், படைக்கும், புத்தர் பெருமானுக்கும் மாபெரும் தீங்கிழைத்தவராவர்; அவர்கள் நரகத்தையே அடைவார்கள்'' என்பது அக்கல்வெட்டு வாசகத்தின் கருத்தாகும். மகாதேரர் மொக்கலனு எனும் தலைமைப் பிக்குவே, வேளைக்காரப் படையினரிடம் அப்புனிதப்பல் திருககோயிலை ஒப்படைத்தார் என்பது இங்கு நினைவுகூர்தற்குரிய செய்தியாகும். இரண்டாம் விக்கிரமபாகுவின் ஆட்சிக்குப்பிறகு, வேளைக்காரப் படையினரைப் பற்றி ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. சிங்களப் படையோடு இரண்டறக் கலந்து, தங்கள் தனித்தன்மையை அவர்கள் இழந்திருக்க வேண்டும்.

## தோட்டத் தொழிலாளிகள்

சென்ற நூற்றுண்டிலும் இந்த நூற்றுண்டிலும் வயிற்றுப் பிழைப்பிற்காக, இலங்கைக்குச் சென்று குடியேறிய தமிழர்கள் மிகப் பலராவர். இலங்கையின் மத்திய பகுதியில் உள்ள தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் வேலைசெய்வோர் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவராவர். இவர்களுள் இரண்டு இலட்சம் பேர்களுக்கே இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் அடிமைகளைப் போன்று அல்லற்பட்டு, ஆற்ருது, அழுது கண்ணீர் வடிக்கின்றனர். இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி -சிரிமாவோ உடன்பாட்டின்படி, இவர்களுள் பத்து இலட்சம் பேர்கள், தமிழகத்திற்குத் திரும்பிவரவேண்டியவர்களாகஉள்ளனர். ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு தொகையினர் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர். மற்றவர்களுடைய 'கதி' என்ன ஆகும் என்பதும் தெரியவில்லை.

## தமிழர் வாழும் பகுதிகள்

இலங்கையின், வடக்கு மாவட்டத்திலும், கிழக்கு மாவட்டத்திலும் வாழும் தமிழர்கள், பன்னெடுங்காலமாக அங்கு வாழ்ந்து வரும் இலங்கையின் பழம்பெரும் தமிழ்க் குடிகளாவர். இவர்களுடைய தொகை இருபது இலட்சத்துக்கு மேற்பட்டதாகும். இலங்கையில் உள்ள ஒன்பது மாவட்டங்களுள், இந்த இரு மாவட்டங்களையும் ஒன்ருகச் சேர்த்து ஈழத் தமிழகம் என்பர். ''இவ்வீழத் தமிழகம் இலங்கையின் மொத்தப் பரப்பில் மூன்றிலொரு பகுதியாகும். இப்பகுதியில் வாழும் தமிழர்களின் முன்னோர், சோழப் பேரரசு இலங்கைத் தீவைத் தனது ஆட்சிக்குட்படுத்திய பொழுது, சிலாபம் முதல் பூ நகரி வரையில் உள்ள மேற்குக் கரையோரப் பகுதியில் நெருங்கி வாழ்ந்தனர். யாழ்ப்பாணம் தொடக்கம் பாணமை வரையுள்ள கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் 'பொலனறுவைக்கு வடக்கேயுள்ள நிலப்பகுதிகளிலும் வாழ்ந்தனர்.

சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னரும், ஈழத்தில் தமிழரின் வாழ்விடங்களில் மாற்றம் இருக்கவில்லை.

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியில் சிலாபம் தொட்டுப் பாணமை வரையில் உள்ள வடமேற்கு, கிழக்கு கரையோரப் பகுதிகள், தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன.

கிழக்கே பழுகாமல், பாணமை முதலிய இடங்களில் வன்னியர்கள் ஆட்சித் தலைவர்களாக இருந்தனர். இவர்கள் சில காலங்களில் தமிழ் ஈழ அரசர்களின் மேலாட்சியை ஏற்றிருந்தனர். சில காலங்களில் கண்டி அரசனின் மேலாட்சியை ஏற்றிருந்தனர். எனினும் தன்னுட்சி உள்ள தமிழ்ப் பிரதேசங்களாக இவை இருந்தன.

போர்த்துக்கேயர் திருக்கோண மலையில் கோட்டை அமைக்க முயற்சித்தபோது, தமிழ் ஈழ மன்னரான ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி திருக்கோணமலை வரை பரவி யிருந்தது" [1].

இவ்வாறு உரிமையோடு வாழ்ந்து வந்த தமிழர்கள், இன்று தனியரசு ஒன்று தமிழருக்கு இல்லாமையால் சிறு மைப்பட்டுச் சீர்குலைந்துள்ளனர்.

[1] மு. திருச்செல்வம், ஈழத் தமிழர் இறைமை, பக். 53.

## இயல் 10

# வாணிகக் குழு வளர்த்த பண்பாடு

### வாணிகக் குழு

தமிழகத்து வாணிகர்கள் கடல்கடந்த நாடுகளுக்கு, வாணிகக் குழுக்களாகச் சென்று வாணிகம் செய்துள்ளனர். அக் குழுக்களுக்கு நாநா தேச திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் எனும் பெயர்கள் வழங்கின. அவற்றுள் 'திசையாயிரத்து ஐந்நூற்றுவர் எனும் குழு, இலங்கையில் பெருஞ் சிறப்புடன் விளங்கியது. அவர்களுடைய கல்வெட்டுகள் இலங்கையின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. அவற்றுள் முக்கியமானவை மூன்று. அவை முறையே, வாகல்கடம், படவியா, விகாரே கின்னர் எனும் இடங்களில் காணப்படுவனவாகும். யான் ஓயாவிற்கு அருகில் உள்ள வாகல் கடம் குளத்தின் பக்கத்தில் காணப்படும் கல்வெட்டை 'வாகல் கடம் கல்வெட்டு' என்பர். இன்றைய வடக்கு, கிழக்கு, வட-மைய மாநிலங்கள் கலக்கும் இடத்தில் படவியா ஏரி உள்ளது அதன் பக்கத்தில் படவி எனும் சிற்றூர் இருக்கிறது. அங்குள்ள கல்வெட்டு 'படவியாக் கல்வெட்டு' என்பதாகும். மாத்தளையின் வடக்குப்பகுதியில் இந்தப் பள்ளிக்கு அருகில் உள்ள மொரகொல்லாப் பக்கத்தில் விகாரேகின்னர் உள்ளது. அங்குக் கிடைத்துள்ள கல்வெட்டு மூன்றும் இடத்தைப் பெறுகிறது.

## திசையாயிரத்து ஐந்நூற்றுவர்

இக் கல் வெட்டுகள் சுட்டும் வாணிகக் குழுவைப்பற்றித் தமிழ் நாட்டிலும், கருநாடகத்திலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர் எனும் குழுவினை, 'நாநா தேசத்து திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்' எனவும், 'ஐந்நூற்றுவர்' எனவும், நாநா தேசிகள் எனவும், சில கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இவற்றிலிருந்து அக் குழுவினர் 'ஆயிரம் திசைகளுக்கும்போய் வாணிகத் தொழில் செய்த ஐந்நூற்றுவரைக் கொண்டவராதல்' வேண்டும் என்பது புலனுகின்றது. 'திசையாயிரம்' என்பது எல்லாத்திசைகளையும் உணர்ந்தும்' தொடராகும். 'நாநா தேசிகள்' என்பதனுல், பல தேசங்களுக்கும் அவர்கள் சென்று வாணிகம் நடத்தி வந்தவர்கள் என்பது தெரிகிறது. எனவே, அக் குழுவினர் பல நாடுகளுக்குச் சென்று வாணிகம் நடத்தி வந்தவர்கள் என்பதைத் தெளிவாக அறிகிருேம்.

## தமிழகத்தில் தலைமையிடம்

சோழப் பேரரசர் காலத்திற்கு முன்பு அக் குழுவினர் தென்னிந்தியா முழுவதிலும பரவி வாணிகம் செய்து வந்தனர். சோழக் கடற்பேரரசு உருவானவுடன், அக் குழுவினர் கடல் கடந்த நாடுகளுக்கு—இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்யத் தொடங்கினர். சுமத்திராவில் பாரோஸிற்கு அருகிலும், பர்மாவில் பாகனிலும், படாங்கு லாவோசில் பொற்லாக்கு டோலோக்கிலும், மஜபாகிதத்தில் பந்தர் பாகத்திலும் அக் குழுவினருடைய கல் வெட்டுகள் கிடைத்துள்ளன.

---

Proceedings of the First International Conference Seminar of the Tamil Studies, Vol. 1 W. M. K wijetungs, South indian Corporate Commercial Organisations in South and SouthEast Asia, P. 494.

## கல்வெட்டுச் செய்திகள்

இலங்கையில் கிடைத்துள்ள அக் குழுவினரின் மூன்று கல்வெட்டுகளில், வாகல் கடத்தில் கிடைத்துள்ளமை மிகத் தெளிவாகவும், படவியாவில் கண்டுபிடிக்கப்பட்டது இயன்ற மட்டும் நன்கு காக்கப்பட்டும் உள்ளன. வீரர்களின் கட்டளைகள் ஐந்நூறு ஆணைகளாகப் பிறப்பிக்கப்பட்டு அவ்வாணிகக் குழுவிற்கு வழங்கப் பட்டுள்ளதை இலங்கையில் கிடைத்துள்ள இம் மூன்று கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. படவியாவில் உள்ள கல்வெட்டு, அக் குழு உறுப்பினர்கள் யாவரும் வாசுதேவரின் (திருமாலின்) வழி வந்தவர்கள் எனத் தெரிவிக்கிறது. மற்ற இரண்டும் அவர்கள் வாசுதேவர், கந்தழி, மூலபத்தியன் ஆகிய மூவரின் வழி வந்தோர் என்பதைத் தெரிவிக்கின்றன. விகாரே சின்னாவில் உள்ள கல்வெட்டு மிளகு வாணிகத்தைப்பற்றிப் பேசுகிறது; மற்றும் நால்வகைச் சமயங்களுக்கு வழங்கப்பட்ட அறக் கொடைகளைப்பற்றியும் குறிப்பிடுகின்றது. அக் குழுவின் தலைநகரம் ஐயப்பொழிலில் இருந்ததாகத் தெரிவிக்கிறது. அந்த ஐயப்பொழில் சாளுக்கிய அரசில் இருந்த 'ஐய்வோலாக' இருக்கலாம் என்பது கல்வெட்டாய்வாளரின் கருத்தாகும் இதைப்பற்றி உறுதியாக நாம் ஒன்றும் துணிவதற்கு இயலவில்லை.

## வீராம்பட்டினம்

அக்குழுவினரின் குலதெய்வம் பரமேசுவரர் என்பதும் அக்கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. அக்குழுவினர் சிறு பட்டினங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தனர். அப்பட்டினங்களுக்கு வீராம்பட்டினம் என்பது பெயர். வாகல்கடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில், வீராம்பட்டினம் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

## மொழியும் எழுத்து வடிவமும்

இக்கல்வெட்டுகள் பெரிதும் தமிழ்மொழியில், தமிழ் எழுத்துவடிவில் உள்ளன. தொடக்க வாசகம் கிரந்த எழுத்



தில் அமைந்த சமஸ்கிருதச் சொற்களாக உள்ளன. இடை யிடையே வடமொழிச் சொற்களைக் கிரந்த எழுத்துக் களிலேயே எழுதியுள்ளனர்.

### வாணிகரின் பெயர்கள்

மூன்று கல்வெட்டுகளும், சிறப்பாக முதல் கல்வெட்டும் பலமனிதர்களின் பெயர்களைச் சுட்டுகின்றன. அப்பெயர்கள் இரட்டைப் பெயர்களாக உள்ளன. ஒன்றுஇயற்பெயராகவும், மற்றொன்று பட்டப் பெயராகவும் இருத்தல்கூடும். எடுத்துக் காட்டாக 'பெற்றான் வீதிவிடங்கன் ஆன தேசி அடைக்கல நாட்டுச் செட்டி' எனவும், 'கண்டன் அடைம்மான் நூருயிரன்' எனும் 'மதி விரகன் சேனாபதி' எனவும் வருவன வற்றைக் கொண்டு தெளியலாம். இங்குக் குறிப்பிடப்படும் செட்டிகள், பல 'நாடு'களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வருகிறது. இக்கல்வெட்டுகளில் பிள்ளை நாடு, சிவசாமிகா நாடு, சோறுடை நாடு என்பன போன்ற பல நாடுகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றைப்பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை.

### வளஞ்சியரும் வலங்கையரும்

வளஞ்சியர் எனப்படும் மற்றொரு வாணிகக் குழுவைப் பற்றியும் இக்கல்வெட்டுகள் கட்டுகின்றன. அவர்கள் வலங் கைச் சாதிக் குழுவைச் சேர்ந்தவர் என்பதையும் தெரிவிக் கின்றன. 'சித்தன் சாத்தன் வளஞ்சியர் சேனாபதி' எனவும் 'கோணன் மாதவன்' ஆன 'வலங்கைமார்' எனவும் வரும் வாசகங்கள் கருதத்தக்கன. சோழர் இலங்கையைக் கைப் பற்றிய காலம்முதல் வளஞ்சியரும் வலங்கைச் சாதியினரும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர்.

### சைவ சமயத்தவர்

அக்குழுவினரின் கொடி 'வீரக் கொடி' எனப் பேசப்படு கிறது. 'படவியா கல்வெட்டு' 'நகரை அரனுக்கு

---

← வாசல்கடம் கல்வெட்டு

(சிவனுக்கு)த் தேசிகன் ஆக்கி' எனும் வாசகம் காணப்படுகின்றது. இதனுல் இந்த வாணிகர்களின் நகரத்தை (படவியாவில் உள்ள செட்டிகளின் சங்கம்)ச் சிவனுக்குரியதாக ஆக்கினர் என்பதனுல், அக்குழுவினர் அனைவரும் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. அக்கல்வெட்டில் காணப்படும் 'காளி கணம்' 'வடதளி' என்பன சிவன் கோயிலைச் சுட்டுவனவாகலாம்.

## திருவாகம்

விகாரேகின்னர் கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது. பதினெட்டு நாடுகளுக்குரிய செட்டிமார்கள் 'சாத்தி குலத்தி' னர் என்று சிறப்பித்துப் பேசப்படுகின்றனர். வீராம்பட்டினத்திற்கு ஒதுக்கப்பட்ட வருவாய்(வரிப்பொருள்)எவ்வாருே காணுமல் போய்விட்டதும், வரிப்பொருள் செலுத்தாத ஒரு வாணிகன்மீது நடவடிக்கை எடுத்கப்பட்டதும் அந்த நகருக்கு ஆயிரம் காணம் ஒதுக்கப்பட்டதும் இக்கல்வெட்டால் அறியப்படுகின்றன.

## கல்வெட்டுகளின் காலம்

இக்கல்வெட்டுகளில், ஆட்சி ஆண்டு பற்றிய குறிப்பு யாதொன்றும் காணப்படவில்லை. எனவே, அவற்றின் எழுத்து அமைதியைக் கொண்டு, அவை கி.பி. பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தனவாக இருக்கலாம் என்று கல்வெட்டு ஆய்வாளர் துணிந்துள்ளனர்.

இவற்றுல், தமிழக வாணிகர் இலங்கையில் பெற்றிருந்த செல்வாக்கும், அவர்கள் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள பணியும் புலனுகின்றன. வாணிகர்களும் தமிழ்ப் பண்பாட்டினை இலங்கையில் போற்றி வளர்த்துள்ளதை இக் கல்வெட்டுகளால் அறிகிருேம்.

இயல் 11

# சமுதாயமும் சமயமும்

## தமிழ்நாட்டுப் பெயர்கள்

தமிழகத்திலுள்ள ஊர்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் பல, இலங்கையின் பல பகுதிகளிலுள்ள ஊர்களுக்கும் இடப்பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டாக நாகர் கோயில், வல்லிபுரம், கோவளம் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். இப்பெயர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் கடற்கரை யோரங்களிலுள்ள ஊர்களுக்குரிய பெயர்களாக வழங்கி வருகின்றன. இதனால், தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்த மக்கள் பலர், அமைதியாக இலங்கைக்குச் சென்று, அங்குப் பல்வேறிடங்களில் நிலையாகத் தங்கி வாழத் தலைப்பட்டபொழுது, தங்களுடைய மூதாதையரின் ஊர்ப் பெயர்களையே, தங்கள் புதிய குடியேற்றங்களுக்குப் பெயராக இட்டு வழங்கினர் என்பது தெரிய வருகிறது.

## சாதி முறை

தமிழகத்திலிருந்து சென்றவர்கள் பெரும்பாலும் படைவீரர்களாகவும், கடலோடிகளாகவும், புரோகிதர்களாகவும்

சமயத்தலைவர்களாகவும், பல்வேறு தொழில் நுட்பவினைஞர் களாகவும் இருந்திருக்க வேண்டும் என்பது அங்கு வாழ்ந்து வரும் மக்கள் சமுதாயத்தின் பல்வேறு சாதிப் பெயர்களால் அறியப்படுகிறது. இந்திய மண்ணில், தமிழ்ச் சமுதாயத்தை ஊடுருவிப் புல்லரித்த சாதி வேற்றுமையும் தீண்டாமையும், புதிய மண்ணில் பெருஞ்செல்வாக்கினைப் பெறவில்லை. எனினும், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்னும் பாகுபாடு நாளடைவில் தலைதூக்கத் தொடங்கியது. ஏறக்குறைய பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று தமிழ் வண்ணாருக்கும் கருமான்களுக்கும் இடையே உண்டான பூசலைத் தீர்த்து வைத்து, ஓர் உடன்பாட்டை அரசு உண்டாக்கியதைத் தெரிவிக்கிறத. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக் கந்தசாமிக்கோயிலில்நடைபெற்றஅரிசன ஆலயநுழைவும், அதை மேல் சாதிக்காரர்கள் எதிர்த்தமை யும், அதனால் நடைபெற்ற துப்பாக்கிச் சூடும், யாழ்ப் பாணத்தில் சாதிவெறிக்கு இருந்துவரும் ஆதிக்கத்தை அறி விக்கின்றன.

## பழக்க வழக்கங்கள்

இன்றைய தமிழகத்தில் வாழும் தமிழரிடையே பெரு வழக்காக உள்ள பழக்கவழக்கங்கள் பல,யாழ்ப்பாணத்தமிழ் மக்களால் பெரிதும் போற்றிப் பின்பற்றப்பட்டு வருகின்றன. தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கமாகிய சித்திரை முதல்நாள் விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூசை, தீபாவளி, கார்த்திகை விளக்கீடு, திருவாதிரைத் திருநாள், பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் போன்ற பண்டிகைகளும் திருநாள்களும் பேரார்வத்தோடு பெருஞ் சிறப்பாக இலங் கைத் தமிழர்களால் கொண்டாடப்படுகின்றன.

தமிழருடைய உறவு முறைப்பெயர்களான பெரியப்பா, சிற்றப்பா சிங்களவர் இடையிலும் செல்வாக்குப் பெற்றுச் சிங்கள மொழியில் வழங்கிவருகின்றன. இலங்கைத் தமிழரு டைய சட்டதிட்டங்கள், சொத்துரிமை ஆகிய அனைத்தும்

தமிழ்நாட்டு வழக்கோடு நெருக்கமான தொடர்புடையன வாக உள்ளன. அக்காள் மகளை, அத்தை மகளை, மாமன் மகளைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் தமிழர் இடையேமட்டும் அல்லாமல், சிங்களவர் இடையேயும் நடை முறையில் இருந்து வருகிறது.

## பௌத்தமும் சைவமும்

இலங்கையில் தனிப் பெருஞ் சிறப்புடன் விளங்குவது தேரவாத (ஈனயான) பௌத்த சமயமாகும். புத்த சமயத்திற்கு அடுத்த நிலையில் இலங்கை மக்களால் பின்பற்றப் படுவது சைவ சமயமாகும். சைவ சமயம், தமிழ் மன்னர் களின் ஆட்சியின் போது இலங்கையிலும் தழைத்தோங்கலா யிற்று. இலங்கையின் வடபகுதியில் வாழும் தமிழ் மக்களுள் பெரும்பான்மையோர், சைவ சமயத்தைத் தழுவியவராவர். பௌத்தமும் சைவமும் நெடுங்காலமாக இலங்கை மக்களால் பின்பற்றப்படுகின்றமையால், இவ்விருவகைச் சமயத்தின் வழிபாட்டிலும் மக்கள் வேற்றுமை உணர்வின்றிக் கலந்து கொள்ளுவது குறிப்பிடத் தக்கது.

சைவ சமயத்திற்குரிய தெய்வத் திருமேனிகள் பௌத்தா கோயில்களிலும் காணப்படுகின்றன. 'திருமால் புத்தரின் சிறந்த பக்தரென்றும், அவர் சிறந்த பௌத்தர்களோடு நட் புறவு கொள்ள விரும்பியே பௌத்தர் கோயில்களில் நின்று கொண்டிருக்கிறார்' என்றும் சிங்கள மக்கள் கருதுகின்றனர் விநாயகர், கதிர்காம வேலர் முதலிய இந்து சமயத்திற்குரிய தெய்வங்களைப் பௌத்தர்கள் வணங்குவது இங்கு நினைவு கூரத் தக்கதாகும். கதிர்காம வேலரைத் தொன்று தொட்டு பௌத்தர்கள் வழிபட்டு வருகின்றனர். அக்கோயில் இன்றும் பௌத்தர்களின் கண்காணிப்பில் இருந்து வருவது இதற்குச் சிறந்ததொரு சான்றாகும்.

பண்டைத் தமிழ் மக்கள், முருகனைக் குறிஞ்சி நிலத்துக்கு உரிய தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். இம்முறையில் இலங்கையிலுள்ள கதிரை மலையிலும் முருக வழிபாடு சிறப்

புற்று விளங்குவது இங்குக் குறிப்பிடத்தக்கது. துட்டகாமணி (கி. பி 161—137) என்ற சிங்கள அரசன் காலத்துக்கு முன்பிருந்தே, கதிர்காமக் கோயிலுக்கு மக்கள் பெருந்திரளாகச் சென்று வழிபட்டு வருகின்றனர் என்பது அம் மலையின் வரலாற்றால் தெரிய வருகிறது. இதனால், இலங்கையில் முருகனின் வழிபாடு தொன்று தொட்டுச் சிறப்புடன் விளங்கி வருவது புலனாகின்றது. முருகனின் மனைவியருள் ஒருத்தியாகிய வள்ளி, கதிர்காம மலைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களான வெட்டர் (வேடர்)களுடைய குடியிலே தோன்றியவள் எனும் நம்பிக்கை இலக்கியங்களில் மட்டும் அல்லாமல், மக்களிடையேயும் நின்று நிலவுகிறது.

## சமயப் பொறை

இந்து சமயத்தின் பழைய தெய்வங்களுள் ஒன்றான வருணனை, இன்றும் சிங்களவர் வழிபடுகின்றனர். புத்த சமயத்தவர் இடையே வருணன் வழிபாடு எப்பொழுது, எவ்வாறு நுழைந்தது என்பதை அறிய இயவில்லை. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், தமிழரிடம் இருந்தே வருண வழிபாட்டைச் சிங்களவர்கள் கற்றிருக்கலாம் என்பர். வருண வழிபாடு சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் அருகிப் போயிற்று. எனவே, சங்ககாலத்திலேயே இவ் வழிபாட்டு நெறி இலங்கைக்குச் சென்று பரவியிருத்தல் கூடும்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வெவ்வேறு சமயங்களைப் பின் பற்றியவர்களாக வாழ்ந்த போதிலும், அவர்கள் இடையே, 'எம்மதத்தையும் சம்மதமாக மதித்துப் போற்றும் பண்பு' வளர்ச்சியுற்றிருந்தது. தமிழர்கள் பலர் பௌத்த விகாரங்களையும், சைத்தியங்களையும், தாது கோபங்களையும் கட்டியுள்ளனர். ஏலாரா எனப்படும் ஏலேல சிங்கன் காலம் முதற் கொண்டு இப்பண்பு வீறுடன் விளங்கி வருகிறது. மகா கந்தன் எனும் தமிழ் அதிகாரி ஒருவன் புத்த சைத்தியம் ஒன்றைக் கட்டியுள்ளான். 'மதம்பியா' எனும் சமய மாளிகை ஒன்றைப் பொட்ட குத்தன் எனும் தமிழன் அமைத்துள்ளான்.

தமிளா தேவி (தமிழ்த்தேவி) எனும் அரசி, தன்னுடைய வருவாயின் ஒரு பகுதியை 'ஈசுவர முனியா' எனும் பௌத்த ஆலயத்திற்குத் தொடர்ந்து அளித்துள்ளாள். திருக் கோணமலைப் பகுதியில் காணப்படும் முதலாம் இராசேந்திர சோழனுடைய கல்வெட்டு ஒன்று, புத்த சமயத் திருக்கோயிலுக்குத் தமிழர்கள் அளித்த அறக் கொடையாகக் குறிப்பிடுகிறது. 'இராசராசப் பெரும் பள்ளி' என்று அக் கோயிலுக்குப் புதிய பெயர் இடப் பெற்றதாகத் தெரிகிறது. வேளைக்காரப் படையினர், புத்தருடைய 'புனிதப் பல்' வைக்கப்பட்ட ஆலயத்தைப் போற்றிக் காத்த செய்தியை நாம் முன்னரே கண்டோம்.

தேவாரம் பெற்ற திருக் கோயில்கள் முதலாம் இராசராசன் காலத்தில் திருக்கேதீச்சுரம் கோயில் சிறந்த முறையில் கட்டப்பட்டது. திருக்கோணேசர் ஆலயம் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. இராசராசன் திருக் கேதீச்சுரத்தை அழகுறக் கட்டுவதற்கு முன்பே, அக்கோயிலும் திருக் கோணேசர் கோயிலும் வட இலங்கையில்வழிபடும் திருக் கோயில்களாக இருந்தன. தேவாரம் பாடிய மூவர் முதலிகள், இத் திருக்கோயில்களில் கோயில்கொண்டுள்ள இறைவனைப் போற்றிப் பாடிய தேவாரப் பதிகங்கள் கிடைத்துள்ளமையால், இக் கோயில்கள் கி பி ஏழாம் நூற்றுண்டிற்கு முன்பே, இலங்கையில் சிறப்புற்றிருந்தமை தெரிய வருகிறது. எனவே, கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்கு முன்பே, இலங்கை மக்களுள் ஒரு சாரார் சைவமதத்தைப் போற்றி வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.



# கலைச் செல்வம்

தமிழகத்தின் கலை, அலைகடல்களுக்கு அப்பால் நெடுந் தொலைவிலுள்ள பர்மா, தாய்லாந்து, ஜாவா, சுமத்திரா, இலங்கை போன்ற நாடுகளில் சென்று பரவிய வரலாறு தமிழக வரலாற்றின் ஒரு முக்கியப் பகுதியாகும். இலங்கையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தென்னாட்டுக் கலை பரவத் தொடங்கியது. மாண்புமிக்க அசோகரின் தூதர்களாக இலங்கைக்குச் சென்ற மகேந்திரன், சங்கமித்திரை ஆகிய இருவரும், இந்தியாவின் மாண்பு மிக்க கலைப் பண்பை இலங்கைக்குக் கொண்டுசென்று புகுத்தினர். அக்காலம் முதல் இலங்கை மன்னர்கள் தங்கள் தலைநகரங்களிலும், பிற இடங்களிலும் இந்தியக் கலையைப் பின்பற்றி, புத்தரின் சிலைகளையும் தூபிகளைப் போன்ற தகோபாக்களையும் விகாரைகளையும் கட்டலாயினர். அவற்றுள் பெரும்பாலானவை இப்பொழுதும் சிறந்த நிலையில் உள்ளன.

## இருபேர் அருவிகள்

தமிழ்நாடும், இலங்கையும் கலைச்செல்வங்கள் நிறைந்துள்ள பக்கத்து நாடுகள். இவ்விருநாட்டுக் கலைகளும் ஒரே ஊற்றிலிருந்து பாய்ந்தோடும் இருபேர் அருவிகளாகும். தமிழகத்தில் எவ்வாறு சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்களும் அவற்றோடு தொடர்புடைய

கலைகளும் சிறப்புற்று விளங்குகின்றனவோ, அவ்வாறே இலங்கையிலும் பௌத்தமும் சைவமும், அவற்றோடு தொடர்புடைய கலைகளும் சிறப்புற்று விளங்குகின்றன.

இன்று இலங்கையில் காணப்படும் கலைப் பண்புகள் அனைத்தும் பௌத்த சமயத்தையும், சைவ சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டு, வளர்ந்திருப்பதைப் பழம் பொருள் சின்னங்கள் நினைவு படுத்துகின்றன. இவ்விரு சமயங்களுக்கும் உரிய கலைப் பண்புகள் இந்தியாவிலிருந்தே பிற நாடுகளுக்குச் சென்று பரவின என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் சமுதாய அமைப்பு, சமய நெறி நாகரிகம் முதலிய துறைகளில் மற்றெல்லா நாடுகளைப் பார்க்கிலும் மிக நெருங்கிய தொடர்பு தொன்று தொட்டு இருந்து வருவதால், இலங்கையின் கலைகளில், தமிழ்க் கலைப்பண்புகள் தெளிவாகப் புலனாகின்றன. மேலும், இருநாடுகட்கு இடையே உண்டான சமயத் தொடர்பின் பயனாகவும் சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய கலைத் துறைகளில் மிக நெருக்கமான ஒற்றுமைப் பண்புகள் காணப்படுகின்றன.

## சிற்பக்கலை

தமிழகத்தில், சிற்பக்கலை பண்டைக்காலம் முதல் சமயச் சார்புடையதாகவே காணப்படுகிறது. அவ்வாறே, இலங்கையிலும் சிற்பக்கலை சமயத் தொடர்பினால் தழைத்து வளர்ந்தது. இவ்விரு நாடுகளும் ஒரே வகையான கலை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு கலைகளைப் போற்றி வளர்த்தமைக்கு, இன்று பல கலைச் செல்வங்கள் சான்று பகருகின்றன. இலங்கையிலுள்ள பௌத்த சமய நிலையங்களும், அவற்றில் காணப்படும் சிற்ப வடிவங்களும் இந்தியச் சிற்ப முறைகளைத் தழுவியனவே யாகும்.

புத்தர் பெருமானின் சிலைகளே பெரும்பாலும் இலங்கையில் கிடைத்துள்ளன. அழகுமிக்க பெரும் தூபிகள் அனுராத

புரத்திலும், பொலனறுவாவிலும் மிகப் பலவாகக் காணப் படுகின்றன. கேலிக்குரிய குட்டையான மனித உருவங்களை யும், சிங்கம், யானை, யாளி முதலியவற்றின் வடிவங்களையும் வாயிற் படிக்கட்டுகளில் அமைப்பதில் இலங்கைச் சிற்பிகள் கைதேர்ந்தவர்களாவர். கோயில்களின் வாயில்களில் நிலா மணிக் கற்களால் செய்யப்பட்ட படிக்கட்டுகளைச் சிறந்த சிற்பங்களுடன் அமைக்கும் வழக்கம் இலங்கையின் சிற்பக் கலையில் காணப்படும் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.

இலங்கையில் காணப்படும் சிற்பங்களை மௌரியர், ஆந்திரர், குப்தர், பல்லவர், சோழர், பாண்டியர், விசய நகர மன்னர்கள் ஆகியோரின் ஆட்சிக் காலத்திற்குரிய சிற்பங்களென்று ஒருவாறு எளிதில் பாகுபடுத்தி விடலாம். மௌரியர், ஆந்திரர், குப்தர், பல்லவர் காலத்திய சிற்ப முறைகளைப் பண்டைக் காலத்தன எனவும், சோழர், பாண் டியர் காலச் சிற்ப முறைகளை இடைக்காலத்தன எனவும், விசய நகரச் சிற்ப முறைகளைப் பிற்காலத்தன எனவும் நாம் கூறலாம். இலங்கையின்வரலாற்றில் இப்பாகுபாட்டை முறையே அனுராதபுரக்காலம், பொலனறுவா காலம், கண்டிநகர் காலம் என்னும் பெயர்களால் அறிஞர்கள் சுட்டு கின்றனர்.

## அமராவதிக் கலைமரபு

அசோகன் காலத்தில் இலங்கையை ஆண்ட தேவனும் பி(ரி)ய திசன், மிகுந்தலையில் ஒரு புத்த விகாரத்தையும், அனுராதபுரத்தில் தூபராம தாதுகோபுரத்தையும் கட்டிய தாகச் சரித்திரம் பேசுகிறது. இன்று காணப்படும் தூபராம கோபுரம் அழிந்துபோன பழைய கோபுரத்தைப் புதுப்பித் துக் கட்டியதாகும். இவ்வரசன் காலத்தில் ஈசுவர முனிய விகாரை, வேசகிரி விகாரை எனப்படும் குகைக்கோயில்கள் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவனுக்குப் பிறகு சிறப் புற்று விளங்கிய துட்டகாமணி இந்தியாவிலுள்ள சாஞ்சி தூபிகளையும் கோபுரங்களையும் பின்பற்றி, ருவான் வெலி

சாயா தகோபாவை கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கட்டினான். இதைச் சுற்றிலும் ஒரு பெரிய மடாலயம் (சங்கராமம்) அமைக்கப்பட்டது. இத்தகோபாவினுள், ஆந்திர நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்தர் பெருமானின் எலும்புச் சின்னங்களை அவ்வரசன் அடக்கம் செய்தான் என்று கூறுவர்.[1] இத்தகோபாவின் அமைப்பும், வேலைப்பாடும், சிற்பங்களின் பாணியும் அமராவதி தூபியை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, இந்தியாவில் ஆந்திரப் பேரரசு தலைதூக்கியது. அக்காலத்தில் புத்த சமயம் போற்றப்பட்டது. இலங்கைக்கும் ஆந்திர நாட்டிற்கும் நேரடியான தொடர்பு உண்டாயிற்று. அமராவதிச் சிற்பங்கள் பௌத்தத் துறவிகளின் உள்ளத்தைக் கவர்ந்தன. அமராவதிச் சிற்ப முறையைப் பின்பற்றி, இலங்கையில் சிற்பக்கலை வளர்ச்சியுறத் தொடங்கியது.

கொழும்பு நகரின் அரும்பொருள் காட்சியகத்தில், இன்று காணப்படும் சிராவதியின் வியத்தகு செயல்களையும், மாயாதேவியின் கனவையும் விளக்கும் சிற்பங்களே இலங்கையில் காணப்படும் மிகப் பழைய சிற்ப வடிவங்களாகும். அவை ஆந்திரச் சிற்ப முறையைப் பின் பற்றியவையாகும். சேதவனராம தகோபாவிலும் இத்தகைய சிற்பங்கள் உள்ளன. கந்தக சைத்தியத்தில் உள்ள சிற்பங்களில், அமராவதிச் சிற்பங்களின் சாயல் படிந்துள்ளதாகக் கலைநூல் வல்லார் கருதுகின்றனர். ரூவான் வெலி சாயா தகோபாவிற்கு அருகில், நிற்கும் நிலையில் மூன்று சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றின் அமைப்பு முறையும் அமராவதிச் சிற்பங்களின் பண்புகளை நினைவூட்டுகின்றன.[2]

---

[1] Subramanian K. R. Buddhist Remains in Andhra, P. 141.

[2] J. H. Vogel, Buddhist Art, P. 84.

## குப்தரின் கலைப்பாணி

கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்குப் பிறகு, வட இந்தியாவில் குப்தப் பேரரசு மாண்புற்று விளங்கியது. குப்தர்களின் ஆட்சிக்காலம் 'இந்தியாவின் பொற்காலம்' எனப் போற்றப்படுகிறது. குப்த அரச மரபினர், இந்து சமயத்தையும், புத்த சமயத்தையும் ஒருங்கே போற்றி ஆதரித்தனர். கலைநூல் பேரறிஞர் டாக்டர் ஆனந்த குமாரசாமி அவர்கள், இலங்கை அரும்பொருள் காட்சியகத்தில் உள்ள, தொலுவிலா புத்தர் சிலை', குப்தர் சிற்பமுறையில் அமைந்திருப்பதாகக் கருதுகிருர். மேலும், அங்குள்ள போதிசத்துவர், மைத்திரேயர் சிலைகள் குப்தர் காலத்திய கலைப்பண்புடையனவாகும். ஈசுர முனிய விகாரையில் காணப்படும் 'காதலர்' இருவரின் சிற்பமும், அனுராதபுரத்தில் அரசிக்குரியதாகக் கருதப்படும் மாளிகையின் வாசலில் நிலாமணிக் கல்லினுல் வட்டவடிவமாக அமைக்கப்பட்டுள்ள கற்படியும் குப்தரின் சிற்ப முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டவையாகும்.

தமிழகத்தில் பல்லவர்கள் எழுச்சிபெறத் தொடங்கிய பொழுது, இந்தியாவில் புத்தசமயம் மறையத் தொடங்கியது. பன்னெடுங்காலமாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே இருந்துவந்த தொடர்பு, சைவவைணவ சமயங்களின் மலர்ச்சியால் குன்றத் தொடங்கியது எனக்கூறினுல், அது தவருகாது. அரசியலில் மட்டும் இவ்விரு நாடுகளுக்கு இடையே நிலவியத்தொடர்பு தொடர்ந்து இருந்து வந்ததை முன்புநாம் கண்டோம். அதன் பயனுகச் சைவ சமயம் இலங்கையில் பரவத் தொடங்கியது.

## மாமல்லபுரச் சிற்பக் கலைப்பாணி

பல்லவப் பேரரசன் நரசிம்மவர்மன் காலத்தில் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் உண்டான நேரடியான தொடர்பினுல், பல்லவர் காலத்துச் சிற்பமுறை இலங்கைக்குச் சென்று பரவியது. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் இலங்கைக் கலைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன மாமல்ல-

புரத்து யானைகளைப் போன்று, ஈசுரமுனிய விகாரையிலுள்ள பாறையின் பிளவுக்கு இருபக்கத்திலும் யானைகள் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாறையின் மேற்பகுதியில் காணப்படும் மனித வடிவமும் குதிரைத் தலையும் பல்லவர் காலத்திய சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன.

இவ்விகாரையின் அருகில் ஒரு சிறிய குளம் இருக்கிறது. அக்குளத்தின் அருகிலுள்ள கற்பாறையில் யானைகளும் மீன்களும் நிறைந்த தாமரைத் தடாகங்கள் பல்லவர் பாணியில் செதுக்கப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் நாளந்தா என்னும் இடத்திலுள்ள 'கெடிகை' என்னும் கோயில் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலைப் போன்ற அமைப்பும் அழகும் உடையதாகும்.

## சோழர் கட்டிய கோயில்

கி. பி. பத்தாம் நூற்றாண்டு முதல், வடஇந்தியாவின் மீது இசுலாமியர்கள் படையெடுத்தவண்ணம் இருந்தனர். அப்படையெடுப்பை எதிர்த்து, இந்துசமயச் சார்புடைய அரசு ஒன்றுகூட நிலைத்து நிற்கமுடியாது அழிந்தொழிந்தன. ஆனால், அதே சமயத்தில் தென் இந்தியாவில் சோழப் பேரரசு பெரும் வல்லரசாக விளங்கியது. அப்பேரரசின் சிறப்பிற்குக் காரணமாக விளங்கிய முதலாம் இராசராசன், இலங்கையை வென்று தன் ஆட்சிக்குட்படுத்தியதை நாம் முன்பு கண்டோம். இக்காலத்தில் சைவ சமயமும், சோழர் கலைப்பாணியும் இலங்கையில் பரவத் தொடங்கின. இராசராசன் பொலனறுவாவில், 'கற்றளி' ஒன்றைச் சிவபெருமானுக்கு எடுப்பித்தான். அதற்கு 'வானவன் மாதேவி ஈச்சுரம்' என்று பெயரிட்டான். அக்கோயில் அவன்மகனை இராசேந்திரன் காலத்தில் முற்றுப் பெற்றது. அக்கோயிலில் சோழர்களுடைய கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன.

---

* Quaritch-wales, The Making of Greater India, P 32

## சோழரின் கலைப்பாணி

இதற்கு முன்பு இந்தியாவிலிருந்து கற்றுக் கொள்ளப் பட்ட கலைப்பாணியெல்லாம், சிங்களத்தின் தொல் பழங் கலைமுறையோடு ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, அதற்கு ஒரு புதிய வடிவமும், வண்ணமும் அளிக்கப்பட்டதைக் கண்டோம். அவை புத்த சமயச் சார்பான கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. ஆனால், சோழர் படையெடுப்பின் பொழுது, பௌத்த சமயத்திற்கு மாறான சைவசமயம், இலங்கை மக் கள்மீது திணிக்கப்பட்டதோடு, புதியதொரு சிற்பக்கலைப் பாணியும் சிங்களத்தில் புகுத்தப்பட்டது. சோழருடைய கலைப்பாணி, கட்டமைப்பிலும், கருத்தை வெளிப்படுத்து வதிலும் பௌத்த சிற்பக்கலை முறைக்கு முற்றிலும் நேர் மாறானது. பொலனறுவாவில் பதினோராம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ள சிவன் கோயில்கள், சோழர் கலைப்பாணி யின் முதல் காலக்கட்டத்தைச் சேர்ந்த சீனிவாச நல்லூர் 'கோரங்கநாதர்' (குரங்கநாதர்) கோயிலை ஒத்துக் காணப் படுகின்றன. திராவிடக் கட்டடக் கலை முறையின்படி விமானமும், விமானத்தின் சிகரமும் செம்மையாகவும் நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டுள்ளன [1]

தேவாரம் பாடிய மூவரால் போற்றப்பட்ட திருக்கேதீச் சுரம், மாதோட்டத்தில் இருந்தது. அதை இராசராசன் நல்லமுறையில் சிறந்த கோயிலாகக் கட்டி 'இராசராசேச் சுரம்' என்று போற்றினான். சோழர் ஆட்சியை அவ்வப் போது உதறித் தள்ளிய இலங்கை மக்கள், கலைத்துறையில் சோழர்களின் அடிமைகளாயினர் என்பது அக்காலத்திய கட்டடங்களினாலும், சிற்பங்களினாலும் தெரியவருகிறது.

ஆற்றல் மிக்கதும், அழகு வாய்ந்ததுமான சோழர் கலைப்பாணி, இலங்கையிலிருந்து சோழர் ஆதிக்கம் அழிந்த பிறகும், பெருஞ் செல்வாக்குடையதாகவே விளங்கியது.

---

1 Percy Brown : Indian Architecture, Vol. I; P. 170.

இலங்கையில் பதினோராம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய முதலாம் பராக்கிரமபாகுவும், அவனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அரசர்களும் பொலனறுவாவில் சிறந்த பௌத்த கோயில்களையும் தகோபாக்களையும் அரண்மனைகளையும் அமைத்து, அந்நகரை அழகுபடுத்தினர். அக்கோயில்களும் சிற்பவடிவங்களும் சோழர் காலத்திய சிற்பக் கலைமுறையைப் பின்பற்றியே, அமைக்கப்பட்டுள்ளன. கோயில்களின் அடித்தளங்கள் கருங்கற்களாலும், மேல் தளங்கள் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் அடித்தளத்தைப் பல அழகிய விலங்குகளின் சிற்பங்கள் அழகுபடுத்துகின்றன.

## புத்தரின் திருக்கோயில்களில் திராவிடக் கலைப்பாணி

''இலங்கையில் மகா தூபம்'' என்னும், 'மகாசய' வென்றும் வழங்கப்படும் மிகப் பெரிய தகோபாவை, பராக்கிரமபாகு அரைகுறையாகக் கட்டிச் சென்றான். இன்றுவரை சிதைவுறாமல் காணப்படும் கிரிவிகாரத் தகோபாவும், பராக்கிரமபாகுவினால் கட்டப்பட்டதேயாகும். அவன் கட்டிய கோயில்களுள், 'இலங்கைத் திலகக் கோயில்' மிகப் பெரிய புத்த சமயக் கோயிலாகும். அக்கோயிலின் மூலத்தானத்தில் 15 மீட்டர் உயரமுள்ள புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டிருக்கிறது. அச் சிலை செங்கற்களால் செய்யப் பட்டதென்று சொல்லுவர். வடக்குக் கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சேதவனராம விகாரம், வட்டதாகே உத்தரராம என்னும் கல் விகாரம், பொத்தகல் விகாரம் போன்ற பலவற்றைப் பராக்கிரமபாகு கட்டினான்.

தூபராம கோயில் திராவிடச் சிற்பமுறையில் கட்டப் பட்டிருக்கிறது. பொலனறுவாவில் உள்ள புத்தர் கோயில்களின் புறச்சுவர்களிலுள்ள சிற்பங்கள் தென்னிந்தியக் கோயில் சுவர்களிலுள்ள சிற்பங்களைப் போன்று காணப்படுகின்றன. ''தூபராம கோயில், சோழர்கள் அமைத்த சிவன்

கோவில்களைப் பின்பற்றித் திராவிடச் சிற்ப முறையில் அமைக்கப்பட்டிருப்பினும், அமைப்பு முறையில் கருங்கற்களால் கட்டப்படாத வேறுபாடுடையது. இவ் வேறுபாட்டைத் தவிர, மற்றெல்லா வகையிலும் தூபராம கோயில் சோழர் சிற்பக் கலைப்பாணியைப் பின்பற்றியதாகத் தோன்றுகிறது. எனினும், சோழர்கள் கட்டிய கோயில்களின் சிறப்பும் நேர்த்தியும் இதனிடத்துப்பொருந்தவில்லை''[1] என்ற பெர்சி பிரவுன் என்னும் கலைநூற் புலவர் மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

முதலாம் குலோத்துங்க சோழனின் மாண்புமிக்க சேனுதிபதியும், கலிங்கம் வென்ற காவலனுமான கருணுகரத் தொண்டைமான் யாழ்ப்பாணத்திற்குச் சென்று இருந்தான். அங்குப் பல்வேறு அலுவல்களுக்கு இடையே, தான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில், விநாயகர் கோயில் ஒன்றை அவன் கட்டினுன் என்றும், அது இந்நாள் வரையில் கருணுகரப் பிள்ளையார் கோயில் என்று வழங்கப்பட்டு வருகிறது என்றும் யாழ்ப்பாணத்து மக்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் கலைச்செல்வங்களுள் பெரும் சிறப்புடையதாகக் கருதப்படுவது கல் விகாரையிலுள்ள புத்தரின் பரிநிர்வாண நிலையைச் சித்திரிக்கும் சிலையாகும். ''பரிநிர்வாண நிலை அமைப்பில் 12 80 மீ. (நாற்பத்தாறடி)நீளமுள்ள புத்தரின் வடிவமும், அவரது சீடன் ஆனந்தனின் வடிவமும் விகாரையின் இடது பக்கத்தில் காணப்படுகின்றன. அவ்வடிவங்கள் கண்கவர் வனப்புடன் காட்சி தருகின்றன. பரிபூரண நிலையடைந்துள்ள புத்தர் பெருமான், தலையணையின் மேலுள்ள வலது கையின் மேல் மூடிய கண்களுடனும், மலர்ந்த முகத்துடனும் படுத்திருக்கிருர். ஆனந்தன் துன்பம் ததும்பும், அமைதி தவழும் முகத்துடன் இரு கைகளையும் மார்போடு அணைத்த நிலையில், எதிர்பாராத வகையில் நடந்துவிட்ட நிகழ்ச்சியில் தன்னை மறந்து, குரு தேவரின்

1. Percy Brown, Indian Architecture, Part I, P 170.

தலைப்பக்கமாக நிற்கிறார். அமைதி நிறைந்த சூழ்நிலையில், அமைதியின் அழகு பொலிய அமைக்கப்பட்டிருக்கும் இத் திருவுருவங்களைக் காண்பவர் உள்ளம், இன்பமும் அமைதியும் பெற்று விம்முகிறது.

## பொத்தக்கல்

பராக்கிரம பாகுவின் சிலையென்று ஐயுறப்படும் முனிவர் சிலை ஒன்று, பொத்தக்கல் விகாரைக்கு அருகிலுள்ள சிறந்த சிற்ப வடிவங்களுள் ஒன்று. அவ் வடிவம் ஒரு துறவியின் தோற்றத்துடன் காட்சியளிப்பதால், அதைப் புலத்திய முனிவரின் சிலையென்று கூறுவாரும் உளர். அச்சிலையின் அமைப்பில் காணப்படும் கலைப்பண்புகள் பொலனறுவாவி லுள்ள சிலைகளோடு ஒப்புமையுடையனவாக உள்ளன. பொலனறுவாவில் உள்ள வட்டதாகே கோயில் முதலாம்பராக்கிரம பாகுவால் கட்டப்பட்டதென்றும், பிற்காலத்தில் நிசங்க மல்லனால் அது புதுப்பிக்கப்பட்டதென்றும் கூறுவர். இலங்கையிலுள்ள பௌத்த சிற்பக் கட்டடங்களுள் அது தலை சிறந்ததென்று கலைஞர்கள் கருதுகின்றனர்.

நிசங்க மல்லனால், அட்டதாகே என்னும் கோயில் கட்டப்பட்டது. அதனுள் புத்தர் பெருமானின் 'புனிதப்பல்' அடக்கம் செய்யப்பட்டது என்பர். மேலும், அவன் கொடி (லதா) மண்டபம், தொதவிகாரமெனும் தகோபாவையும் கட்டினான். இலங்கையின் வடமேற்குப் பகுதியிலுள்ள சேசறுவா என்னும் இடத்தில் காணப்படும் 4·80 மீ. (16 அடி) உயரமுள்ள புத்தர்சிலையின் வடிவமும், அவுகள வில் காணப்படும் 12.80 மீ. (46 அடி) உயரமுள்ள புத்தர் சிலையும் மிகச் சிறப்பு வாய்ந்தனவாகும். அவுகளவிலுள்ள புத்தர் சிலை, ஆசியா முழுவதிலும் காணப்பெறாத பேரெழி லும் பெருஞ் சிறப்பும் வாய்ந்ததெனக் கூறுவர். மைசூரைச் சேர்ந்த சிரவண பௌகோளாவில் காணப்படும் கோமதேசு வரர் திருவுருவைக் காட்டிலும், இச் சிலை உருவத்தால் சிறியதாயினும், கலையழகில் அதைக்காட்டிலும் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

### பாண்டியர் கலைப்பாணி

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியருடைய ஆதிக்கம், இலங்கையில் கால்கொள்ளத் தொடங்கியதைக் கண்டோம். அக் காலத்தில் பொலனறு வாவிலுள்ள முதலாவது சிவன் கோயில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. பாண்டியர் சிற்பக்கலை முறையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ள அக்கோயில் இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களுள் தலைசிறந்து விளங்குவதாகும்.

### விசயநகரக் கலைப்பாணி

கண்டியில் விமலதர்ம சூரியனால் புத்தர் பெருமானின் புனிதப்பல்லிற்குக் கட்டப்பட்ட கோயில் இக்காலத்தைச் சார்ந்ததாகும். பதினான்காம் நூற்றாண்டில் நான்காம் புவனேகபாகு காலத்தில், அவனுடைய படைத்தலைவனாகிய 'சேனா இலங்காதிகாரன்' என்பவன் கம்பளைக்கு அருகில் உள்ள ஒரு சிறு குன்றில், 'இலங்கா திலகம்' (இலங்கைக்குத் திலகம்) என்ற விகாரத்தைக் கட்டினான். அது செங்கற்க ளால் அமைக்கப்பட்டுள்ளது. பொலனறுவா காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களைப் போன்றே இதன் அமைப்பும் காணப்படுகிறது.

ஆயினும் மூலத்தானத்திற்கு முன்பு இரண்டு மண்ட பங்கள் அமைப்பது விசயநகரச் சிற்பக் கலை முறையாகும். அதன் அமைப்பு சிவன் கோயிலைப் போன்றுள்ளது. மூலத் தானத்தில் புத்தர் பெருமானின் திருவுருவமும், உள் சுற்றாலையில் வேறு தெய்வங்களின் வடிவங்களும் அமைக்கப் பட்டுள்ளன.

### வெண்கலச் சிலைகள்

சைவ சமய அடியார்களின் திருவுருவங்கள் கொழும்பு அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவை பொலனறுவாவில் உள்ள பாழடைந்துபோன கோயில்

களிலிருந்து கொண்டுவரப்பட்டவை. எனவே, அவ்வடிவங்கள் சோழர் காலத்திய படிமக்கலை (Iconography) முறையைப் பின்பற்றிப் பதின்மூன்றும், பதினான்காம் நூற்றூண்டுகளில் செய்யப்பட்டனவாதல் வேண்டும் என்பது ஆனந்த குமாரசாமி அவர்களின் கருத்தாகும். அங்குக் காணப்படும் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞான சம்பந்த நாயனார், சண்டேசுவர நாயனார் முதலியோரின் வெண்கலச் சிலைகளைப் போன்ற படிமங்களைத் தமிழகத்திலும் காண்பது அரிது என்பர்.

## சிவனடியார்களின் சிவக்கோலம்

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர், சிவபெருமானின் திருவருள் திறத்தை நினைந்து, அதன் வயப்பட்டுப் பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைத்து, மெய்ம் மறந்து நிற்கும் நிலையில், அவ்வெண்கலச்சிலை காணப்படுகிறது. இத்தகைய அருமை வாய்ந்த திருவுருவைப் படைத்த சிற்பியின் கைவண்ணம், போற்றத் தக்கதாகும். மானிட அருளுணர்ச்சியும் பக்தியுணர்வும் பொங்கி வழிகின்ற நிலையில், நம் இதயங்களோடு நேரடியாக அச்சிலைபேசுகிறது. காண்பதற்கு அரிய பேரின்பக் காட்சியைக் கண்ட உணர்வு நிலையில், தேவாரத்தை வாய்திறந்து ஓதுவதற்கு முயலும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியாகும்.[1] இத்திருவுருவம் உலகிலுள்ள சிறந்த வெண்கலச் சிலைகளுள் ஒன்றாகக் கலை நூலாரால் போற்றப்படுகிறது.

சேக்கிழார் பெருமானால் சொல்லோவியமாகத் தீட்டப்பெற்ற பால்மணம் மாறாப் பச்சிளங் குழவியாகிய ஞான சம்பந்தரைத் தன்னுடைய மனக்கண்களால் கண்டகலைஞன், அழுகை தீர்ந்த வாயும், காப்பணிந்த கையில் பொன்னாலாகிய தாளமும், இடையில் சதங்கைகள் தொங்கும் அரை

---

1. Rene Grousset, The Civilizations of the East, India, P. 268.

ஞானும், உச்சிமீது சுற்றிய சிகையும், மார்பில் முத்தாரமும் கழுத்தில் உருத்திராக்க மணியும் ஒன்று சேர்ந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வடிவில் உயிர்த்துடிப்புடன் விளங்குமாறு இங்குள்ள வெண்கலச்சிலையினைப் படைத்துள்ளான்.

திருநாவுக்கரசர், சண்டேசுவரர், அனுமார் ஆகியோரது வடிவங்கள் அவரவர்களுடைய பக்தி நிலையைப் புலப்படுத்தும் வகையில் சிறப்புறச் செய்யப்பட்டுள்ளன. நடராசரின் திருமேனி, சோமாஸ்கந்த வடிவம், சந்திரசேகரரின் திருவுருவம், அம்பிகையின் வடிவம் போன்ற பல வெண்கலச் சிலைகள் இலங்கையின் பல பகுதிகளில் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன. ஆயினும், அவற்றுள் தலைசிறந்தன நாயன்மார் களின் சிலைகளாகும்.

"இந்நாயன்மார்களின் சிலைகள் தென்னிந்தியச் சிலைகளை விட வனப்புமிக்கனவாகக் காணப்படுகின்றன. ஆயினும், அவை திராவிடப் படிமக்கலை முறையைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது."

## கண்ணகியின் சிலை

கண்ணகியின் சிலையெனக் கருதப்படும் பத்தினித் தெய்வத்தின் படிமம் இலங்கையில் கிடைத்துள்ளது. அது "அழகுப் பண்பில் இந்தியாவில் சுல்தான் கஞ்சில் காணப் படும் புத்தர் சிலையை ஒத்துள்ளது; பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலங்கையின் சிற்ப வடிவங்களைக் காட்டிலும் பேரெழில் வாய்ந்ததாக விளங்குகிறது. அச்சிலையின் இடையைச் சுற்றிலும் அழகிய ஆடை நுட்பமாகக் குப்தர் கலைமுறையில் உடலோடு ஒட்டிய வண்ணம் காணப்படுகிறது."[1] அப்பத்தினி சிலை கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த தென்று கலைநூல் வல்லார் கருதுகின்றனர். அச்சிலை சோழர் காலத்திய கலைமரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டி

---

[1] Ananda K. Coomaraswami : History of Indian and Indonesian Arts, P. 167

ருக்கிறது: மெலிந்த இடையும் திரண்ட துடைகளும் பருத்த கொங்கைகளும் கொண்ட முரண்பட்ட உடலமைப்பு நேர்த்தியாகவும் நளினமாகவும் இருக்கிறது. பெருமிதம் வாய்ந்த தோற்றப் பொலிவும், அருளொழுகும் திருநோக்கும் அமைதி தவழும் திருமுகமும் கொண்ட பத்தினி வடிவம் பன்னெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்கும் 'இந்தியப் பெண்மையின்' உறைவிடமாகத் திராவிடச் சிற்பக்கலை முறை இயல்புகளோடு பேசும் பொற்சிலையாக இலங்குகிறது[1] என்று கூறின், அது மிகையாகாது.

இவையாவும் சோழர் காலத்துப் படிமக்கலைப் பாணியைப் பின்பற்றிச் செய்யப்பட்டனவாய், எளிமையும் எழிலும், நெகிழ்ச்சியும் குழைவும் வாய்ந்த கலைவனப்புடைய வெண்கலச் சிலைகளாக விளங்குகின்றன.

## ஓவியக் கலை

கலைச் செல்வங்கள் நிறைந்த இலங்கை, ஓவியக் கலையிலும் தனிச்சிறப்புடையதாகும். இந்தியாவில் பேணி வளர்க்கப்பட்ட ஓவியக்கலைப் பண்பு, இலங்கைக்கும் சென்று பரவியது. குப்தர்கள் காலத்திய அஜந்தா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவை. அதற்கடுத்த நிலையில் இலங்கையிலுள்ள சிகிரியா ஓவியங்களைச் சொல்லலாம். இலங்கையில் காணப்படும். ஓவியங்களைச் சுவர் ஓவியங்கள் (Mural Paintings) என்றும், சுதை ஓவியங்கள் (Fresco Paintings) என்றும், இருவகையாகப் பிரிக்கலாம். சிகிரியா, தம்புள்ளா, இந்தலாகலா, திம்புலா கலா முதலிய இடங்களில் காணப்படுவன சுதை ஓவியங்களாகும். பொலனறுவா, கண்டி, மதியங்கணை, களனியா முதலிய இடங்களில் உள்ள சுவர் ஓவியங்கள் நம் கருத்தைக் கவருகின்றன.

## பழைய ஓவியங்கள்

துட்டகாமணி கட்டிய ருவான் வெலிசாயா தகோபாவிலும் பித்தளை மாளிகையிலும் ஓவியங்கள் பல தீட்டப்பட்டி

[1] Zimmer H. ,The Art of Indian Asia, P. 114.

ருந்தமை மகாவமிசத்தால் அறியப்படுகிறது. தம்புள்ளாவில் உள்ள குகைக் கோயில்களில், பௌத்த சமயத்தைச் சித்திரிக்கும் ஓவியங்கள் பல காணப்படுகின்றன. அக்கோயில் முதன் முதல் கி. மு. முதல் நூற்றாண்டிலிருந்த வட்டகாமணி என்னும் அரசனால் கட்டப்பட்டது. அங்குள்ள ஓவியங்கள் நிசங்கமல்லனால் புதுப்பிக்கப் பட்டன. பிற்காலத்தில் கண்டி அரசர்களும் அவ்வோவியங்களைப் புதுப்பித்துள்ளனர். ஆயினும், பழங்கால ஓவியங்கள் அக்குகைக்கோயிலின் சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன.

## பொலனறுவா ஓவியம்

பொலனறுவாவைச் சிறந்த நகரமாக்கியவன் முதலாம் பராக்கிரமபாகு. தான் கட்டிய கோயில்களில் பௌத்த சமயத் தொடர்புடைய ஓவியங்களை அழகுற அமைக்குமாறு அவன் செய்தான். அந்நகரிலுள்ள பௌத்தக் கோயில்களில் இன்றுகாணப்படும் ஓவியங்கள் பெரும்பாலும் அவன் காலத்தைச் சேர்ந்தனவாகும். திவங்க ஆலயத்தில், புத்த சாதகக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் பல வரையப்பட்டுள்ளன. அவற்றுள் சில, புகழ்மிக்க அஜந்தா ஓவியங்களை நினைவுபடுத்துவனவாகப் பரணவிதானே கருதுகிறார்.[1] போதி மாதவரின் ஓவியம், அஜந்தா ஓவியத்தின் மறுபதிப்பாகக் காணப்படுகிறது; இலங்கையில் களனி, மதியங்கனை, தம்புள்ளா, இலங்கா திலகம், தொடந்தலை, தெகல் தெறுவா முதலிய இடங்களில் பண்டைக்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் கி. பி. ஆறும், ஏழாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாகும். இவையாவும் சமயச் சார்புடையன என்பது இங்குக் கருதத் தக்கது.

## சிகிரியா ஓவியம்

முதலாம் காசிபன் (கசபா, 477-495) காலத்திய, சிகிரியா மலைப் பகுதியில் உள்ள சுதை ஓவியங்கள் (Firesco

---

1. Paranavitana, Art and Architecture of Ceylon, P. 46.

Paintings) சிறப்பு மிக்கன. அவை அஜந்தாவின் பதினாறுவது பதினேழாவது குகைகளிற் காணப்படும் ஓவியங்களோடு ஒத்திருக்கின்றன. அவை வளமிக்க அரண்மனையில் வாழ்ந்த மகளிரின் ஊர்வலத்தைச் சித்திரிக்கின்றன. என்பர் ஹாவல் முதலாம் காசிபனின் அரசிகளும், அவரது பணிப் பெண்களும் வலமாகச் செல்லுகின்றனர் என்றும், பணிப் பெண்கள் கைகளில் மலரினை வைத்துக் கொண்டிருக்கின்ற னர் என்றும் அவர் கருதுகிறார். வேறு சிலர், அவ்வோவியம் 'தேவ மங்கையரைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். விண் ணிலே முகில் கூட்டங்களுக்கு இடையில், காற்றில் மெல்ல அசைந்து செல்லும் பெண்களைப் போன்று அவ்வோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதில் 20 பெண்கள் தனித்தனியாகவும் காட்சியளிக்கின்றனர். எழில்மிகு மின்னிடையும், நீண்டு குவிந்த விரல்களுடைய கைகளும் கொண்ட அப்பேரழகிகளை மென்மையான வரியையும் வண்ணங்களையும் கொண்டு பல அணிகளினாலும், மென்துகில் ஆடையினாலும் ஓவியர்கள் அழகுக்கு ஓர் அழகு செய்துள்ளனர். 'அஜந்தா', 'பாக்' ஓவியங்களிலுள்ள துலக்கமான நீலவண்ணத்திற்குப்பதிலாக இங்குப் பச்சை வண்ணம் கூடுதலாகக் காணப்படுகிறது. இவை யாவும் அபிநயச் சிறப்புடையன. உணர்ச்சி பொருந் திய நிலைகளை உடல் நெளிவினாலும், உடை நெகிழ்ச்சியினா லும், விரல் முத்திரைகளினாலும் வெளிப்படுத்தும் இயல்பில் இந்திய ஓவியங்களை ஒத்துள்ளன. மனத்தின் நிலையினை வரி களாற்காட்டுவது இலங்கை ஓவியங்களின் சிறப்பியல்பாகும்.

சிகிரியா ஓவியங்கள் சமயச் சார்பற்றன. இசுலாமியர் கள் காலத்திற்கு முன்பு சிறப்புற்று விளங்கிய இந்திய ஓவியக் கலை மரபில், சிகிரியா ஓவியங்களே சமயச் சார்பற்றனவாக உள்ளமை இங்கும் குறிப்பிடத்தக்கது.[1]

[1] E.B. Havelly A Hand look of Art, P. 203.

# இலக்கியக் கலை

கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. தமிழ் நாட்டில் போற்றி வளர்க்கப்பட்டு வரும் இலக்கிய மரபுகள் பல, இலங்கைத் தமிழ் மக்களால் ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அந்த நாட்டின் சூழலுக்கேற்ப, புதுமைப் பண்புகளாக அவற்றைப் புகுத்தி, தங்கள் இலக்கியத்தை அவர்கள் பேணி வளர்த்து வருகின்றனர். இது மட்டும் அல்லாமல், தமிழ் இலக்கிய மரபுகள் சில சிங்கள மொழி இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளதையும் காணுகின்றோம். மேலும், தமிழ் அறிஞர் சிலர், சிங்கள மொழியில் இலக்கியங்கள் சிலவற்றை இயற்றியுள்ளதையும்காணுகின்றோம். இத்தகைய இலக்கியப் போக்குகளை நாம் இப்பொழுது காண்போம்.

## ஈழத் தமிழ்ச் சங்கம்

சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஈழத்துப் புலவர்களைப்பற்றி நாம் முன்னரே கண்டோம். கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத் தமிழ் அரசு தோன்றியது. அது முதல், தமிழிற்கு ஒரு புது வாழ்வு அந்நாட்டில் உண்டாயிற்று. பண்டை மதுரைத் தமிழ்ச் சங்கத்தினைப் போன்று யாழ்ப்பாணத்தில் செக ராசசேகரன் எனும் அரசனால் தமிழ்ச்

சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. அதையொட்டி அருமையான நூலகம் ஒன்று சரசுவதி மகாலயம் எனும் பெயரில்அமைக்கப்பட்டது.[1] இவ்வமைப்பு தமிழ்க் கல்விக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பேருக்கம் தந்தது. தமிழகத்தில் இருந்தும் பல புலவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்று, இச் சங்கத்தில் பயின்றும், தொண்டாற்றியும் உள்ளனர். யாழ்ப்பாண அரசர்களும் சிறந்த புரவலர்களாக—வள்ளல்களாகப் பொன்றுப் புகழ் பெற்றனர்.

பராக்கிரம பாகு எனும் சிங்கள மன்னனுடைய அவைக்களத்தில் போசராச பண்டிதர் எனும் தமிழ்ப் பெரும் புலவர் அமைச்சராக விளங்கினர். இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. ஆனல், அவ்வுரை இன்று கிடைக்கவில்லை. இவர் வாழ்ந்த காலம் கி. பி. பதினன்காம் நூற்றுண்டாகும். அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய செயவீர சிங்கை ஆரியன் எனும் செகராச சேகர மன்னன் புலவர்களைப் போற்றி ஆதரித்தான்.

அக்காலத்தில் செகராச சேகரம் எனும் மருத்துவ நூலும் செகராச சேகரமாலைஎன்னும் சோதிட நூலும், கணக்கதிகாரம் எனும் கணித நூலும் தோன்றின. மற்றும் இவ்வரசன் அவையிலேயே தக்காண கைலாச புராணம் எனும் இலக்கியத்தைப் பண்டிதராசர் எனும் புலவர் அரங்கேற்றியதாகக் கூறுவர். இதற்குச் 'சோணசல புராணம்' எனும் மற்றொரு பெயரும் உண்டு. தேவாரம் பாடிய மூவர் முதலிகளால் போற்றப்பட்ட திருக்கோண மலையே, தக்கண கைலாசம் என ஈழத்து மக்களால் போற்றப்படுகிறது. இலக்கியச் சிறப்பு வாய்ந்த கோணேசர் கோயில் கல்வெட்டு வாசகத்தைக் கவிராசர் எனும் புலவர் இயற்றியதாகத் தெரிகிறது.

---

1 கைலாயமாலை, பக்.209-210.

## தமிழில் இரகுவமிசம்

பதினைந்தாம் நூற்றாண்டில், குணவீர சிங்கை ஆரியன் ஆட்சிக் காலத்தில், பரராசசேகரம் எனும் மருத்துவ நூல் தோன்றியது. பரராச சேகர மன்னன் காலத்தில் அவனுடைய மைத்துனராகிய அரசகேசரி எனும் புலவர் பெருமான், வடமொழியில் சிறப்புற்று விளங்கும் காளி தாசரின் இரகு வமிசத்தைத் தமிழாக்கம் செய்தார். இதை ஈழம் தமிழிற்கு அளித்த பெருங் காப்பியமாகப் போற்று கின்றனர். இக்காப்பியத்தில், இருபத்தாறு படலங்களும் ஏறக்குறைய ஈராயிரத்து ஐந்நூறு பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள், அரசகேசரியின் இருமொழிப் புலமையையும், பழந்தமிழ் நூல்களின் பயிற்சியையும், கற்பனை வளத்தையும் கவித் திறனையும் உலகிற்கு உணர்த்துகின்றன. "முதல் நூலில் உள்ள சுலோகங்களின் போக்கை முற்றுந் தழுவிப் பாடப்பட்டன; கம்பராமாயணத்துக் கூறப்படாத சில நுட்பங்களைச் செம்மையாகப் புலப்படுத்துவன." ஆசிரியரே,

கற்றார் கவியின் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன்
உற்றாங்(கு) உரைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்
(இரகு.7)

என இதைத் தெரிவித்துள்ளார். அண்மைக் காலத்தில் வாழ்ந்த சுன்னாகம் குமார சுவாமிப் புலவர், இக்காப்பியத்தின் நயமிகு பாடல்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, உரை விளக்கம் தந்து, இரகுவமிசக் கருப்பொருள் எனும் நூலாக வெளியிட்டுள்ளார். இரகு வமிசம் முழுமைக்கும் பெரும் புலவர் சி. கணேசையர், சிறந்ததோர் உரை எழுதியுள்ளார்.

## வீரராகவர் பெற்ற விருது

போர்ச்சுக்கீசியர், பதினாறும் நூற்றாண்டில் இலங்கையின் சில பகுதிகளைத், தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். கதிரைமலைப் பள்ளு இந் நூற்றாண்டில் இயற்றப்

பட்டதாகும். இதனை இயற்றிய ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. இந் நூற்றாண்டின் இறுதியில், பரராசசேகரன் ஆட்சி புரிந்தான். அவனுடைய அவையில் தமிழகப் பெரும் புலவரான அந்தகக் கவி வீரராகவ முதலியார், தம் கவித் திறத்தை வெளிப்படுத்திப் பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றார். அவர் பாடியுள்ள தனிப் பாடல்களால், ஈழத்து மன்னன் எத்துணைச் சிறப்பாகப் புலவர் வீரராகவரைப் போற்றி ஆதரித்தான் என்பது புலனாகின்றது.

## தமிழகத்திற்கு வந்த புலவர்

சங்கிலியன் எனும் அரசன் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப் பாணத்தை ஆண்டு வந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் (கி பி. 1619 இல்), போர்ச்சுகீசியர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி, தமிழரின் ஆட்சியை அழித்தனர். இந் நூற்றாண்டின் இடைப் பகுதியில், போர்ச்சுகீசியரின் ஆதிக்கம் ஒடுங்கி, டச்சுக்காரர் களின் ஆதிக்கம் கால் கொண்டது. இலங்கைத் தமிழ் மக்கள் பேரளவில் கிறித்துவர்களாகச் சமய மாற்றம் செய்யப்பட்டனர். இந்நூற்றாண்டிலே, திருநெல்வேலியில் இருந்த ஞானப் பிரகாசர் எனும் புலவர், ஆட்சியாளரின் கொடுமைக்கு அஞ்சி, தமிழகத்திற்கு வந்தார்; பல கலைகளைக் கற்றார்; புகழ் மிக்க அறிஞராக விளங்கினார். சைவ சித்தாந்த சாத்திரமான சிவஞான சித்தியாரின் சுபக்கப் பகுதிக்கு ஞானப் பிரகாசர் நல்லதோர் உரை விளக்கம் எழுதி யுள்ளார்; சிதம்பரத்தில், ஞானப் பிரகாசம் எனும் குளத்தை யும் வெட்டுவித்தார்.

## கிறித்துவத் தமிழ் இலக்கியம்

இக் காலத்தில் வேலைய தேசிகர், நல்லூர்ப் புராணம் எனும் நூலை இயற்றியுள்ளார். புதியதாகக் கிறித்துவ சமயத்திற்கு மாற்ற முற்ற தமிழ் மக்களுக்குப் பயன்படத் தக்க வகையில், நெல்லிப் பழைப் பேதுருப் புலவர்

சந்தியோகுமையோர், ஞானப்பள்ளு எனும் கிறித்தவ சமயத் தொடர்பான நூல்களை இயற்றினர்.

## புராணங்களும் சிறு பிரபந்தங்களும்

பதினெட்டாம் நூற்றுண்டில் கண்டியை ஆட்சி புரிந்த கடைசி நான்கு மன்னர்களும் தமிழராவர் எனவே, தமிழே அங்கு ஆட்சி மொழியாக வீறுடன் விளங்கியது! இந் நூற்றுண்டில் மிகப் பலவாகப் புராணங்களும், சிறுபிரபந்தங் களும் யாழ்ப்பாணப் புலவர்களால் இயற்றப்பட்டன.

வரதபண்டிதர் என்பவர் 'சிவராத்திரி புராணம்,' 'ஏகாதசி புராணம்' எனும் நூல்களை இயற்றினர். தமிழகத் திலிருந்து இலங்கையில் குடியேறிக் கிறித்தவராக மாறிய கூழங்கைத் தம்பிரான், 'தேவப்பிரசையின் திருக்கதை,' 'யோசேப் புராணம்' எனும் கிறித்துவ சமயச் சார்பான நூல்களைத் தமிழில் இயற்றினர். அப்புக்குட்டி ஐயர் என்பவர் 'சூதுபுராணம்', 'நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் எனும் சிற்றிலக்கியங்களைப் படைத்தார். 'வலைவீசு புராணத்தை' முத்துக் குமாரர் பாடியுள்ளார். நல்லூர் சின்னத் தம்பிப் புலவர் என்பார் 'மறைசை அந்தாதி,' 'கல்வளை அந்தாதி,' 'பறாளைப் பள்ளு,' 'கரவை வேலர் கோவை' எனும் நூல்களை இயற்றினர். 'புலியூர் யமக வந்தாதி,' 'யாழ்ப்பாண வைபவ மாலை,' 'ஞானலங்கார நாடகம்' எனும் நூல்களை மயில்வாகனப் புலவர் பாடி யுள்ளார். கண்டி அரசன் மீது 'கிள்ளை விடு தூது' ஒன்றினைச் சிற்றம்பலப் புலவர் இயற்றியுள்ளார். பிலிப்பு தெ மெல்லோ என்பவர் தமிழ்ப் புலமை வாய்ந்தவராக விளங்கினர். அவர் விவிலியத்தின் புதிய ஏற்பாட்டினைத் தமிழாக்கம் செய்து, பதிப்பித்துள்ளார்.

## மேற்கு நாட்டுக் கல்வியின் தாக்கம்

பத்தொன்பதாம் நூற்றுண்டு முதல், தமிழ் இலக்கியம் பல்வேறு துறைகளில் பல்கிப் பெருகியது. மரபு வழி வந்த

இலக்கிய வளர்ச்சியோடு, மேற்கு நாட்டுக் கல்வி முறையின் தாக்கத்தால் பல புத்தம் புதிய இலக்கிய வகைகள் ஈழத்துத் தமிழரால் போற்றி வளர்க்கப்பட்டன. அச்சியந்திரத்தின் பயன்பாடு பெருகியதால், பழந்தமிழ் நூல்களை அச்சிடுவது முதல் புத்தம் புதிய நூல்களைப் படைப்பது வரையிலான பல பணிகளில் தமிழ் அறிஞர்களும், ஐரோப்பியப் பாதிரி மார்களும் ஈடுபட்டனர். சிறப்பாகப் பத்திரிகைகள், பெருந் திரளான மக்களிடையே செய்திகளைப் பரப்பும் கருவியாக வளர்ச்சியுறலாயிற்று. பல்வேறு அறிவுத் துறைகளைப் பற்றி உரை நடையில் எழுதத் தொடங்கியமையால், தமிழ் உரை நடை வலிவும் பொலிவுமிக்க வளர்ச்சியை அடையத் தொடங்கியது.

## கிறித்துவச் சமய நூல்கள்

தொம் பிலப்பு என்பார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் 'ஞானானந்த புராணம்' எனும் கிறித்துவச் சமய நூலையும், கனக சபைப் பிள்ளை என்பவர், திருவாக்குப் புராணம் எனும் கிறித்துவச் சமய நூலையும் இயற்றினர்.

## ஆறுமுக நாவலரின் அரும்பணி

இந்நூற்றாண்டில் தலை சிறந்து விளங்கிய தமிழ்ப் பேரறிஞர் **ஆறுமுக நாவலராவர்.** தமிழையும் சைவத்தையும் ஒல்லும் வகையெல்லாம் ஓவாது வளர்த்த பெரியவராவர்; தமிழ் உரைநடைக்கு ஒரு புதிய ஆற்றலை ஊட்டிய பெருமைக்குரியவர்; இவர் இயற்றிய இலக்கியங்களுள் தலை சிறந்தது 'தேவகோட்டைத்தல புராணம்'. கிறித்தவர்களின் வேதமான விவிலியம் இவரால தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது என்பர். இவர், பழைய இலக்கியங்கள் பலவற்றை உரைநடையில் வரைந்துள்ளார். அவற்றுள் பெரிய புராண வசனம், திருவிளையாடல் புராண வசனம் இங்குக் குறிப்பிடத் தக்கன. இவருடைய உரை விளக்கங்களுள் நன்னூல்

காண்டிகை உரை புகழ்மிக்கதாகும். இவர் பதிப்பித்த நூல்கள் பல. கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, தொல்காப்பியம் சேனாவரையர் உரை, சிவஞானபோதம் அவற்றுள் சிறப்புமிக்கன. நாவலர்பெருமான் சொற்பொழிவுகள் மூலமும் தமிழின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார்.

## தமிழ் இலக்கிய வரலாறு

இவருடைய மாணவர் பலர். அவர்களுள் சபாபதி நாவலர் என்பவர் நாடுபோற்றும் நற்றமிழ்த் தொண்டராவார். தமிழ் இலக்கிய வரலாற்றை முதன்முதலாகத் திராவிடப் பிரகாசிகை யை நூல்வடிவில்தந்த சிறப்புக்குரியவராவார். இவர் 'சிதம்பரம் சபாநாதர் புராணம்', 'திருச்சிற்றம்பல யமக அந்தாதி', மாவையந்தாதி', 'நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்' முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

## புராணங்கள்

வல்வை வையித்திய லிங்கம் என்னும் புலவர் 'சாதி நிர்ணய புராணம்' என்னும் நூலினைப் படைத்துள்ளார். யாழ்ப்பாணத்து நட்டுலனூர் சுப்ஙபயா என்பவர், கனகி எனும் தாசிமேல், 'கனகிபுராணம்' எனும் இலக்கியத்தைப் படைத்துள்ளார். இவருடைய கற்பனைத்திறன் கவர்ச்சி மிக்கதாகும்.

நடந்தாளொரு கன்னி மாராச
    கேசரி! நாட்டில் கொங்கைக்
குடந்தான் அசைய ஒயிலாய்!
    அதுகண்டு கொற்றவரும்
தொடர்ந்தார்; சந்நியாசிகள் யோகம் விட்
    டார்: சுத்த சைவர் எல்லாம்
மடந்தான் அடைத்துச் சிவபூசை
    யும் கட்டி வைத்தனரே!

எனும் பாடல் இக்காலத்திய புதுமைக் கவிஞர்களின் எண்ணப் போக்கை எதிரொலிக்கின்றது.

## சிற்றிலக்கியச் செல்வம்

சந்திர சேகர பண்டிதர், நல்லூர் கந்தசாமிக் கடவுள் மீது 'கிள்ளை விடு தூது' இயற்றியுள்ளார். குமாரசுவாமி முதலியார் என்பவர் 'நல்லைக் கலித்துறையையும், வண்ணை நகர் வைத்திய லிங்கம் பிள்ளை, 'நல்லை வடிவேலர் ஆசிரிய விருத்தத்தையும்' பாடியுள்ளனர். சதாசிவ பண்டிதர் எனும் புலவர், 'வண்ணையந்தாதி'யையும், இணுவில் சின்னத் தம்பிப் புலவர், 'இணுவல் சிவகாம சுந்தரி அம்மை பதிகம்', 'காலிங்கராயன் பஞ்ச வண்ணத்தூது' எனும் நூல்களைப் படைத்துள்ளார். 'புலியூா புராணம்,' 'புலியூர் அந்தாதி' எனும் பிரபந்தங்களைச் சிவானந்தையரும்,'நல்லை வெண்பா', 'நல்லைக் குறவஞ்சி' 'நல்லையந்தாதி,' 'நீராவிக் கலிவெண்பா' என்னும் இலக்கியங்களைச் சேனாதிராயரும் படைத்துள்ளனர். புலவர் விநாயகர் என்பவர் 'கதிரை மலைக் குறவஞ்சி' 'குருக்கள் கோடரி' எனும் நூல்களையும், சரவண முத்துப் புலவர் 'நெல்லை வேலர்உலா' வையும்,கார்த்திகேயப் புலவர் 'திருத்தில்லைப் பல்சந்த மாலையை'யும் இயற்றியுள்ளனர்.

## நாடகத் தமிழ்

பீதாம்பரப்புலவர், 'மறைசைக் கலம்பகம்,' 'மறைசைத் திருப்புகழ்,' 'நீர்வை வெண்பா' முதலிய இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவை யாவும் இயல் தமிழ் வளர்ச்சியைக் காட்டுகின்றன சின்னத்தம்பி என்பவர் 'மதனவல்லி விலாசம்,' 'நொண்டிநாடகம்,' 'கோவலநாடகம்', 'அநிருத நாடகம்' எனும் நாடகங்களையும் படைத்துள்ளார்.

சென்ற நூற்றாண்டில், நாவலர் பெருமானுடைய தகப்பனரான கந்தப்பிள்ளை, இருபது நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார். அவற்றுள் சந்திர காச நாடகம்' 'இராமவிலாசம்' கண்டி நாடகம், ஏரோது நாடகம' 'இரத்தினவல்லி

நாடகம் என்பன சிறப்புடையன. சுவாமிநாதர் என்பார், 'இராம நாடகம்' 'தருமபுத்திர நாடகம்' என்பவற்றை இயற்றியுள்ளார். புலோலிக் கணபதிப் பிள்ளை 'இந்திர குமார நாடக'த்தையும், இராமலிங்கம்பிள்ளை 'மாணிக்க வாசகர் விலாசம்', 'நவச்சக்கரவர்த்தி விலாசம்' என்பன வற்றையும் படைத்துள்ளார். ஆசிரியர் கணபதி ஐயர், 'அபிமன்யு நாடகம்', 'அலங்காரரூபன் நாடகம்', 'அதிரூபவதி நாடகம்,' 'மலையகந்தினி நாடகம்,' என்பனவற்றைஇயற்றியுள்ளார். 'பதுமாபதி நாடகம்' 'தேவசகாய நாடகம்,' 'சீமந்தனி நாடகம்' என்பவற்றின் ஆசிரியர் முத்துக்குமார சுவாமிப் புலவராவார். 'அருச்சுன நாடகம்', 'சுபத்திரை நாடகம்' என்பன நாகேனசயராலும், 'குருச்சேத்திர நாடகம்,' 'முருகேசையராலும் எழுதப்பட்டன. மாப்பாண முதலியார் என்பவர் 'சோமகேசரி நாடகம்', 'பரிமளகாச நாடகம்' என்பனவற்றை இயற்றியுள்ளார். 'பதிவிரதை விலாசத்தைக்' குமர குல சிங்க முதலியாரும், 'உயிர் இளங் குமரன்' எனும் நாடகத்தைச் சோம சுந்தரப் புலவரும் படைத்துள்ளனர். இந்நாடகங்களுள் பல கீர்த்தனைகள் உள்ளன. இவையல்லாமல், இசைப் பாடல்களாகப் பலர் கீர்த்தனைகளை இயற்றி, நூல்களாக வெளியிட்டுள்ளனர். இவற்றால், நாடகத் தமிழும் இசைத் தமிழும் இலங்கையில் நன்கு போற்றி வளர்க்கப்பட்டமை புலனாகின்றது.

### பல்வகைப் பணி

இவையல்லாமல் பழைய இலக்கியங்கள் பலவற்றிற்கு உரை விளக்கங்கள் எழுதப்பட்டன. 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி' வெளியிடப் பட்டதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் பழந்தமிழ்நூல்கள் பல பதிப்பிக்கப்பட்டன. 'இறையனார் அகப்பொருளுரை,' 'வீரசோழியவுரை, தொல்காப்பிய (முழுமையும் உரையுடன்) உரை,' கலித்தொகை', 'தணிகைப்புராணம்', 'சூளாமணி' முதலிய நூல்களை அவர் நல்லமுறையில் பதிப்பித்துள்ளார். 1859இல் சைமன் காசிச் செட்டி என்பவர்,

தமிழ்ப் புலவர் வரலாற்றை ஆங்கிலத்தில் தமிழ் புளூடார்க்கு (The Tamil Plutarch) எனும் நூலாக வெளியிட்டார். இதைத் தழுவிச் சதாசிவம் பிள்ளை என்பவர், பாவலர் சரித்திர தீபகத்தை 1889இல் வெளியிட்டார். மற்றும் மருத்துவம், சோதிடம், வானநூல் போன்ற கலைகளைப் பற்றிய நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. மேலும், ஆங்கில மொழியிலிருந்தும் வடமொழியிலிருந்தும் பல நூல்கள் இலங்கைத் தமிழரால் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றுள், மேலை நாட்டு மருத்துவ நூல்கள் முதன்மை இடம் பெறுகின்றன. கிரீன் என்பார்மருத்துவக் கலையைத் தமிழிலே கற்பித்தார்; நூலியற்றினர். டாக்டர் ஆனந்த குமாரசாமி எனும் கலையியல் வல்லார் ஆங்கில மொழியில் இந்தியப் பண்பாடு, கலை, சமயம் பற்றிய அரிய ஆராய்ச்சி நூல்களை வரைந்துள்ளார். அவற்றின் மூலம் இந்தியப் பண்பாட்டிற்கு உலகப் புகழையும், கலைகளுக்குப் பெருஞ் சிறப்பையும் தேடித் தந்துள்ளார்.

## இருபதாம் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றில் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். இரு பெரும் உலகப் போர்களைக் கண்டதோடு, உலகின் கீழ்ப்பகுதிகளில் 'காலனி' ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த நாடுகள் விடுதலை பெற்றன. இந்த விடுதலை வேட்கையை மக்களிடையே மேற்கு நாட்டுக் கல்வியும், சிந்தனைத்தாக்கமும் எழுச்சியுறச் செய்தன. பழைய பண்பாட்டைப் புரிந்துகொண்டு உரிமை மிகு புது வாழ்விற்குப் போராடத் தொடங்கிய பல்வேறு நாடுகளில் மொழிப்பற்று, நாட்டுப்பற்று தேசிய உணர்வு பொங்கி வழிந்தன. இதன் விளைவாக வாழ்வின் பல துறைகளிலும் மறுமலர்ச்சியைக் காண மக்கள் துடித்தனர்; துடிக்கின்றனர். இந்த உந்துதல் சக்தியால் இலங்கைத் தமிழர்களும் எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் அடைந்தனர்.

இந் நூற்றாண்டின் முதல் நாற்பது ஆண்டுகள் வரையில் உண்டான இலக்கிய வளர்ச்சியை, மரபுவழிப்பட்ட வளர்ச்சி

எனலாம். 1940 க்கும் 1965 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைப் புதுமை இலக்கியப் பரிசோதனைக் காலம் எனலாம். 1965 க்குப் பிற்பட்ட காலத்தைச் சமுதாய சோசலிச எழுச்சிக் காலமாகக் கருதலாம். இம் மூவகைக் காலங்களுக்கு ஊடே, தமிழுணர்வு எனும் உயிரோட்டம் இடையறாது பாய்ந்து செல்லுவதை நாம் காணுகின்றோம்.

## மரபு வழிப்பட்ட இலக்கியங்கள்

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மட்டக் களப்பு பூபால பிள்ளை என்பவர் 'சீமந்தனி புராணம்,' 'தமிழ் வரலாறு' எனும் நூல்களைப் படைத்துள்ளார். செந்தில் நாத தேசிகர், நல்லூர் 'கந்தசாமிக் கோவை' எனும் நூலை இயற்றியுள்ளார். 'கதிரைமலைப்பள்ளு' 'கதிர்காமவேலர் திருவருட்பா' போன்ற நூல்களைத் திருஞானசம்பந்த உபாத்தியாயர் எழுதியுள்ளார். சிவசம்புப் புலவர், 'கல்லாடக் கலித்துறை,' 'பாண்டித்துரைத் தேவர் நான்மணிமாலை' முதலிய அறுபது சிற்றிலக்கியங்களைப் படைத்துள்ளார். 'காலிக்கதிரேசர் ஊஞ்சல்' போன்ற பல ஊஞ்சல்களை ஏரம்பையர் இயற்றியுள்ளார். பலவகை இலக்கண இலக்கியங்களை எளிய, இனிய உரை விளக்கங்களோடு சிறந்த முறையில் சுன்னாகம் குமார சுவாமிப் புலவர் பதிப்பித்துள்ளார். 'தமிழ்ப் புலவர்சரிதம்', 'சிசுபால சரிதம்' போன்ற நூல்களை இயற்றியதோடு அமையாமல், 'மேக தூதக் காரிகை', 'சாணக்கிய நீதி வெண்பா' போன்ற மொழி பெயர்ப்பு நூல்களையும் அவர் தமிழாக்கம் செய்துள்ளார். பேரம்பலப் புலவர் 'சித்தி விநாயகர்இரட்டை மணிமாலை', 'வண்ணைச் சிலேடை அந்தாதி', 'கடம்பரி அந்தாதி' போன்ற பிரபந்தங்களை இயற்றியுள்ளார். நாகேச ஐயர், 'ஒரு துறைக் கோவை' யாகிய அடைக்கலக் கோவையின் ஆசிரியராவார். பூலோக சிங்க முதலியார் 'திருச் செல்வராசர் காப்பிய'த்தையும், முத்துக்குமாரர் 'கஞ்சன் காப்பிய'த்தையும் இயற்றியுள்ளனர். 'திருச் சதகம்' நன்னெறிக் கொத்து' முதலியவற்றைச் சதாசிவம் பிள்ளையும் படைத்துள்ளார். 'இயேசு பிள்ளைக் கவி'யினைப் பிரான்சிசுப்

பிள்ளை பாடியுள்ளார். பிலிப்புதேமெல்லோ என்பவர் மருதப்பக் குறவஞ்சியை இயற்றியுள்ளார்.

சக்தியின்மீது, சிறப்பாக நயினை தீவிலுள்ள நாகம்மை மீது பாடப்பட்டுள்ள சிற்றிலக்கியங்கள் பலவாகும். நாகமணிப்புலவர் 'நயினை நிரோட்ட யமக அந்தாதி'யையும், முத்துக்குமாரர் 'நாகம்மாள் பதிக'த்தையும், மயில்வாகனப் புலவர் 'நகுலேசர் விநோத விசித்திர கவிப் பூங்கொத்து', 'இணுவைப் பதிற்றுப்பத்தந்தாதி' முதலியவற்றைப் பாடினார். நவநீத கிருட்டின பாரதியார் 'உலகியல் விளக்கம்' எனும்நூலைப் பண்டைச் சங்கத்தமிழ் நடையில் இயற்றினார். பண்டிதர் நல்ல தம்பி என்பவர், 'மணித்திரு நாடும் மரதன் ஓட்டமும்' எனும் நூலைப் படைத்துள்ளார்.

ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள் 'தமிழ் இந்தியா', 'தமிழர் சமயம்', 'தமிழ் இலக்கியஅகராதி', 'தமிழ்ப் புலவர் அகராதி' போன்ற நூற்றுக்கணக்கான நூல்களை இயற்றியுள்ளார்.

நவாலியூரில் வாழ்ந்த சோமசுந்தரப் புலவர் மரபு வழி வந்த பெரும் புலவர். அவர் எண்ணற்ற சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 'தாலவிலாசம்' 'நாமகள் புகழ் மாலை', 'கதிரைச் சிலேடை வெண்பா' முதலியன இங்குக் குறிப்பிடத்தக்கன.

## பல்வகைப் பணி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் விபுலானந்த அடிகளாவர். அடிகளின் 'யாழ்நூல்' எனும் பழந்தமிழ் இசை பற்றிய ஆரய்ச்சி நூலை அறியாத தமிழ் மாணவர் யாருமில்லை. மேற்கு நாட்டு நாடகக் கொள்கைகளையும், நம் நாட்டு நாடகக் கொள்கைகளையும் ஒப்பிட்டு விளக்கும் வகையில் 'மதங்க சூளாமணி' எனும் அரிய நாடகத் திறனாய்வு நூலைப் படைத்துள்ளார். அவர் ஆங்கிலத்தில் தமிழ்ப் பண்

யாட்டைப் பற்றி எழுதிய ஆய்வுரைகள் பல. அவற்றைத் தொகுத்தால் இரண்டு நூல்களாக வெளியிடலாம். இத் தகைய அறிஞர் சிறந்த கவிஞராகவும் விளங்கியுள்ளார். இவரைப் போன்று சிறப்புமிகு தனிப் பாடல்கள் பாடியுள்ள புலவர்கள் பலராவர்.

ஞானப்பிரகாசப் பாதிரியார் திராவிடச் சொற் பிறப்பு ஆராய்ச்சியில் தலை சிறந்து விளங்கிய மொழியியல் அறிஞரா வார். அவர் யாழ்ப்பாண வரலாற்றையும் வரைந்துள்ளார். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' எனும் வரலாற்று நூலை வி. கனகசபைப்பிள்ளை ஆங்கிலத்தில் படைத்து, உலகப்புகழ் பெற்றார். முதலியார் இராச நாயகம் 'பண்டை யாழ்ப்பாண வரலாறு' எனும் நூலை ஆங்கிலத்திலும்தமிழிலும் படைத்து, தமிழருடைய வரலாற்றிற்கு —இலங்கைத் தமிழரின் த் வர லாற்றிற்குப் புத்தொளி ஊட்டினர்.

## உரை விளக்கம்

இக்காலத்தில் பழைய இலக்கண இலக்கியங்களுக்கு உரை விளக்கங்கள் எழுதிய, ஆராய்ச்சி முன்னுரை விளக்கக் குறிப்புகளோடு பதிப்பித்த பெரும் புலவர்கள் மிகப் பல ராவர். பொன்னம்பலம் பிள்ளை, 'வில்லி பாரத'த்திற்கு எழுதியுள்ள உரை விளக்கம் சிறப்புமிக்கதாகும். திருவிளங் கம் என்பவர் சிவஞானசித்தியாருக்கு வரைந்துள்ள பேருரை யும், ம. க. வேற்பிள்ளையின், 'அபிராமி அந்தாதி' உரை போன்றனவும் நம் கருத்தைக் கவருவனவாகும். 'கந்த புரா ணத்தின் அண்டகோசப் படலம்', 'வள்ளியம்மை திரு மணப் படலம்' முதலியவற்றிற்கு வல்லவ வைத்தியலிங்கம் நயமிகு நல்லுரை எழுதியுள்ளார். நவநீத கிருட்டின பாரதி யாரின் 'திருவாசக ஆராய்ச்சிப் பேருரை' தலை சிறந்த விளக்கமாகும். பெரும்புலவர் சி கணேசையர் தொல் காப்பிய உரைகளுக்கு வரைந்துள்ள விளக்கங்களும், ஆராய்ச்சி முன்னுரைகளும், இரகுவமிசத்திற்குத் தந்துள்ள

விளக்கவுரையும் வியப்பூட்டுவன. பண்டித சு. அருளம்பலவ ஞரின் 'பதிற்றுப்பத்து ஆராய்ச்சிப் பேருரையும்', 'திருவாசக விரிவுரையும்' புதுவழிகாட்டிய உலரை விளக்கங்களாகும்.

நா. சிவபாதசுந்தரனாரின் 'புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சிப் புத்துரை' அண்மைக்காலத்தில் வெளி வந்த அரியதோர் உரைவிளக்கமாகும்.

## ஆராய்ச்சி நூல்கள்

மேற்கு நாட்டுக் கல்விமுறையில் தமிழைப் பயிற்ற அறி ஞர்கள் பலர் அரிய தொண்டாற்றியுள்ளனர். பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் 'தமிழ் இலக்கிய வரலாறு', 'தமிழ் உரைநடை வரலாறு' சிறப்புமிக்கன. பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்களின் அரும்பணி நம் கருத்தைக் கவருவ தாகும். மேலைநாட்டுத் திறனாய்வுக் கலையைத் தமிழ் இலக்கி யத்திற்குப் பொருத்தி ஆராய்ந்த அறிஞர் பலராவர்.

டாக்டர் க. கைலாசபதியின் "தமிழ் புறப்பாடல்கள்" (Tamil Hervic Poetry) என்று ஆங்கிலத்தில் வெளியிடப் பட்ட ஆராய்ச்சி நூல் உலகப் புகழ்பெற்றதாகும். டாக்டர் வித்தியானந்தத்தின் 'தமிழர் சால்பு' சிறப்புடைய வர லாற்று நூலாகும். டாக்டர் சேவியர் தனிநாயக அடிகளின், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (Nature in Ancient Tamil Poetry)' எனும் நூலும், 'தமிழ் நாகரிகமும் பண் பாடும்' எனும் ஆங்கிலத் தொகை நூலும் சிறப்புமிக்கன. அவர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தொடங்கிய தமிழ்க்கலை (Tamil Culture) எனும் முத்திங்கள் இதழும், பின்னர் நிறுவிய தமிழ்க்கலை மன்றமும் (Academy of Tamil Culture) உலக அரங்கில் தமிழிற்குத் தனி இடத்தைத் தேடிக்கொடுத்ததோடு, தமிழ் மொழியைப் பண்டைச் செம் மொழிகளுள் (Classical Languages) ஒன்று எனும் எண் ணத்தை நிலைநாட்டின. இதன் விளைவாக உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு முன்வந்து, முதல் மாநாட்டைக்

கோலாலம்பூரில் நடத்திக்காட்டிய பெருமைக்குரியவர் பேராசிரியர் தணியநாயக அடிகளாவர். தமிழகத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்த மூவருள் அடிகள் ஒருவர் என்பதையும் தமிழுலகம் என்றும் மறவாது.

## நாட்டுப் பாடல்

இலங்கையில் வழங்கும் நாட்டுப் பாடல்கள் வளமும் சிறப்பும் உடையன; அந்த நாட்டு மக்கள் வாழ்க்கையையும் மனப்போக்கையும் படம் பிடித்துக் காட்டுவன. அவற்றுள் கண்ணகியின் கதை பல்வேறு புதுமைப் பண்புகளோடு பல நாட்டுப்பாடல் நாடகங்களாக வடிவெடுத்துள்ளதைக் காணுகின்றோம். ஈழத்தின் ஒப்பாரிப் பாடல்களும் தாலாட்டுப் பாடல்களும் தனிச்சிறப்புடையன.

## புத்திலக்கியப் பரிசோதனைகள்

மேற்கு நாடுகளின் கல்வித்தாக்கத்தால் இந்தியாவிலும், இலங்கையிலும் புதிய இலக்கிய வகைகள் பல தோன்றின. அவை புதினம் (Novel), சிறுகதை (Short Story) போன்றனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே 1890இல், எஸ். இன்னாசித்தம்பி, 'ஊசோன் மாலத்தை கதை' எனும் புதினத்தை எழுதியுள்ளார். இதற்கு முன்பே, 1885இல், அசன் பே சரித்திரம் எனும் கதை நூலைச் சித்தி லெவ்வை மரைக்காயர் இயற்றியுள்ளார். த. சரவணமுத்துப் பிள்ளையின், 'மோகனாங்கி' (1895) போன்றவை சென்ற நூற்றாண்டில் தோன்றிய புதினங்களாகும். அது முதல் 1940 வரையில் ஈழத்துத் தமிழர் சிறுகதை, புதினப் படைப்பு முயற்சிகளில் ஈடுபட்டனர். 1914இல் மங்களம் தம்பையா எனும் கிறித்துவப் பெண்மணி 'நொறுங்குண்ட இதயம்' எனும் புதினத்தைப் படைத்துள்ளார். 1920-க்கும் முப்பதுக்கும் இடையே செ. செல்லம்மாள் பல புதினங்களைப் படைத்துள்ளார். அவற்றுள் 'இராசதுரை' சிறப்புமிக்கது. ஈழத்தின்

முதல் பெண் புதின ஆசிரியையாக இந்த அம்மையார் போற்றப் படுகிருர்.

## இடைக்காடர்

பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுரைப் போன்று பேராசிரியராகவும், எழுத்தாளராகவும், தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிப் பரப்பும் புனைகதை ஆசிரியராகவும் சிறப்புற்று விளங்கியவர் இடைக்காடர் எனும் புனைபெயருடைய எழுத்தாளராவார். கதைப்பண்புகளில் கருத்தைக் குழைத்துச் சுவைபடத் தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டும் புதினங்களை இடைக்காடர் படைத்துள்ளார். அவருடைய படைப்புகளுள் நீலகண்டன், சித்தகுமரன் எனும் புதினங்கள் சிறப்புடையன.

## நெடுங்கதைகள்

அ. நாகலிங்கம் என்பவர் சாம்பசிவம், ஞானமிர்தம் அல்லது 'நன்னெறிக் களஞ்சியம்' எனும் புதினத்தைப் படைத்துள்ளார். 1929ஆம் ஆண்டில் சு. இராசம்மாள் எனும் அம்மையார் 'சரஸ்வதி அல்லது, காணமற்போன பெண்மணி' எனும் புதினத்தை வெளியிட்டார். இது ஆவலைத் தூண்டும் மர்மநாவல் போன்றது.

## புதுமைப் பொலிவு

1930 ஆம் ஆண்டு அளவில் மா. சிவராமலிங்கம் பிள்ளை, 'பூங்காவனம்' எனும் புதினத்தைப் படைத்துள்ளார். முப்பதுகளும் நாற்பதுக்கும் இடைப்பட்ட காலத்தில் சமுதாய சிக்கல்களைப் பிரதிபலிக்கும் புதினங்கள் இலங்கையில் படைக்கப்பட்டன, இதன் பயனுகப் புதினங்கள் புதிய பொலிவையும், வலிவையும் பெறத் தொடங்கின. ஈழ கேசரி நாளிதழில் தொடர்கதையாக எழுதப்பட்டுப் பின்னர், நூலாக்கப்பட்ட 'பவளகாந்தன் அல்லது கேசரி விசயம்', 'அருணேதயம் அல்லது சிம்மக் கொடி' சிறப்பு மிக்க துப்பறியும் நாவல்களாகும். 'செல்விசரோசா

அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி' எனும் செல்வநாயகத்தின் புதினம், ஈழத்தின் புதின வரலாற்றில் சமுதாய சீர்திருத்தப் போக்கினைப் புகுத்தியது. வீரகேசரி பத்திரிகை ஆசிரியராக இருந்த நெல்லையா, அப்பத்திரிகையில் தொடர்கதைகளாக வெளியிட்டுப் பின்னர் 'இரத்தினவளி அல்லது காதலின் மாட்சி', 'சோமாவதி அல்லது இலங்கை இந்திய நட்பு' எனும் புதினங்களாக வெளியிட்டுள்ளார்.

''செல்வநாயகம், நெல்லையா ஆகியோரின் நாவல்களின் தோற்றத்தோடு, ஈழத்துத் தமிழ் நாவல்களின் வரலாற்றில், அழகுணர்ச்சி, கற்பனலங்காரம், தனி மனித நல்லொழுக்கம், வீரதீர பிரதாபம் இவற்றையே பெரும்பாலும் சுற்றிச் சுழன்ற ஒரே வகையான கலாவினோத மனோரஞ்சித நாவல்களின் காலக்கட்டம் முற்றுப் பெற்று, ஒரு புதிய காலக் கட்டம் உதயமாகிறது. 1940 ஆம் ஆண்டு வரை ஒரு ஒழுங்குப் பிரமாணமாக ஒற்றைச் சுவடு கட்டிச் சென்ற ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியப் பாதை, அந்த ஆண்டிலிருந்து பல கிளைகளாகப் பிரிந்து செல்லுகிறது.''

தமிழ் நாட்டில் முனைப்பாக தத்தம் முத்திரையைப் பதித்து எழுதியவர்களின் புதினங்களையும், மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிறமொழிக் கதைகளையும், படித்துப் பழகியவர்கள், அவற்றின் செல்வாக்கினால் ஆட்கொள்ளப்பட்டும், அவற்றின் தனித்தன்மைகளை உணர்ந்தும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்புமிகு தனித்தன்மையை ஊட்டியும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள், நிலைத்து நிற்கக் கூடிய தரமான புதினங்களை நாற்பதுக்கும் அறுபத்தைந்திற்கும் இடையில் படைக்கலாயினர்.

## புதினங்களின் நோக்கும் போக்கும்

1940 ஆம் ஆண்டு முதல் சிறந்த நாவல்களை எழுத முயன்றவர்கள் பலராவார். அவர்களுள் 'கசின்' எனும் புனைபெயருடைய சிவகுருநாதன், கனக-செந்திநாதன், வரதர், சம்பந்தன், சுயா, ஜே. எஸ். இரவீந்திரா ஆகி

யோர் புத்திலக்கியப் பரிசோதனையில் முனைந்து நிற்கின்றனர். 'கசின்' என்ற சிவகுருநாதன் மிகச் சாதாரண கதைக் கரு ஒன்றை மையமாகக் கொண்டு, நடுத்தர குடும்பத்தினரையும் நாட்டுப்புற மக்களையும் பாத்திரங்களாக அமைத்து, நகைச்சுவை ததும்பப் புதினம் படைப்பதில் வல்லவர். அவருடைய படைப்புகளுள், 'சகடயோகம்' 'இராசமணியும் சகோதரிகளும்' 'கற்பகம்,' 'சொந்தக் கால்' போன்றவை சிறப்புமிக்கன. இவை யாவும் 'ஈழகேசரியில்' தொடர் கதைகளாக முதலில் வெளிவந்தவையாகும்.

தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தாக்கம் கணிசமான அளவிற்கு இலங்கை எழுத்தாளர்களையும் பாதித்தது. தம் நாட்டு மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டு, பாட்டாளி மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் புகழ்மிகு கனக-செந்திநாதன் பல புதினங்களைப் படைத்தள்ளார். அவற்றுள் 'விதியின் கை', 'வெறும்பானை', 'உபகுப்தன்' போன்றவை அவருடைய தனித்தன்மையை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

'மறுமலர்ச்சி' எனும் இதழில், வரதர் என்பவர் எழுதி வந்த 'வென்று விட்டாயடி இரத்னு' எனும் நெடுங்கதை புனைகதை உலகில் அவருடைய பெயரைப் பொறித்தது. அவருடைய 'வாழ்க நீ சங்கிலி மன்னன்' என்னும் வரலாறு தழுவிய புனைகதை அவருக்குப் புகழைத் தேடித் தந்தது.

ஜே. எஸ். இரவீந்திரா எளிய நடையில், மென்மையான உணர்ச்சிகளின் அலைபாய்வும், உள்ளத்தை நெகிழச் செய்யும் காதல் உறவுச் சிக்கல்களும், நிகழ்ச்சிகளும் நிறைந்த புதினங்களைப் படைப்பதில் வல்லவர். இதற்கு நல்லதொரு சான்றாகக் 'காதல் உள்ளம்' விளங்குகிறது.

### தொடர் கதைகள்

வாசகர் தொகையைப் பெருக்குவதற்காக, ஈழத்து நாளிதழ்களும், வார இதழ்களும் தொடர் கதைகளைத்

தொடர்ந்து வெளியிட்டன. அதற்கேற்ற கதைகளை எழுதி யதன் மூலம் புகழ்பெற்ற எழுத்தாளர் சிலர் இக்கலக் கட்டத்தில் எழுச்சியுற்றனர். யாழ்ப்பாணத்துத் தேவன் கே. வி. எஸ். வாஸ், அ. செ. முருகானந்தன், வே. தில்லை நாதன், க. கணபதிப்பிள்ளை, வி. லோகநாதன், க சச்சி தானந்தன், க. நாகப்பு, த. சண்முக சுந்தரம், சுலோசனு, ஈழத்து மாயாவி, நவம், எம், எ. அப்பாஸ், டி. எம். பீர் முகம்மது, சிதம்பரநாத பாவலர், இராச. அரியரத்தினம் ஆகியோர் இத்தகைய எழுத்தாளர்களாவர்.

'கேட்டதும் நடந்ததும்' எனும் ஈழத்துத் தேவனின் புதினம், ஈழகேசரியில் வெளிவந்து, பிறகு நூல்வடிவம் பெற்றது. இப்புதினம் உளவியல் பண்புகளை வெளிப்படுத் தும் வகையில் அமைந்தது. கே. வி. எஸ். வாஸ் துப்பறியும் புதினங்களின் பாணியில், 'மலைக் கன்னி,' 'உதய கன்னி' போன்ற பல புதினங்களைப் படைத்துள்ளார்.

சிறுகதையுலகில் தம் பெயரைப் பொறித்து விட்டு அ. செ. முருகானந்தம் 'புகையில் தெரிந்த முகம்,' எனும் சிறப்புமிகு குறுங்கதையைப் படைத்துப் பொன்றுப் புகழை 1950 அளவிலேயே பெற்றூர் இவர் 'பீஷ்மன்' எனும் புனை பெயரில், வேறு சில புதினங்களையும் படைத்துள்ளார். 'அனிச்ச மலரின் காதல்' எனும் புதினத்தை பண்பாட்டு விளக்க நாவலாக வே. தில்லைநாதன் படைத்துள்ளார்.

பேராசிரியர் டாக்டர் கணபதி பிள்ளை, நாடகங்கள் பல வற்றைப் படைத்தவராவர். அவை யாழ்ப்பாண மக்களின் பேச்சு வழக்கை பிரதிபலிப்பனவாகும், யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், 'பூஞ்சோலை', 'வாழ்க்கையின் விநோதங்கள்' எனும் புதினங் களையும் அவர் இயற்றியுள்ளார்.

## நினவோடை உத்தி

நினவோடை உத்தியைப் பயன்படுத்தி காதல், கடமை, அறம், தத்துவம் பற்றிய எண்ணவெழுச்சிகளைச் சித்திரிக்.

கும் வகையில், கலைநலம் கமழ வி. லோகநாதன் என்பவர், ‘பிரேமாஞ்சலி’ எனும் சிறப்புமிகு சமூக நாவலைப் படைத்துள்ளார். ‘எனக்குத் தொழில் கவிதை’ என்று நாளும் நல்ல தமிழ்க் கவிதைகளை இயற்றிப் புகழ் பெற்ற க. சச்சிதானந்தம் ‘அன்னபூரணி’ என்ற புதினத்தை அளித்துள்ளார். க. நாகப்புவின் ‘ஒன்றரை ரூபாய்’, ‘ஏழையின் காதல்’ எனும் புதினங்கள் இக்காலக் கட்டத்தில் எழுந்தவையாகும்.

சுதந்திரன் எனும் பத்திரிகையும் புதின வளர்ச்சிக்கு ஊக்கம் தந்துள்ளதைக் காணுகிறோம். அவ்விதழில், த. சண்முக சுந்தரம் ‘ஆசை ஏணி’ எனும் தொடர்கதையாக எழுதிய புதினமும், சுலோசனா எழுதிய ‘வாடா மலரும்’, மாயாவியால் எழுதப்பட்டுப் பின்னர் நூலாக வெளிவந்த ‘ரஞ்சிதம்’, நவம் எழுதிய ‘மிஸ். மனோகரி’ எனும் புதினமும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

## துப்பறியும் புதினங்கள்

சிறிது காலம் இலங்கையில் வாழ்ந்த எம். எ. அப்பாஸ், ‘துரோகி’, ‘கள்ளத்தோணி’ முதலிய நாடகங்களைப் படைத்ததோடு, ‘இவளைப்பார்’, ‘மூன்று பிரேதங்கள்’, ஒரே ரத்தம்’, ‘சிங்களத் தீவின் மர்மம்’ எனும் துப்பறியும் புதினங்களையும் படைத்துள்ளார்.

## பேச்சுத் தமிழில் புதினம்

மலைநாட்டுப் பேச்சுத் தமிழில், டி.எம். பீர் முகமது என்பவர் ‘ஹமீதா பானு’ எனும் புனைபெயரில், ‘கங்காணி மகள்’, ‘சதியில் சிக்கிய சலீமா’ போன்ற புதினங்களை வெளியிட்டுள்ளார். இவை வட்டார வழக்குப் புதினங்களாகப் பொலிவுறுகின்றன. இராச அரியரத்தினம் இக்காலத்திலேயே ‘தங்கப் பூச்சி’ எனும் புதினத்தை எழுதியுள்ளார். வெள்ளி வீதியார், தினகரனில் ‘சிங்கை ஆரியன்’ எனும்

வரலாற்று நெடுங்கதையையும், வே. சு. ப. நாதனின் 'கபட நாடகம்' என்னும் கதையும் குறிப்பிடத்தக்கன.

## வடிவமும் உள்ளடக்கமும்

1956க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில், ஈழத்துப் புதின வளர்ச்சியில் பல புதிய போக்குகள் பரிசோதனை செய்யப்பட்டன. இக்காலக் கட்டத்திலேயே இலங்கையில் தமிழ்ப் புதினம் நன்முறையில் வடிவமும், உள்ளடக்கமும் பெற்றுத் திகழுகின்றன. 'இளங்கீரன்' எனும் புனைபெயர் கொண்ட இசுலாமியத் தோழர் சுபைர் என்பவரின் புதினங்களே இக்காலக் கட்டத்தில் கொடிகட்டிப் பறந்தன. எண்ணிக்கையால் இருபதுக்கு மேற்பட்ட புதினங்களை அவர் படைத்து இருக்கின்றார். அவருடைய புதினங்களில் வடிவ அமைதி, பொருளமைதி, நடையமைதி எனும் மூன்றும் நன்கு முதிர்ச்சியுற்று, வலிவும் பொலிவும் பெற்றுள்ளன. 'ஒரே அணைப்பு', 'பைத்தியக்காரி', 'மரணக்குழி', 'நீதிபதி', 'எதிர்பார்த்த இரவு', 'நீதியே நீகேள்!', 'தென்றலும் புயலும்' போன்ற புதினங்கள் இறுக்கமான வடிவமும் பொருட் சிறப்பும் நடைநலமும் வாய்ந்தன. இவற்றில் 'நடப்பியல் பாங்கு' (Realism)ஏறுநடை போடுவதைக் காணலாம். 'நீதியே நீகேள்!' எனும் புதினம் பொருளாதாரக் குறைபாடுகளைச் சுட்டி, கலப்பு மணத்தைப் போற்றுகிறது. இப்புதினத்தின் மூலம் அவர் சிறப்புமிகு புதின ஆசிரியன் எனும் தகுதியைப் பெற்றார்.

## சிறுகதை ஆசிரியர் படைத்த புதினங்கள்

சிறுகதைத் துன்றயில் கணிசமான அளவிற்கு எழுதிக் குவித்துள்ள எழுத்தாளர்கள் சிலர், 1961ஆம் ஆண்டை ஒட்டி, புதினத்தைப் படைப்பதில் தங்கள் கருத்தினைச் செலுத்தலாயினர். சொக்கன் 'மலர்பலி', 'செல்லும் வழி இருட்டு' போன்ற புதினங்களைப் படைத்தார். வ. அ. இராசரத்தினம் 'கொழு கொம்பு', ஈழகேசரியிலும், 'துறைக்

காரன்' எனும் கதை 'ஈழநாட்டிலும்' முதலில் வெளியிடப் பட்டுப் பின்னர் நூல்களாக்கப்பட்டன.

**ச வி. வேலுப்பிள்ளை,** தினகரனிலும், ஈழகேசரியிலும் வெளியிட்ட 'வாழ்வற்ற வாழ்வு', 'வீடற்றவன்' எனும் புதினங்கள் மலைநாட்டு மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டன. சிற்பி' எனும் 'கலைச்செல்வி'யின் ஆசிரியர், 'உனக்காகக் கண்ணே!' எனும் நெடுங்கதையையும், 'உதயணன்', 'மனப்பாறை' எனும் புதினங்களையும் கலைச் செல்வியில் தொடர்கதையாக எழுதிப் பின்னர் நூல்களாக வெளியிட்டுள்ளார். 'இதயவானிலே' எனும் **உதயணனின்** புதினமும் இக்காலக்கட்டத்தில் வெளிவந்ததாகும்.

பொன்னுத்துரை பல புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள் ளார். புதிய, புரட்சிகரமான கதைக்கருவுகளைத் தேடிக் கையாளுவதிலும், பாலுறவு சீர்கேடுகளைச் சித்தரிப்பதிலும் இவர் துணிச்சல் மிக்கவராவர். சில நிலைகளில் வருணிக்கக் கூடாதவற்றை அருவருப்பு உண்டாகும் வகையில் 'பச்சை யாகப்' பேசும் பாங்குடையவர். ஆனால், இவற்றின் ஊடே தனிமனிதனின் துன்பத்தையும், மனப்போராட்டத்தையும் மனிதாபிமான உணர்வோடு சித்தரிப்பதில் இவர் வல்லவர். இவருடைய 'தீ' எனும் புதினம் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

தினகரனில் வெளியிடப்பட்ட 'வண்ணமலர்', வீரகேசரி யில் வந்த 'மத்தாப்பு' எனும் பலர் ஒன்றுகச் சேர்ந்து உருவாக்கிய புதினங்கள் புதிய முயற்சியேயாகும். கச்சாயில் இரத்தினம் என்பவருடைய 'அலைகள்', 'வன்னியின் செல்வி', 'அன்பு எங்கே?', 'விடிவு நோக்கி' எனும் புதினங்களும், அருள் செல்வ நாயகத்தின் 'மாலதியின் மனோரதம்' எனும் புதினமும், குறிப்பிடத் தக்கன. இவை அல்லாமல் அரை குறை வடிவ அமைதியுடன் வெளிப்பட்டப் புதினங்களும் பல உள. அவற்றை விரிப்பின் இடம் காணுது என அஞ்சு கின்றேன்.

## சிறுகதை இலக்கியம்— முன்னோடிகள்

